# மனைவிக்கு மரியாதை




ராஜம் பதிப்பகம்

இணையதளத்தில் banukumar.in

# மனைவிக்கு

# மரியாதை

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

# பொருளடக்கம்


என்னுரை

1. அத்திரியும், அனுசூயாவும்
2. பெண் எனும் பெருநிதி
3. சிறப்புணர்ந்த பெண் மதிப்பு
4. வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது யார்?
5. திருமணம்
6. ஒருவனுக்கு ஒருத்தி
7. மனைவி என்பவள்...
8. கணவன் மனைவி உறவு
9. குடும்பத்தின் விளக்கு மனைவி
10. மனைவியின் சிறப்பு.
11. தம்பதிகளின் நட்பு.
12. மனைவியின் முதன்மை
13. மனைவிமார்களே சிந்தியுங்கள்.
14. வாழ்க்கைத் துணையை வாழ்த்தி வாழ்வோம்
15. .மருமகள்களுக்கு ஒரு தந்திரம்
16. மனைவியின் மனையாட்சி.------- -
17. மனைவி சொல்லே மந்திரம்
18. மனைவியின் இல்லற நோன்பு
19. மனைவி மந்திரி மட்டுமல்ல ! நல்ல மருந்தும்கூட
20. ஆனந்தம் விளையாடும் வீடு
21. மனைவியின் தியாகம்
22. மனைவிக்கு மரியாதை
23. *மனைவி* நலம் பேணும் விழா

# 1. அத்திரியும் அனுசூயாவும்

"உயிரினுக்கு உயிராய் இன்பம் ஆகிடும்

உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா" - பாரதியார்

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருப்பாள். என்னுடைய வெற்றிக்கும் என் மனைவிதான் பின்புலமாக இருக்கிறார். அதை உண்மையாக்கும் விதத்தில், வரலாறு நமக்கு பலரை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ராமகிருஷ்ணருக்கு ஒரு சாரதா தேவியும்
- விவேகானந்தருக்கு ஒரு நிவேதிதையும்
- அத்திரிக்கு ஒரு அனுசூயாவும்
- வீர சிவாஜிக்கு அவரது தயார் ஜிஜாபாயும்
- தாமஸ் ஆல்வா எடிசனுக்கு தாயார் நான்சி எடிசனும்
- பாரதிக்கு ஒரு செல்லம்மாளும்
- அரவிந்தருக்கு ஒரு அன்னையும்
- வேதாத்திரி மகரிசிக்கு ஒரு அன்னை லோகாம்பாளும்
- பானுகுமாருக்கு ஒரு பானுமதியும்

என பெண்கள் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.



(அன்னை லோகாம்பாளுடன் அருட்தந்தை வேதாத்திரி)

என் வெற்றிக்குப் பின்னால் என் மனைவிதான் இருக்கிறார். அதனால்தான் "மனைவிக்கு மரியாதை" என்ற இப்புத்தகத்தைப் பதிவு செய்துள்ளேன்.

வேதாத்திரியம் உருவெடுக்க உறுதுணையாக இருந்த அன்னை லோகம்பாளின் பிறந்த நாளான ஆகஸ்டு 30 "மனைவி நல வேட்பு நாளாக" அருட்தந்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மனைவிக்கு மரியாதை செலுத்தம் நாளாக ஆகஸ்டு 30 ஆம் நாளை ஆண்டு தோறும் கொண்டாடி வருகிறோம். கட்டிய மனைவிக்கு மரியாதை தர வேண்டும்.

கட்டிய மனைவியை மதிக்காதவன் வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை.மகாபாரதத்தில் தர்மராஜருக்கு ஈடான பாத்திரம் இல்லை.

அவர் மிகவும் பொறுமையானவர் தான்.பரமாத்மா கிருஷ்ணனுக்கே அவர் மைத்துனர்.

தர்மம் தவறி காரியம் செய்யாத மாமன்னர். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை தர்மம் செய்வதற்கென்றே ஒதுக்கியவர்.

அப்படிப்பட்ட மகானுபாவன், ஒரு இக்கட்டான நிலையில், அரச தர்மத்திற்கு உட்பட்ட சூதில் இறங்கினார்.

அது அவரது உரிமை. ஆனால், சில எல்லைகளை மீறி தன் மனைவியை வைத்து சூதாடி விட்டார்.

விளைவு திரவுபதி பலரது முன்னிலையில் துகிலுறியப்பட்டு அவமானப்படுத்தப்பட்டாள்.

விளைவு அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. கட்டிய மனைவியை சூதாட்டத்தில் பந்தயப் பொருளாக வைத்தது பெரும்பாவம்.

அந்த பாவத்தின் பலனை அவர் அனுபவித்தார். அது மட்டுமா? தாய்க்கு சமமாக மதிக்க வேண்டிய சொந்த அண்ணியை துகிலுறிந்த மைத்துனர்களும் அழிந்தார்கள்.

ஒரு பெண் அவமானப்படுத்தப்படும் நாடு வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை.

ராமாயணத்தில், ராமச்சந்திர பிரபு ஏகபத்தினி விரதனாக, சீதாவே கதியென இருந்தார். அதனால் தான் இன்றும் அனைவர் வாயிலும் ஸ்ரீராமஜெயம் மந்திரம் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அத்திரி மகரிஷியும் இப்படிப்பட்டவர் தான். இவர் பிரம்மாவின் மனதில் இருந்து தோன்றியவர்.

தனக்கு இப்படி சில புத்திரர்கள் இருந்தால் எப்படி இருக்கும் என பிரம்மா கற்பனை செய்தாராம்.

அவ்வாறு மனதில் தோன்றிய கற்பனைகளை குழந்தைகளாக வடித்தார். அந்த குழந்தைகளே மரீசி, ஆங்கிரஸர், அத்திரி, புலஸ்தியர், புலஹர், கிரது ஆகியோர்.



இவர்களில் அத்திரி மகரிஷியின் மனைவி அனுசூயா.இவளை அனஸூயா என்று சொல்வதே பொருத்தமானது. அனஸூயா என்ற சொல்லுக்கு கோபப்படாதவள் எனப் பொருள்.

இவள் நல்ல குணமுள்ளவர்களை மட்டுமின்றி, மோசமான குணமுள்ளவர்களையும் கூட புகழ்ந்து பேசுவாள். அவர்களைக் குறை சொல்ல மாட்டாள்.

யாரேனும் ஏதாவது குற்றம் குறை செய்து விட்டாலும், அதை பிறரிடம் சொல்லிக்காட்ட மாட்டாள். அதாவது, இந்த காலத்து பெண்களில் 99 சதவீதம் பேரிடம் இல்லாத குணம் இது.

இப்போதெல்லாம் தன் வீட்டில் என்ன நடக்கிறது என்பதை விட, பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிவது தான் ஆண், பெண் இருபாலரின் வேலையாகவும் இருக்கிறது.

இந்த துர்க்குணங்கள் எல்லாம் இல்லாமல் நல்ல பெயர் எடுத்திருந்தாள் அனுசூயா.

கணவரின் பாத தீர்த்தத்தை தெளித்து, திருமால், பிரம்மா, சிவன் ஆகிய மூவரையும் குழந்தைகளாக மாற்றிய பெருமை மிக்கவள் இவள்.

இதன் பொருள் என்ன தெரியுமா? நல்ல குணமுள்ளவர்களிடம், அவர்களது கள்ளமற்ற உள்ளத்தை பாராட்டி, களங்கமில்லாத குழந்தை உருவில் இறைவன் வந்து விடுகிறான் என்பதே.

ராமனும் சீதாவும் கானகம் வந்ததும் அத்திரியை சந்திக்கின்றனர். அவர்களை ஆசிர்வதிக்கும் அத்திரி, சீதாராமரிடம் தனது மனைவியின் புகழ் பாடுகிறார்.

ராமா! என்னை வணங்கி என்னப்பா பலன்? ஆஸ்ரமத்திற்குள் என் மனைவி அனுசூயா இருக்கிறாள்.

அவளைப் போய் தரிசிக்கவும். அவள் செய்த தவத்தை விட சிறந்த தவத்தை இதுவரை எந்த மகாமுனிவனும் செய்யவில்லை.

மழையே வருக என அவள் சொன்னால் போதும். அவள் மீண்டும் சொல்லும் வரை வருணபகவான் அவள் சொன்ன இடத்தை விட்டு அசையமாட்டான். அப்பேர்ப்பட்ட சக்தி மிக்கவள்.

ஒருமுறை எங்கள் பகுதியில் பத்து ஆண்டுகளாக மழை இல்லை. பஞ்சம், பசியால் மக்களும், மாக்களும் இறந்தனர். அந்த நேரத்தில் கங்கை நதியை இங்கே கொண்டு வந்தாள் அனுசூயா.

இவள் செய்த புண்ணியத்தை கங்காதேவிக்கு தாரை வார்த்து, மற்றவர் வாழ வகை செய்தாள். இதிலிருந்து அவள் எப்பேர்ப்பட்ட மகா புண்ணியவதி என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்.

அவளது தோழிகள் ஏதாவது காரணத்தால் அவளைப் பார்க்க வந்து கொண்டே இருப்பார்கள். இவளிடம் யோசனை கேட்டு பலன் அடைவார்கள்.

ஏனெனில், இவள் நல்லதை மட்டுமே செய்வாள்; நல்லதையே பேசுவாள்.

ஒருமுறை ஒரு முனிவர் அவளது தோழியை சபித்து விட்டார். ஏ பெண்ணே! உன் கணவன் நாளை பொழுது விடிவதற்குள் சாவான், என்பதே அந்த சாபம்.

அந்தப் பெண் அனுசூயாவிடம் கதறினாள். நாளை காலை நான் வெண்புடவை அணிந்து விடுவேனடி, என் தலையிலுள்ள மலர்கள் பறிக்கப்படுமடி, என் வளையல்கள் உடைக்கப்படுமடி, பொட்டு வைக்கக்கூட இயலாத பாவியாவேனடி, என் குழந்தைகள் அப்பா, அப்பா என அலறுமேடி,

என் உயிர்த்தோழியே! இந்த சிரமத்திலிருந்து எப்படியடி நான் தப்பிக்கப்போகிறேன் என அழுது துடித்தாள்.

என் அனுசூயா என்ன செய்தாள் தெரியுமா ராமா! ரிஷி சொன்னதை பொய்யாக்கி விட்டாள்.

தோழி! கவலை கொள்ளாதே. விடிந்தால் தானே உன் கணவன் இறப்பான். அந்த ரிஷி இந்த சாபத்தை விலக்கிக் கொள்ளும் வரை இனி உலகத்தில் உதிக்கவே கூடாது என சூரியனுக்கு உத்தரவு போட்டு விடுகிறேன். சூரியன் என்னை மீற மாட்டான்.

அந்த ரிஷியின் சாபம் என்ன செய்து விடுகிறதென பார்ப்போம் என்றாள். அதுபோலவே சூரியன் பத்து நாட்களாக உதிக்கவில்லை.

ஊரெங்கும் நோய் நொடி பரவியது. இருள் சூழ்ந்தது. தேவர்கள் கலங்கினர். அவர்கள் சாபம் கொடுத்த முனிவரிடம் ஓடினர்.

உலக இயக்கமே நின்று போவதற்கு காரணமாக அவரது சாபம் அமைந்து விட்டதை சுட்டிக்காட்டினர்.

அனுசூயாவின் பெருமையை உணர்ந்த முனிவர், சாபத்தை விலக்கிக் கொண்டார்.

விதியையே தன் மதியால் வென்றவள் என் மனைவி. அவளிடம் ஆசி பெற்றால், சமயோசித புத்தியுடன் நடந்து கொள்ளலாம். உனக்கு வெற்றி மேல் வெற்றி கிட்டும், என்றார்.

**அத்திரியும், அனுசூயாவும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர்கள். கதையை விட்டு விடுவோம். கருத்திற்கு வருவோம். கதையில் வந்த கருத்தைப் பின்பற்றி வாழுங்கள்.**

மனைவியைப் பற்றி பிறரிடம் குறை சொல்லாதீர்கள். குணத்தில் குறையுள்ளவளாக இருந்தாலும் கூட, நாலு பேரிடம் அதை வெளிச்சம் போட்டுக் காட்டாமல், உங்களுக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். அவளுக்கு மதிப்பளியுங்கள்.

அத்திரி மகரிஷி தன் பத்தினியைப் பற்றி ராமனிடம் பெருமையாகச் சொன்னது போல, அவளது சமையலைப் பற்றியோ, பணித்திறன் பற்றியோ, அவளுக்கு தெரிந்த கலைகள் பற்றியோ பிறரிடம் சொல்லுங்கள்.

ஆண்டுதோறும் மனைவிக்கு ஒரு நாளைக் கொடுத்திருக்கும் வேதாத்திரி மகரிசியின் ”மனைவிநலம் பேணும் நாளினை” மனைவியர் தினமாக கொண்டாடுங்கள்.

இதென்ன புதுமையாக இருக்கிறதென்று நாம் நினைக்கலாம். பெண்மையைப் போற்றுபவர்களுக்கு இது புதுமையல்ல.

உறவு முறையைப் பாராட்டும் வகையில் அன்னையர் தினம், தந்தையர் தினம், குழந்தைகள் தினம், கணவர் தினம் என்று உலகம் முழுவதும் கொண்டாடுகின்றனர்.

ஆனால் “மனைவியர் தினம்” என்று ஒரு நாட்டில் கூடக் கொண்டாடுவதில்லை. ”மனைவிக்கு மதிப்பு இவ்வளவு தானா?” என்று வேதனைப்படுகின்றார் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி.

நூலின் உள்ள வாருங்கள். மனைவிக்கு மரியாதை தரும் அவசியத்தையும் அதனால் வரும் ஆனந்தத்தையும் அள்ளிப் பருக உள்ளே நுழையுங்கள். வாழ்க வளமுடன்.

வழக்கமான

வணக்கங்களுடன்.,

- பானுகுமார்

Mail Id. banukukmar.v@gmail.com

# 2. பெண் எனும் பெருநிதி

உலகம் முழுவதிலுமுள்ள மதங்கள் ஆணுக்கு இணையாகப் பெண்ணைப் போற்றவில்லை என்பது வரலாற்று உண்மை.

"இந்தியா பெண்களைக் கோட்பாட்டளவில் எப்போதுமே மேம்படுத்தி வைத்திருந்தது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே ஆன்மீக சமத்துவத்தை நிலை நிறுத்தியது.

நடைமுறையில் இந்த மேலான கோட்பாட்டை நிலை நிறுத்தத் தவறிவிட்டது" என்பார் சுவாமி ரங்கநாதானந்தர்.

ஆனால் இன்றைய பெண்ணீயம் தேவையற்ற மரபுகளை மறுதலித்து. தற்காலச் சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்புடைய ஆன்மீக மதிப்பீடுகளைத் தேடுகின்றது.

வேதாத்திரி மகரிசிகளின் "வாழ்க வளமுடன், வாழ்க வையகம்" என்ற அருள்வாக்கு பெண்ணினத்தையும் உள்ளடக்கிய பெருநோக்குடையது.

"பெண்ணியம்" என்ற முத்திரையில்லாமலேயே பெண்ணிய வாதம் பேசகின்ற பெருந்தகையாளர் வேதாத்திரி மகரிசி.

பெண் எனப்படுபவள் தாய், தமக்கை, மனைவி, மகள் என்று ஒவ்வொரு அணின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு நிலையில்

வருகிறாள். பெண் எனப்படுபவள் அத்தனை முக்கியத்துவம வாய்த்தவளாக இருக்கிறாள்.

## காலந்தோறும் பெண்மை

பெண்களைப் பற்றியும் பெண்மையின் சிறப்புகளைப் பற்றியும் எத்தனையோ கவிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களை சிறப்பித்துள்ளார்கள்.

'பெண்கள் நம் நாட்டின் கண்கள்', 'பெண்ணாய் பிறக்க மாதவம் செய்திட வேண்டும்'.

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒருபண்பு உண்டு. பெருமை உண்டு.

நீரின் பண்பு தன்மை, நெருப்பின் பண்பு வெம்மை, பாலின் பண்பு இனிமை, உயிரின் பண்பு அன்பு என்பார்கள்.

இதைத்தான் திருவள்ளுவர் உயிருடைய உடம்பு எது என்றால், அன்புடைய வாழ்வு என்றார். அத்தகைய அன்புக்கு எடுத்துக் காட்டு பெண்கள்தான் என்பது சான்றோர்களின் கருத்து.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல்

வேண்டுமமம்மா? "

என்றார் கவிமணி.

பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப் பாராட்டை உண்டு பண்ணுகிறது.

ஆனால், அவர்களின் நல்ல நடத்தையே அவர்களைத் தெய்வங்களாக்குகிறது _ என்றார் ஷேக்ஸ்பியர்.

"மனையறம் எனும் மரத்திற்கு ஆணிவேராக

இருப்பவள் பெண்தான்"

என்பது சேக்கிழாரின் கருத்து.

"காற்றை விடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்" _ என்றார் ஷேக்ஸ்பியர்.

"பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும்புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள் _ என்றார் வேட்லி.

பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது _ என்றார் நேரு.

எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுகின்ற னரோ அந்த இடத்தில் தேவதைகள் குடியிருக்கின்றனர் _என்கிறது மகாபாரதம்.

"உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த

உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்.

அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்

அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்."

ஒரு ஆண்மகன் சத்தமாக, ஒழுக்கமாக வாழ வேண்டுமாயின் அதற்கு அடிப்படை காரணமாக இருக்கின்றவள், இருக்கப் போகின்றவள் மனைவிதான் என்பது பாரதிதாசன் கருத்து.

வாழ்க்கைத் துணை எல்லாச் சிறப்புகளொடும் அமைந்துவிட்டால் ஒரு மனிதனுக்கு இலலாதது என்று எதுவுமே இல்லை. இதனை வள்ளுவர்.

"இல்லதென் இல்லவள்-மாண்பானால்"

என்றார். வெற்றி பெற்ற ஒவ்வொர் ஆணுக்குப் பின்னும் ஓர் பெண் இருக்கின்றாள் என்பது பழமொழி.

"முந்நீர் வழக்கம் மகடுஉவோ டில்லை" என தொல்காப்பியமும்,

"கானமர் செல்வி அருளலின் வெண்கால்

பல்படைப் புரவி எய்திய தொல்லிசை" என அகநானூறும்,

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க் காடவர் உயிர்" என குறுந்தொகையும்

"பெண்ணின்பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்" என திருக்குறளும்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுஞ் திருநாட்டு

மண்டிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என பாரதியாரும்,

என தொல்காப்பியர் காலந்தொட்டு பெண்மை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் தோன்றியுள்ளன.

பெண் என்பவள் மிகச் சிறப்பானவள், அன்பின் அடையாளமாய் திகழ்பவள். அத்தனை உயிர்களையும் தோற்றவிப்பது பெண்ணினமே.

இத்தகைய பெண்ணின்பெருமையை உணர்ந்த நம் முன்னோர்கள்அவர்களின் சிறப்பை இவ்வுலகிற்கு பறைசாற்றுவதற்காகவே இந்த பாரநாட்டை பாரதத்தாய் நாடு என்றார்கள்.

தாய்மொழி என்றார்கள். ஆறுகளுக்கு கூட கங்கை, யமுனை, காவேரி, கோதாவரி என்று பெண்கிள் பெயர்கைளையே சூட்டி மகிழ்ந்தனர்.

நாம் வாழ்கின்ற இந்த பூமியை பூமாதேவி என்று அழைத்தனர். அவர்களின் தியாகப் பூர்வமான வாழ்க்கையை இவ்வுலகிற்கு எடுத்துரைத்தன.

"பெண்களது பெருமதிப்பை உணர்ந்தே உள்ளேன்

பெருலகில் வாழ்கின்ற மக்கள் எல்லாம்

பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில வேறு என்ன

பெருமை இதைவிட எடுத்துக் கூறுவதற்கு"

என்று பெண்ணின் பெருமைப் பற்றி கூறுகிறார் வேதாத்திரி மகரிசி ,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்".

என பொய்யாமொழிப் புலவர் சொல்லிச் சென்றாலும், பெண் அடிமையாய் நடத்தப்பட்டு வந்த காலம் உண்டு அல்லவா?

ஒரு பெண் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை அகற்றிடும் என்று பாரதி,பெண் சுதந்திரத்திற்காக முதல் குரல் கொடுத்தான்.

பெண்ணுக்கு ஞானம் மறுக்கப்பட்டபோது, முதன் முதலாக பெண்களுக்கு தீட்சையின் மூலம் ஞானம் கொடுத்தவர் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி,

பேரறிவும், பேராற்றலும் கொண்டு அன்பு, அருளோடு உயிர்களைக் காத்தல், தெய்வத்தின் இயல்பு,

பெண்மையின் சிறப்புகளாக விளங்கும் அறிவு, அடக்கம், பொறுமை, அன்பு, தாய்மை, அழகு, மென்மை, இன்பம் இவை அனைத்துமே தெய்வீகப் பண்புகள் ஆகும்.

"நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம் உன் தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகன்றன.

அம்மன், தாய், அவளைப் போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சசோதரி, மாதா முதலரியோர் ஒளிவீச நாம் பார்க்க வேண்டும் என்பது குறிப்பு" என்னும் கருத்தும் நோக்கத்தக்கது.

வேதாத்திரி மகரிசி பெண்களை "தெய்வத்தின் நிலையில் வைத்துப் போற்ற வேண்டும்" என்கிறார்.



இறைத்தத்துவமாகிய கடவுளுக்கு அடுத்த நிலையில் அமையும் சிறப்பு உடையது பெண்மை என்கிறார்.

பெண் என்பவள் யாரோ, எங்கேயோ இருக்கிறாள், அவர்களைப் பற்றியெல்லாம நமக்கென்ன என்று இருப்பதற்கு இல்லை.

"ஒவ்வொருவருக்கும் தாயாக, உடன் பிறந்தவர்களாக, வாழ்க்கைத் துணையாக வாழ்வு அளித்துக் கொண்டு இருக்கக் கூடிய தெய்வத்தின் தூதுவர்களே பெண்கள் ஆவர்" என்று பெண்ணின் தெய்வீகத் தன்மையை போற்றுகின்றார்.

"மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால் மனையாளும் தெய்வமென்றறோ?" என்று மனைவியையும் தெய்வமாக மதித்துப் போற்றிச் சொல்லுகிறார் பாரதியார்.

எந்த மனிதனைப் பார்த்தாலும் இறைநிலையாக, காந்தமாக, அணுவாகப் பாருங்கள்.

சகோதரிகள் எல்லாம் இப்படி நினைக்கிறார்கள். எந்தத் தத்துவம் பேசினாலும் மனிதன் மனிதன் என்று தான் பேசுகிறார்கள். மனிதி,மனிஷி என்று வரவில்லையே.

அதற்கு ஆங்கிலத்தில் நல்ல முறை இருக்கிறது. முறையான வார்த்தை இருக்கிறது. MAN என்று சொன்னால் ஆண் மனிதன்.

பெண்களுக்கு என்ன சொல்கிறோம்? WOMAN நீங்கள் எல்லாம் சிறிது நேரம் அப்படியே எண்ணிப் பாருங்கள். WOMAN என்றால் என்ன அர்த்தம்?

WOMB + MAN அதாவது MAN WITH WOMB.அப்படி சிறப்புப் பெயர் பெற்றவர்கள் பெண்கள். அது அமைந்த சிறப்பைப் பாருங்கள் WOMB MAN.

எந்தத் தத்துவத்திலும் எந்த இடத்திலுமே மனிதன் (MAN) என்றுதான் வருகிறது. MAN includes WOMAN also.

மனிதன் என்பது பெண்களையும் சேர்த்துதான். அது சிறப்பான வார்த்தை.

அதனால் இப்போது தத்துவங்கள் எல்லாம் மனிதன் பற்றிதான் பேசுகிறார்கள் என்று எண்ண வேண்டாம். பெண்களுக்கும் அது பொருந்தும்.

இறைவன், உலகின் மதிப்பு மிக்க, கிடைக்கப் பெறாத மற்றும் அபூர்வப் பொருள்கள் எல்லாவற்றையும் மறைத்தே வைத்து உள்ளான்.அவைகள் கடினமானவைகள். மிகுந்த சிரமத்திற்கு பிறகே அவைகள் கிடைக்கப் பெறும்.

1. "வைரம்" ஆழமான நிலத்தின் கீழே மூடப்பட்டு, பாதுகாக்கப் படுவதால் அதன் மதிப்பு அதிகம்.
2. "தங்கம்" பாறை அடுக்குகளால் மூடப்பட்ட நிலையில் உள்ளது. தங்கத்தினை பெற கடினமாக உழைக்க வேண்டும்.
3. "முத்து" ஆழ்கடலில் மறைக்கப்பட்டு, அழகான சிப்பிக்குள் பாதுகாக்கப்படுவதால் அதன் மதிப்பும் உயர்வாகின்றது.

அது போலத் தான் பெண்களும்.....!

இயற்கை அமைப்பிலே பெண்கள் மிக மென்மையானவர்கள். தோற்றத்தின் மென்மையைப் போலவே, உள்ளமும் மென்மை வய்ந்தது. அவர்கள் இதயம் மலரினும் மென்மை உடையது.

அன்பு, ஆதரிப்பு, பராமரிப்பு இவையே பெண்ணுக்குரிய வேலைகளாக உள்ளன.இவற்றில் அவள் பெற்ற திறமையை வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் காணலாம்.

பெண்ணின் மனமும் செயலும், மலரும் மணமும் போலப் பிரிக்க முடியாதபடி ஒன்றாகிவிட்டன.

பெண்களிடம் தாய்மை உணர்ச்சி உண்டு. அந்தச் செயலால் ஆண்கள் வளர்கிறார்கள்.

அடுத்தாற் போல் இங்கிதம். இங்கிதம் என்பது பெண்களுடன் கூடப்பிறந்த பொக்கிஷமாகும்.அவர்களின் உள்ளத்திலே இங்கிதம்,

பேச்சிலே இனிமை, நடையிலே நளினம், தோற்றத்திலே அழகு - இவை அத்தனையும் பெண்களிடம் உள்ள கலைச் செல்வங்கள்.

இப்படியொரு அற்புதமான படைப்பை ஆணுக்குத் துணையாகப் படைத்தானே அந்த ஏக இறைவனுக்கு வாழ்நாள் முழுக்க நன்றி சொன்னாலும் போதாது.

பெண் என்றும் அடிமையில்லை.
அவளை யாரும் அடக்கவுமில்லை.
அவளே அடங்கி வாழ்ந்தாள்.
"மானிட வரலாற்றின் பின்னால் ஒரு பெண் இருப்பது உண்மை…அது அம்மாவாக, மனைவியாக, சகோதரியாக இன்னும் இன்னும் நீளும் பட்டியல்கள்........

# 3. சிறப்புணர்ந்த பெண் மதிப்பு

பெண்மையின் சிறப்பினை அன்றுதொட்டு இன்றுவரை பலர் எடுத்துரைத்தாலும், சிலர் பெண்மையினை இரண்டாம் தரமாகவே நடத்தி வருகின்றனர்.

இந்நிலையை மாற்றி பெண்மையை போற்றவும், சிறப்பிக்கவும் சில சிந்தனையாளர்கள் முயன்று வருகிறார்கள். அவர்களுள் நமது அருட்தந்தை மிக முக்கிய பங்கு வகிக்கிறார்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஒரு குடும்பத்தினை நடத்துவது, குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது, முதியோர்களை பராமரிப்பது, இப்படி பெண்களின் பங்கு மிகவும் போற்றுதற்குரியது.

ஆனால் இவர்களின் சிறப்பு பெரும்பாலும் பலரால் அறிந்துகொள்ளப் படுவதில்லை.

இவ்வுலகில் வாழுகிற ஜீவராசிகள் அனைத்திற்கும் பிறப்பிடம் பெண்மையே... இத்தகைய பெண்ணினம் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை வளம் அனைத்திலும் உயர்வு நிலை பெறுவதே சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் சாலச்சிறந்தது.

## பெண்மையை போற்றுவோம். வாழ்த்துவோம்.

"பெண்ணினத்தின் சிறப்பை உணர்ந்தே உள்ளேன்,
பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம்
பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் இதைவிட
பெருமை வேறென்ன எடுத்துச் சொல்வதற்கு." -மகரிசி

இன்று உலகில் 800 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களில் பாதிபேர் ஆண்கள். இவர்களை பெற்றெடுத்தது பெண்களே. ஆண்கள்அனைவரும் பெண்களின் அன்பளிப்பு எனில் அது மிகை ஆகாது. பெண்மையை போற்றுவோம். வாழ்த்துவோம்.

பெண்களைப் பற்றிய பழமொழிகள்

பெண்களைப் பற்றிய பழமொழிகள் பெரும்பாலும் அவர்களுக்கு எதிரானதாகவும், அவர்களைக் குறைகூறுவதாகவும் இருக்கின்றன. இதைக் காலத்தின் பிரதிபலிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.



பல கலாசாரங்களிலும் பழங்காலத்தில் இப்படிதான் இருந்தது. வேற்று மொழிப் பழமொழிகள், பொன்மொழிகளைப் பயிலுவோருக்கு இது தெளிவாக விளங்கும்.

பெண் பல ரூபங்களில் இருப்பவள். தாயாகவும் மனைவியாகவும்,

மகளாகவும்,மருமகளாகவும், மாமியாரகவும், மாமியாகவும், அத்தை/சித்தியாகவும் வருகிறாள்.

- பெண் இன்றிப் பெருமையும் இல்லை :கண் இன்றிக் காட்சியும் இல்லை .
- பெண்களுக்குரியசுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது.
-
-
- பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது.ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில்இருக்கிறது.
- பொய்மை கோழைத்தனம், கீழ்க்குணம் ஆகியமூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை.
- பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப்பாராட்டை உண்டு பண்ணுகிறது. ஆனால், அவர்களின் நல்லநடத்தையே அவர்களைத் தெய்வங்களாக்குகிறது
- பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்திலே குடும்பஇன்பத்தின் அடிப்படை.
- எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுகின்றனரோ அந்த இடத்தில் தேவதைகள் குடியிருக்கின்றனர்.
- தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்வதே பெண்களுக்கு அழகு.
- பெண்ணாய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திருக்க வேண்டும்.
- ஒரு பெண்ணின் உள்ளமாகிய கடலில் இரக்கம், தியாகம்,கற்பு, காதல் ஆகிய நன்முத்துக்களைக் காணலாம்.

## பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'

ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும். பெண் என்பவள் இயற்கையில சிறப்பைப் பெற்றவள் ( They are very special nature).

ஆக ஒரு பெண்களின் சஞ்சிதகர்மமம் தாய்மையாக இருந்தால்தான் பிறக்கும் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக இருக்கும்.

இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இளம் பிராயத்தில் தியானம் உடற்பயிற்சியைக் கடைபிடிக்க வேண்டும்.

பெண்களுக்கு உடற்பயிற்சி தியானம் அவசியமா? எனற் கேள்வியை எழுப்பினால் அக்காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு உடல் உழைப்பு இருந்தது. பக்தி யோகத்திலும் சிறந்து விளங்கினார்கள். உடல் நலத்தோடு வாழ்ந்தார்கள்.

"எத்தொழிலை செய்தாலும் எதவஸ்தைப்பட்டாலும்

முத்தர் மனமிருக்கும் மோனத்தே

வித்தகமாயக் காதிவிளையாடி யிருகைவீசி வந்தாலும்

தாதி மனம் நீக்குடத்தோன்"

எனப் பட்டினத்தார் பகர்ந்துள்ளதைக் காணலாம்.

இக்காலத்துப் பெண்களுக்கு உடல் உழைப்பு குறைவு "அனுபோகப் பொருள்கள் பெருகப்பெருக உடல் நலம் பாதிக்கப்படும்" என்று அருட்தந்தை மகரிசி கூறுவது போல..

தற்போது எல்லாமே மிக்சி, கிரைண்டர் என்று இயந்திர உதவியுடன் வாழ்ந்து கொண்டுள்ளோம். ஆகவே இக்காலப் பெண்களுக்கு உடற்பயிற்சி தவம் தேவை.

மனம் தன் திறமையையம் வல்லமையையும் பெருக்கிக் கொள்வது தவம். மனம் தன்னை தூய்மை செய்து கொள்ள எடுத்துக் கொளளும் முயற்சி அகத்தாய்வு.

இந்த அகத்தாய்வில் மேன்மேலும் மனம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதே குணநலப்பேறு. தூய்மை அடைந்த பிறகு புரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதுவே முழுமைப்பேறு.

ஆக பெண்களும் இன்று மனவள கலையில் இணைந்த எல்லாப் பயிற்சிகளும் பெற்றுச் சிறப்பான முறையில் முன்னேறிச் கொண்டுள்ளார்கள்.



பெண்கள் நாட்டின் கண்கள். தன்னை வருத்தி தன்னைச்சார்ந்தவர்களுக்காக நித்தமும் ஓடும் தியாகத்தின் பிரதிபலிப்பு.

ஒரு கிலோ எடையைக்கூட அடிக்கொருதரம் கைமாற்றுபவர்களுக்கிடையில், தன் வயிற்றில் சுமக்கும் மழலையை பத்து மாதம் பேணிக்காக்கும் உன்னதம். தன் குழந்தைக்கு உதிரத்தையே பாலாய் புகட்டும் உயர்வு. பெண்ணாய்ப் பிறப்பதும் மாதவமே.

அன்று பருவமடைந்த பெண்—பள்ளிக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என பெண்களின் அன்றாட வாழ்வு அடுக்களையிலேயே கழிந்தது.

கருத்துரிமை கிடையாது. அந்நிய ஆணிடம் பேசுவதற்கே அஞ்சினார்கள். இளவயதிலேயே திருமணம் செய்துவிடுவதால் வெளிஉலகம் அறியும் முன்னே வாழ்க்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒவ்வொரு நிலையிலும், தந்தை, சகோதரன், கணவன் என ஆணுக்கு கட்டுப்பட்டு அவர்களைச் சார்ந்தே தன் சுயம் இழந்து வாழ்ந்தார்கள்.

இளவயதிலேயே கணவனை இழந்தாலும் தன் வாழ்வு அதோடு முடிந்துவிட்டதாகவே வெறுமையான வாழ்வை மேற்கொண்டனர் விரும்பியோ, விரும்பாமலோ.

இன்றைய பெண்கள் தங்களின் வாழ்வை அவர்களே நிர்ணயம் செய்து கொள்ளும் வல்லமை கொண்டுள்ளார்கள்.

பருவமடைந்த பிறகும் பட்டங்கள் பல வென்று பதவிகள் பல வகிக்கிறார்கள்.

ஆண்களிடம் பேசுவதற்கே அஞ்சியவர்களும் இன்று ஆண்களிடம் பாலினம் கடந்த நட்பு பாராட்டும் அளவிற்கு அவர்களின் இன்றைய நிலை உயர்ந்துள்ளது.

அந்தி நேரத்தில் வெளியில் செல்ல தயங்கியவர்களும் இன்று பணி காரணமாக அதிகாலை வீடு திரும்புகின்றனர்.

இன்று தனக்கான வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் பக்குவமும், உரிமையும் பெற்றுள்ளனர்.

இன்றைய பெண்களின் வளர்ச்சி வியப்பையே அளிக்கிறது. நாடாளுகிறாள்.. விண்வெளியில் பயணம் என வளர்ந்து ஆணுக்கு சமமாக அனைத்துத் துறையிலும் ஒளிவீசி வருகிறாள்.

வீடே உலகமென இருந்தவர்கள் கணினி, இணையம் என உலகத்தையும் வீட்டில் காண்கிறாள்.

ஆண்களுக்கே உரிய விளையாட்டிலும் கூட பெண்கள் பங்குகொண்டு அசாத்தியமான சாதனை படைக்கிறார்கள்.

பொருளாதார ரீதியாகவும் இன்று வலுப்பெற்றுள்ள பெண்கள் தங்களுடைய தேவைகளுக்காக யாரையும் எதிர்பார்க்காமல் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் அளவு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள்.

திருமண வாழ்வு சரியில்லாது போனால் அதை நேர்செய்து தன் வாழ்வை அமைத்துக்கொண்டு சுதந்திரமாக செயல்படுகின்றனர்.

சமூக அமைப்பில் பெண்கள் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர். இருப்பினும் முழு அளவில் அவர்களது சமூகப் பார்வை திருப்திகரமாக இருக்கிறதா என்றால் இல்லை என்பதே வருத்தமான உண்மை.

இன்றும் சமூகம் சார்ந்தவர்களை உதாரணம் சொல்லவேண்டும் எனில் அன்னை தெரசா, நைட்டிங்க் கேர்ள் என அழைக்கப்பட்ட சரோஜினி நாயுடு போன்றோரைத் தான் உதாரணம் காட்டி வருகிறோம்.

அன்னை தெரசாவைப் போல் முழுவதும் சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் அளவு இன்னும் பெண்களிடையே மனப்பக்குவம் வரவில்லை என்பதே உண்மை.

இன்றைய பெண்கள் பொருளாதாரத்திலும் மற்றும் அனைத்து துறையிலும் முன்னேற்றம் அடைந்திருப்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு இன்றும் பல இடங்களில் பெண்கள் மதிக்கப்படுவதில்லை என்பதும் உண்மையே.

ஆணுக்குச் சமமாக பதவி வகிப்பதையும், ஆண்களைப் போல் உடையணிவதையுமே சுதந்திரம், வளர்ச்சி முன்னேற்றம் என திருப்தியடையும் பெண்கள் பலர்.

முதலில் ஒரு பெண்ணை மற்றொரு பெண் சமமாக பாவிக்க வேண்டும். அந்தப் பக்குவம் இன்னும் இன்றைய பெண்களிடம் இல்லாதது துரதிருஷ்ட வசமானது.

பெண்கள் வளர்ச்சி, முன்னேற்றம், சுதந்திரம் என்பது என்ன என்பதை முதலில் உணர வேண்டும். நாகரீக ஆடை அணிவதும், ஆணுக்கு சமமான நட்பு போற்றுவதும், பொருளாதாரத்தில் வளர்ச்சியும், கருத்து சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக தன் மனம் நினைத்தபடி வாழ்வை தீர்மானம் செய்வது மட்டும் அல்ல முன்னேற்றம்..உண்மையான முன்னேற்றம், வளர்ச்சி என்பது வீட்டில் துவங்க வேண்டும்.

எப்பொழுது ஒரு தாய், தகப்பன், சகோதரன் மட்டும் அல்ல கணவன், மாமியார், மாமனார் என அனைவரும் ஒரு பெண்ணின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பதோடு, அவர்களை ஊக்கமளித்துப் பாராட்டுகிறார்களோ அப்பொழுதுதான் அது உண்மையான வளர்ச்சியாக கருதப்படும்.

வீட்டில் கிடைக்கும் ஊக்கமே பெண்களை சமூகத்தை நோக்கி தன் பார்வையைத் திருப்புவதற்கு உதவியாக இருக்கும். என்று ஒரு கணவன் தன் மனைவி தெரசாவாகவும், ஜான்சிராணியாகவும், நைட்டிங்க் கேர்ள் அம்மையாராகவும் பிரதிபலிக்க வேண்டும் என விரும்பி ஊக்கப்படுத்துகிறானோ அன்றுதான் பெண்கள் வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பது நிரூபணமாகும்.

இன்று வளர்ச்சியில் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் பெண்கள் வளர்ச்சியை மட்டும் அடைய வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு செயல்படவேண்டும்.

- பெண்களின் முன்னேற்றம் தான், குழந்தைகளின் முன்னேற்றம்.
- பெண்களின் முன்னேற்றம் தான், குடும்பத்தின் முன்னேற்றம்
- பெண்களின் முன்னேற்றம் தான், நாட்டின் முன்னேற்றம்.

அத்தகையப் பெண்களை, மனைவியை, தாய்க்குலங்களை போற்றுவோம்! வாழ்த்துவோம்.

## 3. வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது யார்?

மனைவி அமைவதெல்லம் இறைவன் கொடுத்த வரம் என்று கண்ணதாசன் பாடுகிறார். இறைத் தத்துவத்தை அழகாக பாட்டில் வடித்துள்ளார்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்
மனது மயங்கியென்ன உனக்கும் வாழ்வு வரும்
மனது மயங்கியென்ன உனக்கும் வாழ்வு வரும்
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

இரவில் நிலவொன்று உண்டு உறவினில் சுகமொன்று உண்டு
இரவில் நிலவொன்று உண்டு உறவினில் சுகமொன்று உண்டு
மனைவியின் கனவொன்று உண்டு எனக்கது புரிந்தது இன்று
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்
மனது மயங்கியென்ன உனக்கும் வாழ்வு வரும்

பொருத்தம் உடலிலும் வேண்டும் புரிந்தவன் துணையாக வேண்டும்
பொருத்தம் உடலிலும் வேண்டும் புரிந்தவன் துணையாக வேண்டும்
கணவனின் துணையோடு தானே காமனை வென்றாக வேண்டும்
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

கவிஞன் கண்டாலே கவிதை காண்பவன் கண்டாலே காதல்
கவிஞன் கண்டாலே கவிதை காண்பவன் கண்டாலே காதல்
அழகினை புரியாத பாவம் அருகினில் இருந்தென்ன லாபம்
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

மனது மயங்கியென்ன உனக்கும் வாழ்வு வரும்
மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.”

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று சொல்வார்கள். அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அருமையான அறிவியல் விளக்கத்தைத் தருகிறார்.

கருமையத்தின் பதிவுகளுக்கேற்ப, காலம், நேரம் வரும் போது - பொருத்தமான துணையைத் தானே தேடிக் கொள்ளும். மற்றபடி திருமணத்திதை நிச்சயிப்பவர்கள் அனைவரும் கருவிகளே.

ஒருவருடைய பதிவுகளை கழிக்க வருபவர்களே அவர்களுடைய வாழ்க்தை துணையாக அமைகிறார்கள் என்பது மகரிசியின் பொன்மொழியாகும்.




தனக்குக் கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி தம்பதிகளில் யாருக்கும் குறை இருக்கத் தேவையில்லை. உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்களேதான் தேடிக் கொண்டீர்கள்... அது எப்படி ?

எத்தகு தகப்பனுக்கும் தாய்க்கும் கருவாக அமைந்து தன் வாழ்க்கையில் எத்தகு இன்ப துன்பத்தை அனுபோகிக்க வேண்டும் என்ற கரு அமைப்பு இருக்கிறதோ, அத்தகு உடலைத்தான் உங்கள் தாய் வயிற்றில் உங்கள் உயிரானது அடிமன நிலையில் இருந்து கட்டிக் கொண்டது.

அதேபோல, கருவமைப்பைக் கொண்டும், பிறந்த பின்னர் இதுவரை நீங்கள் அமைத்துக் கொண்டுள்ள மனதின் தரத்தைக் கொண்டும், உங்களுக்கு வாழ்நாளில் என்ன இன்ப துன்பம் வரவேண்டுமோ, அதற்கேற்ப உங்கள் வாழ்க்கைத் துணைவர் வருகிறார்.

அவரை உங்கள் உயிரே - அடிமனமே தெரிந்து, அது பல பேர் மனத்தில் பிரதிபலித்து, அவர்கள் என்னவோ முயற்சி எடுப்பது போல்

சில நடவடிக்கைகள் நடந்தேறி, உங்களுக்கேற்ற அந்த வாழ்க்கைத் துணைவர் வருகிறார்.




எனவே, உங்கள் வாழ்க்கைத் துணைவர் மீது குறைபட்டுக் கொள்ளத் தேவையில்லை.

அவரிடம் உள்ள குற்றங்களுக்காக நீங்கள் யார் மீதாவது குறைபட்டுக் கொள்ள வேண்டுமானால் அது உங்கள் மீதேதான்.

எனவே, இந்தத் தத்துவத்தை நீங்கள் தெரிந்து கொண்டு, உங்கள் வாழ்க்கைத் துணைக்குத் தகுந்த மதிப்பளித்து வாழ வேண்டும்.

அதை விடுத்து, கணவன் மனைவியர் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருந்தால், அந்தச் சூழ்நிலையில் வளரும் குழந்தைகளின் குணமும் ஊனமுற்று அவர்கள் வாழ்க்கையில் பல குறைகள் தோன்ற ஏதுவாகும்.

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும்.

அதேபோல், பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் அவை சொல்லப்படாதது போல் பாவித்து, ஒதுக்கி விட வேண்டும். அப்போதுதான் அமைதி பிறக்கும்.

தன் கருத்து சரியேயாயினும், உயர்வேயாயினும், வாழ்க்கைத் துணை ஒத்துக் கொள்ள வில்லையேன்றால் அது எவ்வளவு அவசியமான கருத்தானாலும் ஞானமேயானாலும் சிறிது காலத்திற்கு, அவர்கள் ஒத்துக்கொள்ளும் வரை, தள்ளி வைக்க வேண்டியதுதான்.

குடும்ப அமைதியை இழந்து பெறுவது அது ஞானமேயாயினும் அதனால் ஒரு பயனும் வராது" என்கிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

உன் மனைவி எடுக்கும் முடிவுகளை பார்த்து நீ சிரிக்காதே - உன்னையும் உன் மனைவி தான் தேர்ந்தெடுத்தாள என்று நினைத்துக்கொள்...........

நீ எடுக்கும் முடிவுகள் தான் சிறந்தது என்றும் எண்ணாதே - நீயும் தான் உன் மனைவியை தேர்ந்தெடுத்தாய் என்பதையும் நினைவில் கொள்.......

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் போது அவர்களுக்கிடையே ஏற்படுகின்ற புதிய உறவில் அந்தப் பெண் அவனை மணந்து கொண்டு தன்ஆயுள் முழுக்க ஆணுக்கு மனைவி என்ற உறவு முறையாக மாறுகிறாள் .



மனைவிநலவேட்புநாள்விழா, அவினாசி

மனைவி என்ற இந்த உறவுக்குரிய கடமைகளும்,உரிமைகளும் சமுதாயங்களின் பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையில் வேறுபட்டு அமைந்த பின்னரும் மனைவி என்பவள் அந்த ஆணின் வாழ்க்கைக்கு மிக நெருங்கிய தொடர்புடையவள் ஆகின்றாள்.

ஆணின் வெற்றி மற்றும் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிப்பவளாய் ஆகிறாள்.

குடும்ப உறவுகளைப் பேணி அதன் மூலம் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சிகளைத் தருபவளாகின்றால் . இதை புரிந்து நடப்பவன் மட்டுமே வாழ்வில் வெற்றி பெறுகின்றான் .

சாதாரணமாக மனைவிக்குப் பயப்படும் ஆண்களைப் பற்றி நிறைய நகைச்சுவை துணுக்குகள்உண்டு.

வளமை மிக்க எமதர்ம மகாராஜன் ஒருமுறை பூமிக்கு வந்தபோது அழகான ஒரு பெண்ணிடம் தன்மனதைப் பறிகொடுத்தார்.

அவள் மானுடப் பெண் என்றாலும் அவளை மணந்து சில காலமாவது வாழ வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்து விட்டது.

அந்த மானுடப் பெண்ணை மணந்து அழகான ஆண் பிள்ளைக்கு தகப்பனார் ஆனார் எமதர்மன்.

அவர் மணந்த பெண் நல்லவள் தான்.என்றாலும் நாளாக நாளாக எமனுக்கு அவள் மீது சலிப்பு தட்டியது.

அதைவிட முக்கியமான சிக்கல் அந்தப் பெண்மணி எமனை ஆசையாக இறுக்கி அணைத்தால் எமனுக்கு மூச்சு திணறியது.

அவ்வளவு அழுத்தமான அணைப்பு.பாசத்தோடு மனைவி அணைக்கும் போதெல்லாம் எம பாசத்தோடு இருந்த எமனுக்கே மரண பயம் வரத் தொடங்கியது.

மேல் உலகம் போய் தப்பி விடலாமா என்று நினைக்க ஆரம்பித்தார்.ஆனால் பிள்ளை மேல் இருந்த பாசத்தால் மகனை நிர்க்கதியாக விட்டுப் போக மனமும் வரவில்லை.

தத்தளித்தார்.

மகன் கொஞ்சம் வளர்ந்ததும் மனம் விட்டு அவனிடமே பேசினார்.அவனுடைய அம்மாவிடம தனக்குள்ள பயத்தையும் விளக்கினார் .

மகனே..நீ சிறந்த வைத்தியனாக வேண்டும். மரணத் தருவாயில் இருப்பவரைக் கூட நீ காப்பாற்ற முடிம்.எப்படித் தெரியுமா?

ஒருவர் மரணம் அடைவதாக இருந்தால் நான் அங்கு இருப்பேன். உனக்கு மட்டும் கண்ணுக்குத் தெரிவேன்.

நான் அங்கு இருந்தால் அவருக்கு வைத்தியம் செய்யாதே.நீ வைத்தியம் செய்து அவர் இறந்து போனால் உன் புகழ் குறையும்.

எனவே யாருக்கு வைத்தியம் செய்தாலும் நான் அங்கு இல்லையென்றால் தைரியமாக மருந்து கொடு .

அவன் பிழைத்து எழுந்து கொள்வான்.அதனால் உன் புகழ் மேலும் மேலும் பரவும் என்றார் எமன்.

சொல்லிவிட்ட மனைவியிடம் சொல்லிக் கொள்ளாமல் மகனை அணைத்து கண்ணீர் விட்டு எமதர்மன் நழுவி விட்டார்.

மகன் மருத்துவம் படித்து மகத்துவம் பெற்றான்.அவன் வைத்தியம் செய்தால் எப்படியிருப்பவனும் பிழைத்துக் கொண்டான். ஒருவர் கூடச் சாகவில்லை.

எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள்.யாருக்காவது வைத்தியம் செய்யப் போகும் போதுஎதிரில் அப்பாவை(எமனை)ப் பார்த்தால் கும்பிட்டுவிட்டு வெளியே வந்து விடுவான்.

இந்த வைத்தியன் கைவிட்டால் பிறகு மரணம் தான் என்று ஊரே புகழ்ந்தது.

கொஞ்ச நாளில் அந்த ஊர் அரசரின் மகள் நோய் வாய்ப்பட்டாள். யார் வைத்தியம் பார்த்தும் பலனில்லை.இவனை அழைத்தார்கள்.

என் மகளைக் காப்பாற்றினால் அவளையே உனக்கு மனைவியாகத் தருகிறேன் , ராஜ்ஜியத்தையும் தருகிறேன் என்றார் ராஜா.

அவள் படுத்திருக்கும் அறைக்குள் போன வைத்தியனுக்கு அதிர்ச்சி.எமன் (அப்பா)நின்று கொண்டிருந்தார்.

வைத்தியம் செய்தால் பிழைக்க மாட்டாள்.ஆனால் பிழைத்துவிட்டால் அழகான அந்த ராஜகுமாரி,ராஜ்ஜியம் எல்லாம் கிடைக்கும்.

இடைஞ்சலாக அப்பா குறுக்கே நிற்கிறார். எப்படி அவரை விரட்டுவது? பளிச்சென்று யோசனை பிறந்தது.

வாசல் பக்கம் பார்த்து கத்தினான். அம்மா..அப்பா உள்ளே இருக்கார். ரொம்ப நாளா அப்பாவைக் காணோம் காணோம்னு தேடினேயே..இங்க இருக்கார், என்று அலறினான்.

அவ்வளவுதான் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று எமன் ஓட்டமாக ஓடிவிட்டான். எப்படி கதை ?

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

நம்மாளு ஒருத்தர் இப்படி பாட்டு பாடுகிறார்"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" அதுக்கு நம்மாளுவோட மனைவி இப்புடி பாடுறாங்க "கணவன் அமைவதெல்லம் சைத்தான் கொடுத்த வரம்".

# 5. திருமணம்

மணம் என்ற சொல்லுக்குக் 'கூடுதல்' என்பது பொருள். இதன் வேர்ச்சொல் மண் என்பதாகும்.

இன்று பொது நிலையில் மணம் என்பது நறுமணத்தைக் குறிப்பினும், பழங்கால வழக்கில் இச்சொல் பல பொருளை உடையதாக இருந்தது.

'மண்ணுதல்' என்ற சொல்லின் பொருள் கழுவுதல், நெருங்குதல், கலத்தல், கூடுதல், அழகுபெறுதல் எனப்பல.

திருமணத்தைக் குறிக்கும் ' மணம் என்ற சொல் எவ்வாறு அமைந்தது என்பது தெரியவில்லை. மண் இயற்கையிலேயே மணம் உடையது. அதனை மண் மணம் என்பர். இது தமிழர் வழக்கு.

இல்லறத்திற்கு நுழைவாயிலாக அமைவதனை 'மணம்' என்ற சொல்லால் குறிப்பிட்டதன் நோக்கம் மண்ணைப் (நிலத்தை) போல பொறுமை, அமைதி, எதையும் தாங்கும் வன்மை இவற்றை மணமக்கள் பெறுதல் வேண்டும் என்பதே அடிப்படை என்று கூறுவோரும் உளர்.

மனமொத்து, வாழ்வு முழுவதும் மணம் பெற்று நிகழ்வதற்கு ஏதுவான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டனர்.

சிறப்பான, மேன்மையான ஒன்றைக் குறிப்பிட 'திரு என்ற அடை கொடுத்து அழைப்பது தமிழர் மரபாகையால் இல்லற வாழ்வின் அடிப்படையாக அமையும் மணம் "திருமணம்" என்று அழைக்கப்படுகிறது.

**திருமணம்** ஒரு சமூக, சட்ட, உறவுமுறை அமைப்பு ஆகும். குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரம் போன்ற பல காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறது.

மணம் என்பது ஓர் ஆணும், ஒரு பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தபெறும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தம்.

மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதிப் படைத்துக் கொள்ளப்பட்டதோர் ஒழுக்க முறை. திருமணம் என்பது மனித இனத்தைப் பொறுத்தவரை ஒரு உலகளாவிய பொதுமையாக இருந்த போதிலும், வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்களிடையே திருமணம் தொடர்பில் வெவ்வேறு விதமான விதிகளும், நெறிமுறைகளும் காணப்படுகின்றன.

திருமணம் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண், பெண் உறவு நிலையைக் குறிக்கிறது. அதோடு திருமணம் என்பது ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்குரிய ஒருவிதப் பிணைப்பு ஆகும்.

ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு, அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப்பொறுப்பில் நடத்துவதற்குப் பலர் அறியச் செய்துகொள்ளும் செயலே மணம் எனப்படும்.

எந்த ஆண்மகனின் வாழ்க்கையும் பூரணமடைவது ஒரு பெண்ணின் மூலமாகும். இவ்வுலகம் முழுவதும் வாழ்க்கையின் வளங்கள் என்றும், அதில் சிறந்தவர் நல்ல மனைவி என்றும் நபி(ஸல்…) அவர்கள் கூறியுள்ளார்கள்.

திருமண வயதை அடைந்தவர்களிடம் அதற்கான தூண்டுதலை நபி(ஸல்..) அவர்கள் ஏற்படுத்தினார்கள். மனித வாழ்க்கையில் ஏராளமான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

அதில் முக்கியமானதும், ஆழமானதும் திருமணம் ஆகும். அது உறுதியான ஒப்பந்தம் ஆகும்.



”திருமணம் என்பது வெறும் உடற்சேர்க்கையன்று. அது உணர்ச்சிகளின் சேர்க்கை. வாழ்க்கை வளங்களின் சோக்கை, சிந்தனைகளின் சேர்க்கை.

பெண்ணின் வாழ்ககையில் உண்மையான பரீட்சை ஒன்றே தான் உண்டு. அதுதான் திருமணம். மற்றவையெல்லாம் கண்ணாமூச்சி விளையாட்டுதான் என்பார் காண்டேகர்.

திருமண உறவு என்பது ஒரு புனிதமான உறவு நாம் வாழ்நாளில் பாதி பெற்றோர்கள்,உறவினர்கள் அவர்களை சார்ந்து வாழவேண்டிய சூழலில் வாழ்கிறோம் மீதி காலங்கள் கணவன் அல்லது மனைவி உறவுகளிடையே வாழ்கிறோம்.

இப்படி இருக்க ஒரு புது உறவு ஏற்படுகிறது.இந்த புது உறவு அன்பு , பாசம் , காதல் இப்படி எத்தனையோ விஷயங்கள் அடங்கிய உறவு தான் திருமணம் (கல்யாணம் )



**திருமணமான பெண்களை "திருமதி" என்பது ஏன்?**

திருமணத்திற்கு முன் பொறுப்பில்லாமல் சுற்றும் ஆண்கள் வீணாகச் செலவழித்து திரிவார்கள். திருமணத்துக்குப் பின் தறிகெட்டு அலையும் கணவனை மனைவி திருத்தி விடுகிறாள். அவள் கணவனின் வரம்பற்ற செலவுகளைக் குறைத்து வீட்டில் செல்வம் நிறைய முயற்சி செய்கிறாள். இதற்காக தனது மதிநுட்பத்தை (புத்திசாலித்தனம்) பயன் படுத்துகிறாள். அந்த வீட்டில் லட்சுமி கடாட்சம் ஏற்படுகிறது. திருவையும் மதியையும் இணைத்தே திருமணமான பெண்களுக்கு 'திருமதி' என்ற பட்டம் தரப்பட்டது. 'திரு' என்றால் 'லட்சுமி'. 'மதி' என்றால் 'அறிவு'.

## திருமணம் ஒரு பார்வை.

திருமணம் என்பது உடல் மற்றும் உள்ளம் சார்ந்த ஒரு வலுவான அடிப்படை தேவையாகும்.

காலா காலத்தில் திருமணம் ஆகாவிட்டால் மனித உந்து சக்தியானது (Motivation or Drive) தேக்கமோ, திசைமாற்றமோ அடைந்துவிடும். இது வாழ்க்கைக்கு நல்லதல்ல.

திருமணம் என்பதை பெரும்பாலோர் பாலுறவு தொடர்பான விஷயமாகவே நினைக்கிறார்கள். இது தவறு.

மேலும் சிலர் பாலுறவை பிறப்புறுப்பு சம்பந்தப்பட்ட விஷயமாக நினைக்கிறார்கள். இது அதைவிட பெரிய தவறான கருத்தாகும்.

பாலுணர்வு உடல் மற்றும் உள்ளம் முழுவதும் பரவியிருக்கிறது. அதனால்தான் சில ரிஷிகள் இதை ஒரு கலை போன்றே கருதினார்கள்.

அன்பு(Love), உதவி(Help), அரவணைப்பு(Emotional warmth), ஆறுதல், நம்பிக்கை(Faith), ஊடல் கூடல் இவை போன்ற பல பகுதிகள்(Components of marriage life) இணைந்ததுதான் மணவாழ்க்கை.

இந்த உண்மையை புரிந்து கொண்டவர்கள் வெற்றிகரமாக வாழ்கிறார்கள். அடம் பிடிப்பவர்கள் தோல்வியடைகிறார்கள்.

சரியாக கூறவேண்டுமானால், கணவன்-மனைவி என்பதே ஒரு நட்பு(Divine friendship) என்பதை தவிர வேறில்லை. இந்த நட்பு சரியாக வாழ்வில் அமையப்பெற்றவர்கள் வாழ்வில் ஒருவருக்கொருவர் ஊக்கம் தந்து முன்னேற்றம் காண்பார்கள்.

திருமண வாழ்க்கை வெற்றிகரமாக அமைய தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி மூன்று மந்திரங்களை கூறுகிறார். அவை:

1. விட்டுகொடுத்தல்
2. பொறுமை / சகிப்புத்தன்மை
3. தியாகம்.

விட்டுகொடுத்தல் , சூழ்நிலைகளுக்கேற்ப விட்டுகொடுத்தல், வளைந்துக்கொடுத்தல்.

## நெருங்கிய உறவில் திருமணம் செய்யக் கூடாது.

நெருங்கிய உறவில் திருமணம் செய்யக் கூடாது. ஒரே இரத்தத் தொடர்பில் நல்ல மக்களை உண்டாக்க முடியாது, குறையுள்ள மக்களைப் பெற வாய்ப்புள்ளது.

ஒரே பூவில் உள்ள மகரந்தம் கூடினால் தரமான விதை கிடைக்காது. வெவ்வெறு மகரந்தங்களுடன் சேர்க்கையில் தரமான விதை உண்டாகும்.

"....உடன் பிறந்தேர் என்று கண்டால்

வாய்விட்டுச் சொல்ல, தடை விதித்துக் காப்போம்,

வாழ்க்கையிலே இத்தவறு நேர்ந்திடாமல்"

என்பார் வேதாத்திரி மகரிசி.

உடற்பொருத்தம், மனப்பொருத்தம், சுபாவப் பொருத்தம், அறிவுப் பொருத்தம் முதலான எல்லாவற்றிலும் உயர்தவர்களையே (திருமணத்தில்) ஒன்று சேர விடவேண்டும்.

பலகீனமானவர்கள் பலகீனமாவர்களோடு இணைவதைக் கூடியவரை குறைந்துவிட வேண்டும்" என்பார் சிந்தனையாளர் பிளேட்டோ.

உறவில் திருமணத்தை தவிர்ப்பதே நல்லது. ஏனெனில, உறவில் திருமணம் செய்து கொள்வோருக்குப் பிறக்கும் கழந்தைகளுக்கு தலசீமியா. மலைக்கண் போன்ற மரபணுக்கள் தொடர்புடைய நோய் வருவதற்கான வாய்ப்பு உண்டு.

தலசீமியா நோயுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆயுள் முழுவதும் இரத்தம் செலுத்த வேண்டியிருக்கும்.

## துணை தேர்ந்தெடுத்தல்

ஒவ்வொருவரும் வாழக்கையில இல்லறம் ஏற்க வேண்டும். ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வயது வரும் போது அவர்களுக்கு வாழக்கைத் துணை அவசியம் என்றும்,

பெண் துணையைத் தேர்ந்தெடுக்கும் போது வாழ்க்கை அனுபவத்தில் உயர்ந்த துணையைத் தேர்ந்தெடுக்கும் போது வாழ்க்கை அனுபவத்தில் உயர்ந்த பெற்றோர் விருப்பப்படி,

ஓர் ஆணோ, பெண்ணோ வாழக்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம் என்றும்,

"பெண்கள் தம் பொருள் வருவாய் ஆண்களைப் போல்

பெற்று சம உரிமையுடன் வாழும் காலம்

பெண்கள் தம் விருப்பம் போல் கணவன் தேர்ந்து

பிரயமுடன் காதல் வாழ்வெய்தல் நன்று"

என்று காதல் மணத்திற்கு ஆதரவு தருகிறார்.

பெண்களுள் பொருள் வரவு அற்றோர் பெற்றோர் விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளும்படி அறிவுரை கூறுகின்றார்.

## பாதுகாப்பான திருமண முறை

திருமண அங்கீகாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் காலத்திற்கும் இடைத்திற்கும் ஏற்ற முறையில் பலவிதமான சடங்கு முறைகள் உண்டாக்கப்பட்டன.

மனித வாழ்வில் திருமணம் இன்றும், என்றும் எப்போதும் ஒருமிக முக்கியமான வாழ்க்கை ஒப்பந்தம் என்பதில் ஐயமில்லை.

எனவே, தெளிவான ஞானம், நன்னடத்தை, பொறுப்புடமை, ஆன்மீகம் இவற்றப் பெற்றுள்ள போற்றுவதற்குரிய ஒருவரால் திருமணம் எனும் புனிதச் சடங்கு நடத்தப்பட வேண்டும் என்பது மகரிசியின் திட்டமாகும்.

விஞ்ஞான அறிவு பரவியுள்ள இக்காலத்தில் திருமணம் அரசாங்கத்தில் பதிவு செய்து கொடுக்கும் முறையே சிக்கனமானது, பாதுகாப்பானது என்று வலியுறுத்துகிறார் மகரிசி.

ஆன்மீக ஆசிரியரின் வழிகாட்டல் மூலம் திருமணம் நடத்தப்படுகிறதோ, அவர், நல்ல குழந்தையைப் பெற்றெடுத்தல், அறமுறையில் வாழ்ந்து உடல் மற்றும மன நலங்களைப் பேணிக் காத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய இல்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா இரகசியங்களையும் கற்பிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

ஆனால் இந்த நவீன காலத்தில் நம்முடைய திருமணங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன?

ஆன்மீக வழிகாட்டல் மற்றும் அறிவுரைகளில கவனம் செலுத்துவதற்ககுப் பதிலாக அர்த்தமற்ற, மூடத்தனமான, வழக்கத்திலிருந்து மறைந்து கொண்டு வருகிற எல்லாச் சடங்கு முறைகளையும் வைத்துக்கொண்டு பணத்தைச் செலவிடுவதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வியாபாரமாக மட்டுமே திருமணம் மாறி வருகிறது.



## எளிமையான திருமண முறை.

திருமணம் தொடர்பான எல்லாவிதமான ஆடம்பரம் செலவுகளையும் பெரும்பாலும் பெண்ணின் பெற்றோர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஓர் அவல நிலை இருந்து வருவதை மகரிசி கண்டிக்கிறார்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் இப்பிரச்சினையைப் பார்த்தால், 80 சதவீதப் பெற்றோர்கள் தங்களின் மகள்களின் திருமணங்களை முன்னிட்டுத் தவிர்க்க முடியாமல் ஆடம்பரமாகச்

செலவு செய்யு அவர்களின் சொத்துக்களையும் இழந்து மேலும் கடனுக்குள்ளும் தள்ளப்டுகிறார்.

இந்த விதமான நியாயமற்ற பெருள் செலவுகள் தவிர , ஒரு கொடுரமான மனிதாபிமானம் அற்ற சடங்கு முறையும் திருமண வைபவத்தோடு கூடுதலாகச் சோகக்பட்டுளள்து.

## கன்னிகாதானம்.

பெண்மையின்மீது கொள்ளப்பட்டுள்ள எல்லா விதமான மனிதாபிமானம் அற்ற செயல்களிலும் கொடியது ஒருவர் சொந்த மகளின் மீதுள்ள உரிமைகளை எல்லாம் தியாகம் செய்துவிட்டு, சமயச் சடங்கு என்ற போர்வையில் ஓர் ஆண் மகனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு, சிறிதுகூட இரக்க உணர்வு இன்றி, கணவனாக வந்துள்ள அந்த ஆண்மகனுக்குக் கைகளில் நீரை வார்த்துத் தத்தம் செய்து கொடுத்து விடுகிறார்கள்.

இச் செயல் அவளுடன் தங்களுக்குள் உறவினைப் பெண்ணின் பெற்றோர் துறத்தல் ஆகும்.

இதன் விளைவாக ஒரு கணவன் திருமணம் என்ற பெயரில் சமுதாயம் தனக்கு உரிமம் வழங்கி விட்டதாக நினைத்து அவனது தற்போக்கு மனம் போகிறபடி அவளை நடத்தலாம் என எண்ணி விடுகிறான்.

நாம் இதைப் பற்றியும், தேவையற்ற பிற சடங்கு முறைகளைப் பற்றியும் கருத்தூன்றி ஆராய்ந்தால், பெண்களின் வாழ்க்கையையும், மதிப்பையும் பண்பையும் பாதிக்கக் கூடிய பல உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

திருமணத்தால் கணவன் மனைவி என்ற புனிதமான உறவு மலர்கிறது.  ஒருவருக்கொருவர் என்ற பாசபிணைப்பு ஏற்படுகிறது.

உயிரும் உடலும் கலக்கிறது. உயிரில் கலந்த உறவாக மலர்கிறது. மனைவி என்ற அந்தஸ்தும் கணவன் என்ற அந்தஸ்தும் கிடைக்கிறது.

## திருக்குர்ஆன் தரும் உதாரணம்.

திருக்குர்ஆனில் வல்ல இறைவனான அல்லாஹ் கணவன் – மனைவிக்கு மிக அழகான ஒரு உதாரணத்தை கூறுகிறான்.

“(மனைவியர்களான) அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், (கணவர்களாகிய) நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்…”. 2:187

ஆடை தொடர்பாக நாம் கடைப்பிடிக்கும் ஒழுங்குகளை இல்லற வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். ஆடை விஷயத்தில் நாம் கடைப்பிடிக்கும் காரணிகள் என்ன?

ஆடை நமது மானத்தை மறைக்கவேண்டும் ஆடை நமக்கு அளவாக இருக்கவேண்டும்.

ஆடை நமது தகுதிக்கு தக்கவாறு அமையவேண்டும் ஆடை நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், கண்ணியத்தையும் பறை சாற்றவேண்டும்

இவ்வளவு விஷயங்களையும் ஆடை விஷயத்தில் நாம் கவனம் செலுத்தும்போது இறைவன் ஆடையாக உவமானித்து கூறும் இல்லறத்தில் நாம் எவ்வளவு பேணுதலை கடைப்பிடித்தாக வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆடை எவ்வாறு நமது மானத்தை மறைத்து நமது அந்தரங்கங்களை காப்பாற்றுகிறதோ அதைப்போலவே கணவன் – மனைவி இருவரும் தமது கற்பு விவகாரத்தில் கண்டிப்பான பேணுதலை கடைப்பிடிக்க வேண்டும்.

ஆடை எவ்வாறு நமது உடல் குறைபாடுகளையும், மானத்தையும் மறைக்கிறதோ அதைப்போலவே கணவன்-மனைவி இருவரும் ஒருவர் பிறரது குறைகளை பகிரங்கப்படுத்தாமல் இருத்தல் அவசியமாகும்.

நமது ஆடை எவ்வளவு கண்ணியமாகவும், நமது அந்தஸ்தையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்துவிதமாக அமையவேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறோமோ அதைப்போலவே நமது இல்லற வாழ்க்கையும் கண்ணியமாகவும், பண்பாட்டுடன் அமையவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

நமது ஆடையில் அழுக்கோ, கறையோ படிந்தால் அதனை அகற்றுவதற்கு நாம் முயல்வோம்.

உதாரணமாக விலை உயர்ந்த ஆடை ஒன்றை நாம் வாங்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம். வாங்கிய மறுநாளே அதில் ஏதேனும் கறை பட்டிருக்கலாம். தையல் விடுபட்டிருக்கலாம். உடனே நாம் அந்த கறையை நீக்க முயல்வோம்.

தையல் விடுபட்ட இடத்தில் மீண்டும் தையல் போட்டு அந்த ஆடையை கவனமாக பாதுகாப்போ.

அதைப்போலவே இல்லறம் என்ற ஆடை மிகவும் விலை மதிப்பற்றதாகும். அதனை மிகவும் கண்ணியமாக பாதுகாத்திட வேண்டும்.

## காதலுக்கும் திருமணத்திற்கும் உள்ள வித்தியாசம் !!

ஒரு ஞானியை அணுகிய சீடன், காதலுக்கும் திருமணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனக் கேட்டான்.

அதற்கு அந்த ஞானி, "அது இருக்கட்டும். முதலில் நீ ரோஜாத் தோட்டத்துக்குப் போ. அங்கே உனக்கு எது உயரமான ரோஜாச் செடி என்று தோன்றுகிறதோ, அதை எடுத்துக் கொண்டு வா. ஆனால் ஒரு நிபந்தனை. நீ எக்காரணம் கொண்டும் போன வழியே திரும்பி வரக் கூடாது." என்றார்.

கிளம்பிய சீடன் சிறிது நேரம் கழித்து வெறும் கையுடன் வந்தான். ஞானி, "எங்கே உன்னைக் கவர்ந்த உயரமான செடி? " என்று கேட்டார்.

சீடன் சொன்னான், "குருவே, வயலில் இறங்கி நடந்த போது முதலில் உயரமான ஒரு செடி என்னைக் கவர்ந்தது. அதை விட உயரமான செடி இருக்கக் கூடும் என்று தொடர்ந்து நடந்தேன். இன்னும் உயரமான ரோஜாச் செடிகள் தென்பட்டன.

அவற்றை விட உயரமான செடிகள் இருக்கக் கூடுமென மேலும் நடந்தேன். அதன் பிறகு தென்பட்டதெல்லாம் குட்டையான ரோஜாச் செடிகளே. வந்த வழியே திரும்ப வரக்கூடாது என்பதால் முன்னர் பார்த்த உயரமான செடியையும் கொண்டு வர முடியாமல் போய் விட்டது."

புன்முறுவலோடு ஞானி சொன்னார், "இது தான் காதல்..."

பின்னர் ஞானி, "சரி போகட்டும், அதோ அந்த வயலில் சென்று உன் கண்ணுக்கு அழகாகத் தெரிகின்ற ஒரு சூரிய காந்திச் செடியைப் பிடுங்கி வா. ஆனால் இப்போது கூடுதலாக ஒரு நிபந்தனை. ஒரு செடியைப் பிடுங்கிய பின் வேறு ஒரு செடியைப் பிடுங்கக் கூடாது."

சிறிது நேரத்தில் சீடன் ஒரு சூரிய காந்திச் செடியுடன் வந்தான். ஞானி கேட்டார், "இது தான் அந்தத் தோட்டத்திலேயே அழகான சூரிய காந்திச் செடியா..? "

சீடன் சொன்னான், "இல்லை குருவே, இதை விட அழகான செடிகள் இருக்கின்றன. ஆனால் முதல் முறை கோட்டை விட்டது போல் இந்த முறையும் விட்டு விடக் கூடாது என்ற அச்சத்தில் முகப்பிலேயே எனக்கு அழகாகத் தோன்றிய இந்த செடியைப் பிடுங்கி வந்து விட்டேன்.

நிபந்தனைப்படி, ஒரு செடியைப் பிடுங்கியபின் வேறு செடியைப் பிடுங்கக் கூடாது என்பதால் அதன் பிறகு இதை விட அழகான செடிகளை நான் பார்த்தபோதும் பறிக்கவில்லை".

இப்போது ஞானி சொன்னார், "இது தான் திருமணம்.."

## தந்தைக்கு நேரும் உணர்வுப் போராட்டம்

பெண்களுக்கு மட்டுமே இது நடக்கிறது. பிறப்பதற்கு ஒரு வீடு, திருமணத்துக்கு பின் புகுந்துகொள்ள ஒரு வீடு. ஒவ்வொரு பெண்ணுக்கும் அத்தகைய இடம்பெயரும் தருணம் உணர்வுப்பூர்வமானது.

அந்தவேளையில், பெண்ணைவிட பெண்ணைப் பெற்றவர்களுக்கு குறிப்பாக தந்தைக்கு நேரும் உணர்வுப் போராட்டம் சொற்களில் அடங்காதது.

அவ்வாறாக உணர்ச்சிவசப்பட்ட ஒரு தந்தை தனது மகளின் திருமண விழாவில் ஆற்றிய உரையை ஃபேஸ்புக் பகிர்வில் படிக்க நேர்ந்தது.

மிகவும் உருக்கமான, யதார்த்தமான, இயல்பான அந்த பதிவு இதோ:

"இந்த உரையை 'எனது மகளின் புதிய குடும்பத்தினரே' என்று உங்களை வரவேற்று ஆரம்பிக்க வேண்டும் என்றே நினைத்தேன். ஆனால், அது பொருத்தமாக இருக்காது என்பதால் கடைசி நிமிடத்தில் அதை தவிர்த்துவிட்டேன்.

அவள் எப்போது திருமண பந்தத்தில் இணைந்தாளோ அப்பொழுதே உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளாகிவிட்டாள். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை.

இன்னும் சொல்லவேண்டும் என்றால் அவள் உங்கள் குடும்பத்தினருக்கே எப்போதும், எதிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

எங்கள் மகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். இனி, இளைப்பாற விரும்புகிறோம். அதை அனுபவிக்க தயாராகிவிட்டோம்.

ஆனால், அதற்கு நீங்கள் அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

நான் எதிர்பார்ப்பதைவிட நீங்கள் அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அவள் என் வீட்டில் துள்ளித் திரிந்ததைவிட உங்கள் வீட்டில் மகிழ்ச்சி துள்ளளோடு இருப்பாள் என நம்புகிறேன்.

இருந்தாலும், எல்லா சராசரி தந்தையைப் போலவும் நான் இதை திரும்பத் திரும்ப சொல்கிறேன் "தயவு செய்து அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்"

அவள் எப்போதுமே எனக்கு பாரமாக இருந்ததில்லை. இனியும் ஒருபோதும் பாரமாக கருத மாட்டேன். ஏனெனில், என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும், என் இதழ்களில் புன்னகை பூப்பதற்கும் காரணம் அவளே. இருந்தும் அவளை நான் திருமணம் செய்து கொடுக்கிறேன்.

ஏனென்றால் அது ஓர் இயற்கை நியதியாக இருக்கிறது. கலாச்சாரத்துக்கு கட்டுப்பட்டுமட்டுமே அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்கிறேன். என் வீட்டின் மகிழ்ச்சிப் பேழை உங்கள் வீட்டில் ஒளி வீச வருகிறது.

எனது உலகத்தை உங்களுக்கு தாரை வார்த்துத் தருகிறேன். அந்த உலகம் என்றென்றைக்கும் அழகாக இருப்பதை நீங்களே உறுதி செய்ய வேண்டும்.

எனது இளவரசியை உங்களிடம் அனுப்புகிறேன். அவள் உங்கள் வீட்டின் ராணியாக திகழ வழிவகை செய்யுங்கள்.

எனது ரத்தமும், வியர்வையும் அவளை ஆளாக்கியிருக்கிறது. இப்போது அவள் மாசறு பொன்னாக இருக்கிறாள்.

அவள் உங்கள் வீட்டுக்கு கொண்டு வரும் அன்பு, அக்கறை, அரவணைப்பு, அழகு, இதம் என எல்லாப் பண்புகளுக்கும் பரிசாக அவளுக்கு மகிழ்ச்சியைத் தாருங்கள். ஆம், அவளை தயவுசெய்து மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

எப்போதாவது அவள் சிறு தவறு செய்துவிட்டாள் என நினைத்தால் அவளை தாராளமாக திட்டுங்கள் ஆனால் அதேவேளையில், அவள் மேல் செலுத்தும் அன்பில் குறைவைக்காதீர்கள்.

அவள் மிகவும் நளினமானவள். அவள் எப்போதாவது துவண்டு போய் இருந்தால் அவளுடன் இருங்கள்.

உங்களது சிறு கவனம் அவளுக்கு போதும், ஆறுதல் தர. அவள் உடல்நலன் பாதிக்கப்பட்டால் அவள் மீது அக்கறை காட்டுங்கள். அதுவே அவளுக்கு அருமருந்து.

அவளது பொறுப்புகளில் எப்போதாவது விலகிவிட்டால் அதைச் சுட்டிக்காட்டுங்கள். அதேவேளையில், 'நீ இன்னும் வாழ்க்கையை கற்றுக் கொண்டிருக்கிறாய் என நாங்கள் நம்புகிறோம்' என அவள் உணரும்படி நடந்து கொள்ளுங்கள்.

அவளைப் புரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

அவளை மாதக் கணக்கில் காண முடியவில்லை என்றாலும் பரவாயில்லை, அவள் குரலை தினம் தினம் கேட்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை.

உங்கள் வீட்டுக்கு வந்தபிறகு அவளுக்கு என் நினைவே வரவில்லை என்றால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். என் மகளின் மகிழ்ச்சி மட்டுமே என் வாழ்நாள் லட்சியம். எனவே, தயவு செய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

அன்பிற்குரிய மருமகனே...இந்த வார்த்தைகளின் அர்த்தம் இப்பொழுது உங்களுக்கு புரியாமல் போகலாம். ஆனால், நாளை நீங்கள் ஒரு மகளைப் பெற்றெடுக்கும் பாக்கியவான் ஆகும்போது எனது வார்த்தைகளின் அர்த்தம் புரியும்.

அப்பொழுது உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் 'என் மகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்' என்று சொல்லும். எனவே, தயவு செய்து எனது மகளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த உரையை மகளைப் பெற்ற ஒவ்வொரு தந்தைக்கும் அர்ப்பணிக்கிறேன்.

# 6.ஒருவனுக்கு ஒருத்தி

ஒருவனுக்கு ஒருத்தி" என்பது இல்லற நெறி, சமுதாய நெறி. ஒருவனுக்குப் பல பெண்கள் என்பது நெறி அல்ல, வெறி. ஆணாதிக்கச் சதி.

குடும்பத்தின் கட்டமைப்புச் சிதையாமல் இருக்க வேண்டுமானல், ஒவ்வொருவர் மனத்திலும் "ஒருவனுக்கு ஒருத்தி" என்னும் கட்டமைப்பு சிதையாமல் இருக்க வேண்டும்.



தமிழ் அகப்பொருள் மரபைப் பொருத்தவரை, "ஒருவனுக்கு ஒருத்தி" என்னும் கட்டமைப்பு, "ஒருத்திக்கு ஒருவன்" என்ற அளவில்தான் இருந்துள்ளது.

கற்புநெறியின் பெருமையையும் சிறப்பையும் உலகெங்கும் எடுத்துச் செல்வவது நமது பாரத நாடே ஆகும். பாரத நாட்டின் பாரம்பரியங்களில் கற்பு நெறியும் ஒன்று.

"பொய் சொல்லும் இந்துவையோ, கற்பிழந்த இந்துப் பெண்ணையோ நான் இந்தியாவில் பார்க்கவில்லை" என்று பழங்கால இந்தியாவைப் பற்றி, ஒரு கிரேக்க வரலராற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

## அமெரிக்க மாது மகரிசியிடம் கேட்ட வரம்

அமெரிக்க பெண் ஒருவர் வேதாத்திரி மகரிசியிடம் கேட்கிறர்கள்.

உங்களைப் போன்று பல அறிஞர்களைக் கொண்ட நாடு இந்தியா. ஆனால் கற்புநெறி என்ற பெயரால் உங்கள் பெண்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதோ? இது நியாயமா?

ஒரு பெண் விரும்பினால் அவள் பலரோடு தொடர்பு வைத்துக் கொள்வதில் என்ன தவறு? ஏன் கட்டுப்பாடு விதிக்க வெண்டும்?

"அம்மா இதற்குக் காரணம் இருக்கிறது. ஒரு ஆணினுடைய விந்து பெண்ணின் கருப்பையில் சேர்ந்தால் அதை எடுத்துத் வசப்படுத்திக் கொள்வதற்கோ அல்லது கழிவாக மாற்றி வெளியேற்றவதற்கோ ஒரு குறிப்பிட்ட காலம் வேண்டும். குறைந்தது 48 மணி நேரம் வேண்டும்.

அதற்குமுன் அப்பெண்ணின் கருபபையில் இன்னொரு ஆடவனின் விந்து விழுமானால் அவை இரண்டும் சேர்ந்து கிருமிகாளாக மாறிவிடும்.

மனிதர்களின் வியர்வைகள் (கழிவுகள்) தலையில் சேர்ந்தால் பேனாக மாறி அவனையே உண்டு வாழ்கிறது.

மனிதனில் உண்டாகும் கழிவுகளே மூட்டைப் புச்சியாக உருப்பெற்று மனிதனுடைய இரத்தத்தையே உணவாகக் கொள்கிறது.

அதேபோன்று இரு வேறு விந்துகளும் கிருமிகளாக மாறி அங்கேயே உணவு எடுத்துக் கொள்ளும்.

இரத்தத்தில் வித்தியாசம் இருப்பதுபோல் விந்துவிலும் விதியாசம் உண்டு. அதனால் அப்பெண்ணின் கருப்பயையில் அக் கிருமிகள் ரணங்களை உண்டாக்கிவிடும்.

இதனால் இப்பெண்ணிற்குப் பால்வினை நோய்கள் வந்து விடும்.

பிறகு இந்தப் பெண் உறவு கொள்கிறவர்களுக்கெல்லாம் இந்நோய் பரவிவிடும். இந்த நோய் பரவினால் ”எக்ஸிமா என்ற சரும நோய் வந்துவிடும்.

இந்தச் சரும நோய் எந்நேரமும் ஒரு நமைச்சலை உண்டு பண்ணும். இதனால் ஒருநாள்கூட உடலுறவு இன்றி அப்பெண்ணால் உறங்கவே முடியாது.

அப்பெண் மானத்தை விட்டு வாழத் துணிவாள். இதனால் அவள் உடல் நலம் கெட்டுவிடும். மேலும் பல நோய்கள் வந்து மரணம் வந்துவிடும்.

இதனால் எங்கள் நாட்டில் கற்புநெறியைப் பெண்கள் உயிரைவிட மேலாகப் போற்றுகிறார்கள் என்று விளக்குகிறார்கள்.



மகரசியின் விளக்கம் அமெரிக்க மாதுவை சிந்திக்க வைத்தது.

சிறிதுநேர அமைதிக்குப் பிறகு ”சரி, திருமண விஷயத்திலும் கூட உங்கள்நாட்டின் பெண்களுக்கு சுதந்திரம் இல்லையோ?

பெற்றோர்கள் காட்டும் வரனைத்தானே மணந்து கொள்ள வேண்டியுள்ளது?

”ஆம் அம்மா. இந்தியா ஒரு வெப்ப நாடு. அதனால் இளவயதில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பழகும்போதே தவறு நடந்து விடுவதற்கான சூழ்நிலை அதிகம்.

விளைவால் கர்ப்பம் ஏற்பட்டால் அதற்காக ஆணைவிட்டு பெண்ணுக்கே சின்னம் வைக்கும்.

பாலுறவின் பின் விளைவுகளைப் பெண்களே அதிகம் சமாளிக்க வேண்டியுள்ளது.

ஆகவே. பெண்களே இதை அதிகப் பொறுப் புணர்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும், திருமணத்திற்கு முன் பிறக்கும் அக்குழந்தையும் பாதிக்கப்படும் அல்லவா?

மற்றொரு காரணம் பாரம்பரியத்தை அறிதல். அவர்கள் முன்னோர் வாழந்த முறை.

அவர்களின் குணத்தை வைத்து தங்களுடைய பெண்ணின் குணத்திற்கும் , சூழ்நிலைக்கும் ஒத்துவருமா என்று அனுபவம்மிக்க பல பெரியவர்கள் கணித்து அறிவார்கள்.

இது அவர்களின் எதிர்கால வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள உதவும்.

அதனால்தான் இந்தியாவில் பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் திருமணம் பாரம்பரியமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, இந்தியா பொருளாதார ரீதியல் பின்தங்கிய நாடு. ஒரு குழந்தை பிறந்தது என்றால் அதை இரண்டு பேருமே கூடி வளர்க்கக் கூடிய அளவிற்கு ஒரு பொறுப்புணர்ச்சி வேண்டும்.

இதனால் ”ஒருவனுக்கு ஒருத்தி” என்று ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாகக் கற்பு நெறியை வைத்திருக்கிறார்கள் என்று விளக்கமாக கூறினார்கள்.

விளக்கங்களைக் கேட்ட மாது சிந்தனையில் இலயித்திருந்தார். பின்னர், மகரிசியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு உள்ளம் உருக வேண்டினார்.


“Swamiji, Please give me a born; If at all there is another birth for me. Let me be adaughter in and Indian family”

"சுவாமிஜி! எனக்கு ஒரு வரம் தர வேண்டும் அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமானால், நான் இந்தியக் குடும்பம் ஒன்றில் மகளாகப் பிறக்க எனக்கு அருளுங்கள்."

# 4. மனைவி என்பவள்...

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் போது அவர்களுக்கிடையே ஏற்படுகின்ற புதிய உறவில் அந்தப் பெண் அவளை மணந்து கொண்ட ஆணுக்கு **மனைவி** என்ற உறவு முறையினள் ஆகின்றாள்.

அன்பின் உருவமாகவும் அறத்தின் உயரமாகவும் விளங்குபவள் பெண். ஒருவன் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் நடததுவதற்கு உதவியாக இருப்பவள் பெரும்பாலும் மனைவி என்ற பெண் ஆவாள்.




மனைவி என்ற இந்த உறவுக்குரிய கடமைகளும், உரிமைகளும் சமுதாயங்களின் பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையில் வேறுபட்டு அமைகின்றன.

மேலும் மனைவி என்பவள் அந்த ஆணின் வாழ்க்கைக்கு மிக நெருங்கிய

தொடர்புடையவள். அவனது வெற்றி மற்றும் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிப்பவள் ஆகிறாள்.

குடும்ப உறவுகளைப் பேணி அதன் மூலம் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சிகளைத் தருபவள்.

மனைவி என்பவள் மணமான நாள்முதல் பிணமாகும் நாள்வரை ஒருயிராய் உறுதுணையாய் உடன் நிற்பவள்.

மனைவியை மதிப்பது அன்பு செய்வது – நாகரீகத்தின் முக்கிய காரணிகளுள் ஒன்று.

கணவனுக்கு அறிவாட்சி திறன் இருக்கிறது என்றால், மனைவிக்கு அன்பு கொள்ளும் திறன் இருக்கிறது....!!!

இதனால் அவளுக்கு அறிவில்லை என்று அர்த்தம் இல்லை.......!!!

அவளுக்கும் அறிவு இருக்கிறது, ஆனால் அதை மேம்படுத்த அவளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்......!!!

ஏனெனில், அன்பு அவளுடன் பிறந்தது......!!!

அவளுக்கு அதிக இரக்கம், அதிக கருணை, அதிக புரிந்து கொள்ளும் தன்மை உண்டு.......!!!

கணவனும் மனைவியும் ஒரே வாத்தியத்தின் இரு வேறு தந்திகள்......!!!

இரு தந்திகளும் இணைந்தால் தான் இசை என்னும் இனிமையான நாத ஒலி எழும்பி இல்லறத்தை நல்லறமாக அமைக்க முடியும்......!!!

மனைவிக்கு வாய்ப்பு அளித்தால் மட்டுமே எதுவும் சாத்தியம்........!!!

சிறையிட்டால் அவளின் அன்பும், கருணையும் சிதைந்துவிடும்........!!!

அவள் ஒரு நவரச நாடகம்

**ஆனந்த** கவிதையின் ஆலயம்

தழுவிடும் இனங்களில் மானினம்

தமிழும் அவளும் ஓரினம்

மரகத மலர் விடும் பூங்கொடி

மழலை கூறும் பைங்கிளி

நிலவில் ஒளிவிடும் மாணிக்கம்

என் நெஞ்சில் தந்தேன் ஓரிடம் ஆ..ஹா....




மனைவியை மதிப்பது நாம் அவருக்கு காட்டும் சலுகையோ , உபகாரமோ இல்லை.

உலகில் உள்ள எந்த ஒரு மனிதரையும் அவமதிக்க நமக்கு உரிமை இல்லை. எந்த மனிதரையும் மரியாதையுடன் அணுகுவது நடத்துவதே நாகரீகமாகும்.

ஒரு மனிதர் பிறர்க்கு தீங்கு விளையும் வகையில் நடந்து கொண்டால் அன்றி அவரை விளக்குவதோ, மரியாதையை குறைப்பதோ கூடாது.

இவ்வாறு இருக்க நம்முடன் வாழும் மனைவியை மரியாதைக் குறைவாக நடத்துவது நாகரீகம் அல்ல.

நம்முடைய நாகரீக த்தை நாம் சந்திக்கும் நண்பர்கள், உறவினர்கள், சக பணியாளர்கள் இவர்களிடம் காட்டினால் மட்டும் போதாது.

நம்முடைய நாகரீகத்தை நம்முடைய வீட்டிலே துவங்க வேண்டும். நம்முடன் வாழும், தினமும் நம்மை எதிர்கொள்ளும் , வாழ் நாள் முழுவதும் நமக்கு உறுதுணையாக இருந்து , நமக்கு உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த மனிவியிடம் நாம்

நாகரீகமாக நடந்து கொள்கிறோமா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

"மனைவி என்பவள் கணவனுக்கு கண்ணாடியை போன்றவள் ஆவாள். . ! கணவனாகிய நீங்கள் சிரித்தால் அவளும் சிரிப்பாள். . ! நீங்கள் அழுதால் அவளும் அழுவாள். . ! ஆனால் நீங்கள் முறைத்தாலோ அல்லது ஏசினாலோ அவள் உடைந்துவிடுவாள். . !

தயவு செய்து உங்களின் கவலைகளை கண்ணாடியிடம் பரிமாறுங்கள். . ! கோபத்தை காட்டி அதனை உடைத்து விடாதீர்கள்...!

மனைவியை மரியாதையுடன் நடத்துவது இருக்கட்டும் மனைவியைத் துன்புறுத்தாமல் இருக்கிறோமா என்று சிந்திக்க வேண்டும்.

மனைவியை திட்டுவது, அடிப்பது, துன்புறுத்துவது.... கொடூரக் காட்டு மிராண்டித்தனமே.

காட்டுமிராண்டியாக கற்கால த்தில் வாழ்ந்த மனிதன் நம்மை விட எவ் வளவோ மேலானவன். அவன் கல்வி பயின்றதில்லை, நூல்களைக் கற் றதில்லை.

ஆனாலும் தான் தேர்ந்தெடுத்த துணைவியை அன்பு செய்து அரவணை க்கும் பண்பாட்டை வளர்த்து விட்டான்.

இன்றைக்கு இத்தனை கல்வி கற்று நூல்கள் படித்தும் மனைவியை அன்பு செய்து மதித்து அவருக்கு துன்பம் தராமல் வாழும் பாங்கை நாம் கைக் கொள்ளுகிரோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தன்னுடைய மனைவியின் முழு அன்பையும் பெற்று விட்ட ஒருவன் வாழக்கையில் எல்லா செயல்களையும் செய்து முடித்தவன் ஆகிறான் என்கிறார் சுவாமி விவேகா னந்தர்.

தன்னுடைய மனைவியின் கண்ணிலிருந்து வடியும் ஒவ்வொரு சொட்டு கண்ணீருக் கும் அத்தனை வருடம் நரகத்தில் இருப்பான் என்கிறார் மகாசன்னிதான ம் ஸ்ரீ வித்யா தீர்த்தர் ..

நரகம் என்று ஒன்று இருக்கிறதா என்று நமக்கு தெரியாது. ஆனால் மனைவியை திட்டுவது, அடிப்பது, அவமதிப்பது... போன்ற செயல்களில்

ஈடுபடுவோர் இங்கே பூலோகத்திலேயே தன்கள் மனைவியின் வாழ்க்கையை நரகமாக்கி தங்கள வாழ்க்கையையும் நரகமாக்கிக் கொள்ளுகின்றனர என்பதை நாம் பகுத்தறிவிலே அறிந்து கொள்ளலாம்.

அதே நேரம் காலம் விரைவாக மாறி வருகிறது! காட்டுமிராண்டி செயலில் ஈடுபட்டு மனைவியை துன்புறுத்தும் கணவர்கள் தங்களை திருத்திக் கொள்ள வேண்டிய து காலத்தின் கட்டாயம்.



மனசாட்சி அடிப்படையில் நீ நாகரீகமாக நடந்து கொள் அல்லது சட்ட பூர்வமாக உனக்கு காப்பு போடப்பட்டு ஆப்படிக்கப் படும் என்கிற நிலையை கொடுமைக்கார கணவனுக்கு
உணர்த்த தைரியமுள்ள நங்கைகள் தயாராகி விட்டனர்.

மனைவி என்பவள் ஒரு கம்பளம் மாதிரி, அதைக் கொண்டு உன்னை போற்றினால் தொந்தரவாக இருக்கிறது. ஆனால் அதை தூக்கி அப்புறப் போட்டால் உனக்கு குளிராக இருக்கிறது ...

இறைவனால்
எனக்காக
எனக்கு மட்டும்
அளிக்கப் பட்ட
உயிருள்ள பரிசு அவள்.......

தேடித் தேடி
அலைந்தேன் அவளைக் காண
ஆனால்
தேடி வந்தாள்
என் வாழ்வில் இணைய..

மனங்கள் இணைந்தன
நம்
குடும்பங்களும் இணைந்தன

தோல்விகளே
கண்டு வந்த
என் வாழ்வில்
நீ தான் எந்தன்
முதல் வெற்றி.....

எப்போதும் உந்தன்
புன்னகை முகம் கண்டால்
போதுமடி எனக்கு
உணவு ஒன்றும் வேண்டாம்.....

உன்னை மட்டுமல்லாது
என்னையும்
நின் சேயையைப் போல்
கவணிக்கும்
நீ போதுமடி எனக்கு.......

தோல்விகளால் துவண்ட
எனக்கு இறைவன் அளித்த
ஆறுதல் பரிசு.......

என்மீது நான் கொண்ட
நம்பிக்கையை விட
உன்மீது நான் கொண்ட
நம்பிக்கை அதிகமடி

உன் ஆறுதல் வார்த்தைகள்
போதுமடி..... அதற்காகவே
எத்தனை முறை வேண்டுமானாலும்
இன்னும் தோற்க
தயாராக உள்ளேன்.......

நின் தூக்கத்திலும்
என்மீது கொண்ட
அன்பை
நான் உணர்கின்றேன்.....

உன்னைப் பற்றி
கவிதை எழுதத் தான்
நாட் கணக்கில்
வார கணக்கில்
மாத கணக்கில்
யோசிக்கி ன்றேன்.... ஆனால்
வார்த்தைகள் ஒன்றும்
தோன்ற வில்லை......

அப்போது தான்
என் மனச் சாட்சி சொல்லியது
" இதயத்திற்கு அப்பால்
உள்ளவர்களை நினைத்து
கவிப் பாவும் பாடலாம்
கட்டுரையும் எழுதலாம்....
ஆனால் உன்
இதயமாகவே வாழ்பவளைப் பற்றி
எழுத இன்னும்
உலக மொழிகளில்
வார்த்தைகள் இல்லை நணபரே"" என்று....

என்
வாழ்க்கைப் பயணத்தின்
நின் முகங்கண்டே
என்
இறுதி மூச்சை
நிறுத்த வேண்டும்...



மனைவி நலம் பேணும் கணவர்கள்.

உன்னை உருவாக்கிய தாய்க்கு
பிறகு
உன் வம்சத்தையே உருவாக்கும்
இன்னொரு தாய் தான் மனைவி..

. உங்கள் தலைமுறை விருத்தியடையவும்
நீங்கள் ஆண்மகன் என்பதை உணர்த்தவும்
உன்னை தந்தையாக தகுதி உயர்த்தவும்

தன் உயிரை பணயமாக வைத்து
வலிக்கும் என்று தெரிந்தே தன் வயிற்றை
கிழித்துக் கொள்கிறாள் பிரசவத்தின் போது பெண் .....

பிரசவத்திற்கு பின் உடல் அழகு போனாலும்
பரவாயில்லை என்று உன் தகுதியை
குடும்ப தகுதியை சமூகத்தில் உயர்த்துகிறாள்.
நீ ஆண்மகன் என்பதை நிரூபிக்கிறாள் பெண் ....

உடலை அழித்து வேதனையை தாங்கி
அவள் உன் தகுதியை உயர்த்துகிறாள்..

உன்னை உருவாக்கிய தாய்க்கு பிறகு
உன் வம்சத்தையே உருவாக்கும் இன்னொரு தாய் தான் மனைவி..

## மனைவி கணவனிடம் எதிர்பார்க்கும் 37 விசயங்கள் :-

01. அன்பாக , பிரியமாக இருக்க வேண்டும்.
02. மனது புண்படும்படி பேசக் கூடாது.
03. கோபப்படக்கூடாது.
04. சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது
05. பலர் முன் திட்டக்கூடாது.
06. எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்க கூடாது.
07. முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
08. மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
09. சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்
10. மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
11. வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும் பாராட்ட வேண்டும்.
12. பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
13. வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும்.

14. மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
15. ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
16. பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
17. ஒளிவு மறைவு கூடாது.
18. மனைவியை நம்ப வேண்டும்.
19. முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
20. மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பாராட்டக் கூடாது.
21. அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்பட வேண்டும்.
22. தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
23. உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
24. சின்ன, சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
25. சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
26. குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் ‘இது உன் குழந்தை ‘ என்று ஒதுங்கக் கூடாது.
27. அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும். ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
28. நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
29. சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
30. எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டுச் சொல்ல வேண்டும்.
31. சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
32. எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
33. மனைவியின் பிறந்த நாள் தெரிய வேண்டும்.
34. மனைவிக்குப் பிடித்தவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
35. பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
36. மனைவி வீட்டாரைக் குறை சொல்லக் கூடாது.
37. கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்.

திருமணம் முடிந்தவுடன் கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாழ்க்கையைத் துவங்குவார்கள்.

வார்த்தைகளை விட, நமது செயல்களில், நமது நடவடிக்கைகளில் மரியாதையை வெளிப்படுவது அதிக பயன் தரும். உதாரணமாக, மனைவி சமையல் செய்து வைத்திருக்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த சமையலுக்கான மரியாதை என்ன தெரியுமா ? ஆர்வத்துடனும், பொறுமையுடனும் அதை ருசித்துச் சாப்பிடுவது தான்.

உணவகங்களுக்குச் செல்லும் போது உணவுகளின் ருசியைப் பாருங்கள். விலையைப் பாருங்கள். இல்லங்களில் சாப்பிடும்போது சாப்பாடு தயாரித்தவரின் மனதையும், உழைப்பையும், அன்பையும் பாருங்கள்.

அதுவே முக்கியமானது ! உப்பு இல்லை, காரம் இல்லை என்று சொல்லி உணவை நிராகரிப்பவர்களும், விலக்கி வைப்பவர்களும் அதிகபட்ச அவமரியாதையைச் செய்கிறார்கள்.

பிறர் முன்னிலையில் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பேசும்போது ஒருமையில் அழைத்துப் பேசுவது, அதிகாரத் தொனியில் பேசுவது, எரிச்சலுடன் பேசுவது, இளக்காரமாய்ப் பேசுவது, மரியாதை குறைவாய் பேசுவது போன்றவையெல்லாம் ரொம்பவே தவறான விஷயங்கள்.

கணவன் தானே, மனைவி தானே என நீங்கள் நினைப்பதில் தவறில்லை. ஆனால் அவர்களும் இந்தச் சமூகத்தில் ஒரு தனி மனிதர், அவருக்கும் உணர்வுகள், சுயமரியாதை உண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள்.

ஒரு விஷயத்தை முடிவு செய்து விட்டு உங்கள் வாழ்க்கைத் துணையிடம் சொல்வதற்கும், வாழ்க்கைத் துணையுடன் இணைந்து பேசி ஒரு விஷயத்தை முடிவு செய்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு.

வெறும் தகவல் சொல்லும் ஒரு மனிதராகவோ, உங்கள் கட்டளைகளை ஏற்று நடக்கும் ஒரு மனிதராகவோ மட்டும் அவரைப் பார்க்கவே பார்க்காதீர்கள்.

அது அவரை அவமரியாதை செய்வதற்குச் சமம். இருவரும் சேர்ந்து ஒரு விஷயத்தைப் பேசி முடிவெடுப்பதே நல்லது.

உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நீங்கள் தரமுடிந்த அதிகபட்ச மரியாதை அவரை முழுமையாய் நம்புவது. அதே போல, அந்த நம்பிக்கைக்கு உரியவராய் நீங்கள் இருப்பது பதில் மரியாதை ! இது மட்டும் அழுத்தமாய் இருந்தாலே போதும். வாழ்க்கை ஆனந்தமாய் ஓடும்.

நள்ளிரவில் வாழ்க்கைத் துணையின் செல்போனை நோண்டுவது, டைரியை புரட்டுவது, கணினியை ஆராய்வது போன்ற இத்யாதிகளெல்லாம் நீர்த்துப் போன நம்பிக்கையின் அடையாளங்கள்.

மாற்றம் உங்களிடமிருந்து தான் துவங்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து துவங்கவேண்டும் என நினைப்பது நீங்கள் உங்கள் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான  மரியாதையைக் கொடுக்கவில்லை என்பதன் அடையாளமே!

இரவு நேரத்தில் கணவன் உண்டது போக
மீதமிருப்பதை உண்ணலாம் என்று
காத்திருந்து ...
கணவனும் வந்து ...
அவன் பக்கத்திலிருந்து பரிமாறி ...
பேச்சு சுவாரஸ்யத்தில்
கணவன் மிச்சமில்லாமல்
உண்டு முடிக்க ...
மலர்ந்த முகத்தோடு
பாத்திரங்களை ஒதுக்கி விட்டு
வரும் மனைவியிடம் ....
"நீ சாப்பிடவில்லையா ?"
என்று கணவன் கேட்க ....
"எனக்கு பசியாக இருந்தது. அதனால்
நீங்கள் வருவதற்கு முன்னாலேயே
உண்டு முடித்து விட்டேன்" என்று சொல்லும்
மனைவியை வரமாகப் பெற்றவன்....
என்ன செய்வான் ?
சட்டையை மீண்டும் மாட்டிக்கொண்டு
வெளியே கிளம்பும் கணவனிடம்
"இப்போதானே வந்தீங்க.
திரும்பவும் எங்க போறீங்க ?" என்று
கேட்டவளுக்கு ...
"ஒரு மாத்திரை வாங்க மறந்துவிட்டேன்"
என்று கூறிவிட்டு ...
சற்று தூரம் அலைந்து
நல்ல ஹோட்டலில்
ருசியான உணவு வாங்கி வந்து ...
"இந்தா சாப்பிடு..." என்று சொல்லும்போது
அவள் கண்கள் லேசாக கசிய...
உண்ணுவாளே....
அதற்குப் பெயர்தான் அழகான வாழ்க்கை

smi

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# 8. கணவன் மனைவி உறவு

உறவு என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து தமக்கு மட்டும் இன்பம் தேடிக்கொள்வதல்ல. வருங்கால சந்ததிக்கே நன்மை தேடிக்கொள்வதாகும்.

"குடும்ப வாழ்வில் கணவன் மனைவி உறவு புனிதமானது, தெய்வீகமானது.

ஆண் பெண் இருபாலரும் வரையறையற்ற அன்பால் வாழ்க்கைத் துணைவர்களாகி ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும் உலகில் வாழ்ந்து பேரின்ப நிலையை எய்த ஏற்றபடி இறை ஆற்றலால் அமைக்கபட்டிருப்பதே ஆண் பெண் எனும் இரண்டு வகையில் அமைந்த பால்வேறுபாடுள்ள பிறப்புகள்.

ஆண்களும், பெண்களும் அநேகமாக சரிபாதியாக உள்ள மனித குலத்தில் அந்த பாதி எண்ணிக்கையுடைய ஆண்களைப் பெற்றெடுத்தவர்கள் பெண்களேயாம்."




பெண்மையின் பெருமையினை உணர்வதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

எந்த ஒரு ஆணோ, பெண்ணோ பிறக்க வேண்டும் என்றால் பெண்ணின் கருப்பையில் உருவாகி, அவள் ரத்தத்தையே உடலில் ஏழு தாதுக்களாக ஏற்றுக் கொண்டு, முழு உருவம் பெற்று வெளி வருவது ஒரு வியப்பு அல்லவா.

இறைநிலையின் பெருமையை அதன் பேரறிவின் தன்மையை எடுத்துக்காட்டுகின்ற "இயற்கையின் வெளிச்சச் சுடர்" பெண்மை ஆகும்.

மேலும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு பெண்ணின் துணையும், உதவியும் எந்த அளவு கலந்து இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு யாராலும் கூற முடியுமா?

இத்தகைய பெரும் வியப்பான பெண்மையை மனித இனம் புரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாக பெண்மைக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்று நான்கு குணங்களை வர்ணிப்பார்கள்.

மேலும் ஒரு தெய்வீகக் குணம், தியாகம் என்பது பெண்மையிலேயே இயல்பாக அமைந்திருக்கிறது என்பதும் நினைவு கொள்ள வேண்டும்.

மனித உற்பத்தி, வாழ்க்கை இவற்றில் பெண்மையின் பங்கினை யூகித்துப் பார்ப்போம்.

கரு வளரும்போது பத்து மாதங்கள் வயிற்றுக்குள் பெண் தான் வைத்துச் சுமக்கிறாள்.

பிறந்த பிறகு அதன் வளர்ச்சியில் பெரும் பகுதி காலத்தில், அதே குழந்தையைச் சுமந்து கொண்டும் இருக்கிறாள்.

இவ்வாறு இன்னும் பல நிலைகளிலும் குடும்பப் பொறுப்பில் உள்ள எல்லாச் சிக்கல்களையும், துன்பங்களையும், கடமைகளையும் சுமந்து கொண்டிருப்பதிலும் ஆண்களை விடப் பெண்கள்தான் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

இத்தகைய பெண்ணினத்திற்குப் பொருளாதாரத் துறையில் சமத்துவம் அளிக்காமல் எக்காலத்தும் அடிமையாகவே நடத்துகின்ற ஆண் மக்களின் செய்கை இறைநிலைக்கே செய்யக் கூடிய முரண்பட்ட காரியம், பாவ காரியம் ஆகும்..

பெண்களால் பெரிய நன்மைகளை எல்லாம் தொடர்ந்து பெற்ற ஆண்கள் கூட மனைவியை பாராட்டுவதற்கு ஒரு கஞ்சத்தனம் !

ஒரு சிறிய பாராட்டு வாய் திறந்து சொன்னால் அவள் கை ஓங்கிவிடுமாம் !

தானாக தன்னுடைய மனைவியைப் பாராட்டி அதிலே இருந்து அந்த மகிழ்ச்சியை அடையக்கூட மறுக்கக்கூடிய உள்ளங்களுக்கு ' அன்பு' என்பது எங்கே உண்டாகும்?

இதற்கு அடிப்படை காரணம் என்ன என்றால் நீண்டகாலமாகப் பழக்கத்தில் பெண்களை சாதாரணமாக உபயோகப்படக்கூடிய பொருளாகவே மதித்து மதித்து, அதே மாதிரி நிலையிலே பல நூல்கள் வந்ததனால் அந்தக் கருத்து இன்றும் நிலவி வருகிறது.

பெண்களுக்குச் சமஉரிமை மாத்திரம் இல்லை, பெரிய மதிப்பும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அதுதான் ஒரு கவியிலே எழுதி இருக்கிறேன் " என்கிறார் வேதாத்திரிமகரிசி.

"பெண் வயிற்றி லுருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர்,".

என்று, தாய்க்குலத்திற்கு நாம் ஏன் அவ்வளவு மதிப்புத்தர வேண்டியதாக இருக்கிறது.

( அவினாசி அருகே ஆட்டையம்பாளையத்தில் நடந்த மனைவி நல வேட்பு நாள் விழாவில் நடிகை தேவயானி அவரது கணவர் இயக்குநர் ராஜகுமாரன் அவர்களையும் கலந்து கொண்ட தம்பதிகளை படத்தில் காணலாம்.)




எல்லோருமே பெண்களால் அளிக்கப்பட்ட, பெறப்பட்ட பிள்ளைகள்தான் என்பதை உணர்ந்தாலே போதும்.

சம உரிமை மாத்திரம் அல்ல, இன்னும் பிரத்தியட்சமாகச் சில உரிமைகள் கூட அவர்களுக்குக் கொடுத்து நாம் வாழவைக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தியானம் செய்து முடிந்தவுடனே மனைவியைக் கணவனும், கணவனை மனைவியும் "வாழ்க வளமுடன்" என்று மூன்று முறை வாழ்த்த வேண்டும்.

வாழ்த்துதல் மிக்க நலமுடைய ஒரு செயல். ஏனென்றால் கணவன் மனைவி உறவு சரியாக இருந்தால்தான் இருவருடைய வாழ்க்கையும் அமைதியாக இருக்கும்;




எந்தக் காரியத்திற்கு, எந்தச் செயலுக்குச் சென்றாலும் அது வெற்றியாக அமையும். மேலும் கணவன் மனைவி உறவு நல்ல முறையிலே இருந்தால், அமைந்தால் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் நல்ல குழந்தைகளாக, சமுதாயத்திற்கு ஏற்ற குழந்தைகளாகப் பிறக்கும்.

எனவே தம்பதிகளுக்கிடையே இனிமையான உயிர்க்கலப்பு உணர்வு, நல்லுறவு அவசியம்". என்று  வலியுறுத்துகிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

## ஏன் , எதற்கு , எப்படி ?

மகரிஷி குடும்ப அமைதிக்கு விட்டுகொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் இவைகளை ஏன் கூறுகிறார்?

ஒரு குடும்பத்தில் 5 உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் கருமையப் பதிவுகள் வேறு படும்.

ஒவ்வொருவருடைய மனமும் பெரும்பாலும் அவரவர்களுடைய கருமையப்படியே தான் இயங்கும்.

எனவே குடும்ப உருபினகளின் குணத்தை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல.

தவம், தற்சோதனைகள் மூலம் தேவையில்லாத குணங்க ளை அவரவர்களே மாற்றிக்கொள்ளலாம்.

குறிப்பாக ஆண்கள், பெண்கள் கருமையங்கள் இயல்பாகவே அதிக வேறுபாடுகள் உடையவை .

எனவேதான் மற்ற எந்த உறவுகளை விட அதிக கருது வேறுபாடுகள் கொண்டதாக கணவன் மனைவி உறவு உள்ளது.

இதை விளங்கிக்கொண்டால் கணவன் மனைவி களிடையே எதிர்பார்ப்புகள் குறையும்.

விட்டுகொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் இயல்பாகும். ரோஜாவிற்கு என்று ஒரு தனித்தன்மை மல்லிகைக்கு என்று தனித்தன்மை இயல்பாக உள்ளது .

அவைகளைத் தனிதனியாக ரசிக்க வேண்டுமே தவிர ஒன்றை மற்றொன்றாக மாற்ற நினைக்ககூடாது.

கணவனிடம் எவ்வளவோ நல்லகுணங்கள் இயல்பாக இருக்கும். அதை மனைவியும், மனைவியிடம் இருக்கும் நல்லகுணங்களை கணவனும் பெரிதுபடுதிகொண்டு சில ஒத்துப்போகாத குணங்களை பெரிதுபடுத்தாமல் விட்டுகொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் இவைகளை பயன்படுத்தி குடும்ப அமைதியை குரு வழியில் நின்று காக்க வேண்டும்.

சில முக்கியமான முடிவுகளை அதை பற்றிய கருத்துக்களை விவாதிதற்கு பிறகு முடிவு எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டால் யாருக்கு அந்த விஷயத்தில் அனுபவம் அதிகம் உள்ளதோ அவர்களிடம் அதை விட்டுவிட்டு மற்றவர்கள் அதற்கு உதவவேண்டும்.

முக்கிய முடிவுகளை எடுத்த பின் யார் அதை செய்கிறர்களோ அவருக்கு மற்றவர்கள் எதி ர்ப்பாகவோ ஒதுழைக்காமலோ நடக்க கூடாது.

மகரிஷி கணவன் மனைவி உறவுக்கே மற்ற எல்லா உறவுகளை விட முக்கியத்துவம் தருகிறார்,

கணவன் மனைவி உறவில் வெற்றி பெறாமல் வாழ்க்கையில் மற்ற எந்த வெற்றி பெற்றாலும் பயனில்லை என்கிறது வேதாத்திரியம்.

## கணவன் - மனைவி உறவை புரிந்து கொள்ளும் 5 கட்டங்கள்

வாழ்க்கையில் உங்களை உற்சாகப்படுத்த ஒருவர் தேவைப்படுகிறார்கள். ஊக்கப்படுத்தவும் உற்சாகம் அளிக்கவும் அப்படி ஒருவர் இல்லாத போது, உறவில் ஒருவித வெறுமை தலைதூக்குகிறது.

காதலிக்கும் போதும் சரி... கல்யாணமான ஆரம்ப நாட்களிலும் சரி... கணவன்-மனைவி இருவரின் எண்ணம், செயல், சிந்தனை எல்லாம் தன் துணையை உற்சாகப்படுத்துவதிலும், கவனம் ஈர்ப்பதிலும்தான் இருக்கும்.

தனது அருகாமை தன் துணைக்கு மகிழ்ச்சியான உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள். திருமணம் முடிந்த சில தினங்களில் இது தலைகீழாக மாறி விடுவதைப் பார்க்கலாம்.

துணையின் மீது ஒருவித அலட்சியம் தலைதூக்கும். துணைக்கு நாம் செய்ய வேண்டிய வேறு எந்த வேலையை வேண்டுமானாலும் யாரிடமும் ஒப்படைக்கலாம்.

ஆனால், துணையை உற்சாகப்படுத்துகிற 'சியர் லீடர்' வேலையை அப்படி யாரிடமும் மாற்றி விட முடியாது. தன்னை உற்சாகப்படுத்துகிற, ஊக்கப்படுத்துகிற, குறிப்பாக... பாராட்டுகிற நபரைத்தான் யாருக்குமே பிடிக்கும்.

வாழ்க்கைத் துணைவர் அந்த வேலையைச் செய்யத் தவறுகிற பட்சத்தில், சம்பந்தமில்லாமல் அதைச் செய்கிற இன்னொரு நபரிடம் ஈர்ப்பு உண்டாவது இயற்கையே.

துணையை உற்சாகப்படுத்தி மகிழ்விப்பதன் அவசியம் உணராததாலேயே, பல தம்பதியரின் உறவு திசை மாறி நகர்கிறது.

விமானத்தில் 'ஆட்டோ பைலட் மோடு' என்று ஒன்று உண்டு. விமானியின் உதவியின்றி விமானம் தானாகச் செல்ல இது உதவும்.

பலரும் வாழ்க்கை என்கிற விமானத்தை அப்படித்தான் ஆட்டோ பைலட் மோடில் போட்டுவிட்டு அலட்சியமாக இருந்து விடுகிறார்கள்.

அதன் பின்னணியில் மறைந்திருக்கும் ஆபத்தை உணராதவர்கள் அவர்கள். திருமண உறவில் 5 முக்கிய கட்டங்கள் உண்டு.

அழகான நிலையில் இருந்து ஆபத்தான நிலை நோக்கி, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மிக இயல்பாக உறவு நகர்வதை பெரும்பாலான தம்பதியர் அறிந்திருப்பதில்லை.

## முதல் கட்டம் :

குதூகலமான, கொண்டாட்டமான காலம் இது. திருமணத்துக்கு முந்தைய அல்லது திருமணமான முதல் சில நாட்களை உள்ளடக்கிய இந்தக் காலம் தற்காலிகமானது.

கணவன்-மனைவி இருவருமே சினியர் லீடர்களாக இருக்கும் காலமும்கூட. வாழ்க்கை முழுக்க இந்த கட்டத்திலேயே இருந்து விட்டால் பிரச்சனைகளுக்கே இடமில்லை. ஆனாலும், அது சாத்தியமே இல்லை.

## இரண்டாவது கட்டம் :

திருமணமாகி, வாழ்க்கையில் ஓரளவுக்கு செட்டிலான காலம் இது. ஒருவர் மீது ஒருவர் கொண்ட த்ரில் சற்றே குறைந்திருக்கும்.

ஆனாலும், பரஸ்பர பாராட்டு இருக்கும். சியர் லீடராக இருப்பதிலிருந்து விலக ஆரம்பிப்பார்கள். இருவருக்கும் இடையில் நெருக்கம் அப்படியே இருக்கும்.

ஒருவரின் தவறுகளை இன்னொருவர் மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிற மனநிலையில் இருப்பார். திருமண உறவிலேயே மிகவும் சிறந்த கட்டம் இது என்றாலும், இந்த நிலையிலும் பெரும்பாலான தம்பதியரால் தொடர்ந்து இருக்க முடிவதில்லை.

## மூன்றாவது கட்டம் :

துணையின் மீதான த்ரில் இன்னும் கொஞ்சம் குறைந்திருக்கும். துணையின் பாசிட்டிவ் பக்கங்களை மட்டுமே பார்த்த நிலை மாறி, நெகட்டிவ் பக்கமும் தெரிய ஆரம்பிக்கும்.

துணையை உற்சாகப்படுத்துகிற சியர் லீடர் மனப்பான்மை முற்றிலும் காலியாகியிருக்கும். பரஸ்பர பாராட்டு அறவே இருக்காது.

தவறுகளைக் கண்டுபிடிக்கத் தொடங்கி இருப்பார்கள். சின்னச் சின்ன விஷயங்களைக் கூட விமர்சிக்க ஆரம்பித்திருப்பார்கள்.

நான்காவது கட்டத்தில் நாம் தேர்ந்தெடுத்த துணை நமக்குக் கொஞ்சமும் பொருத்தமற்றவரோ... அவசரப்பட்டு தவறான முடிவெடுத்து விட்டோமோ என நினைக்க வைக்கிற கட்டம் இது.

துணையிடமிருந்து விலகியிருக்கத் தோன்றும். துணையிடம் நிறைகளைவிட, குறைகளே அதிகம் என நினைக்க வைக்கும்.

## ஐந்தாவது கட்டம் :

முந்தைய ஸோனில் தவறான துணையைத் தேர்ந்தெடுத்து விட்டோமோ எனக் குழம்ப வைத்தது மாறி, தவறான துணைதான் என முடிவே செய்யவைக்கிற கட்டம் இது.

துணையிடம் நெகட்டிவ் விஷயங்கள் மட்டுமே உள்ளதென நினைக்கச் செய்யும்.

அப்படியொரு துணையுடன் வாழவே முடியாதென்கிற மனநிலைக்குத் தள்ளும். நிச்சயம் பிரிவை நோக்கி முன்னேற வைக்கும்.

வாழ்க்கை துணையாக வருபவர்கள் கணவனிடம் அன்பு, பாதுகாப்பு போன்றவற்றையே அதிகமாக எதிர்பார்ப்பார்கள்.

அதனால் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்யுங்கள்.

கணவன்-மனைவி உறவில் பெரிய அளவில் விரிசல்கள் ஏற்படுவதற்கு ஒப்பீட்டு பேச்சுதான் காரணமாக இருக்கின்றன.

கணவன் மனைவியையோ அல்லது மனைவி கணவனையோ மற்றவர்களுடன் அழகு, பணம், படிப்பு என எந்த விஷயத்திலும் ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.




ஆரம்பத்தில் சகித்துக் கொண்டாலும் இந்த ஒப்பீடு பின்நாளில் பூதாகரமாக பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும்.

தங்கள் துணையை சுதந்திரமாக செயல்பட விடுங்கள். எக்காரணத்தை கொண்டும் சந்தேக விதையை மனதில் விதைத்து விடாதீர்கள். எதுவாக இருந்தாலும் நேரடியாக பேசி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

தங்கள் துணைக்கு சம உரிமை கொடுங்கள்.

கணவன்-மனைவி உறவில் 'பெர்ஷனல்' விஷயங்கள் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

முடிந்த வரை அனைத்தையும் பகிர்ந்து கொள்ளுங்கள். பகிர்ந்து கொள்ளாத பட்சத்தில் அதனை காரணம் காட்டி பிரச்சினைகளை எழுப்ப வேண்டாம்.

ஏனெனில் அவர்களும் பிறந்த வீடு, அலுவலக விஷயங்கள், நண்பர்கள் போன்ற வட்டங்களுக்குள் இருக்கின்றனர் என்பதை மறந்துவிட கூடாது.

மறைத்த விஷயங்களை கூறி, ஏதேனும் உதவி கேட்டால், முழு மனதுடன் உதவி செய்யுங்கள். பழைய பிரச்சினைகளை மனதில் வைத்து எதுவும் பேசாதீர்கள். அது உறவை வலுப்படுத்தும்.

மனைவியின் அழுகை, வலி, சிரிப்பு போன்றவற்றுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். 'அனைத்திற்கும் அழுகிறாள், இதற்கெல்லாம்

சிரிக்கிறாள்' என்று உதாசீனப்படுத்தாதீர்கள். அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். இல்லறம் இனிக்கும்.

கணவன் மனைவி உறவு என்பது நமது வாழ்க்கையில் எல்லா பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு ஆராய்ச்சியில் வீட்டில் சந்தோஷமாக இருக்கும் மக்கள்( கணவன்/மனைவி)தங்கள் பணியிடத்தில் குறைந்த மன அழுத்தத்தில் இருப்பதாக சொல்கிறது.இன்று பல திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன.

எனவே உங்கள் கணவன்/மனைவியிடம் ஒரு வலுவான மற்றும் ஆரோக்கியமான உறவு வளர எனக்கு தெரிந்த நான் பின்பற்றும் சில குறிப்புக்கள்.

1.**ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுங்கள்(Communicate Each other)**

முதலில் மனம் விட்டு பேச தினமும் நேரம் ஒதுக்குங்கள் அன்றாடம் நடக்கும் சம்பவங்கள்,தகவல்கள் மற்றும் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

இந்த கால கட்டத்தில் நேரம் ஒதுக்குவது மிகவும் கடினம்.இதை புரிந்து தினமும் ஒரு வழக்கமான நேரத்தில் திட்டமிடலாம்.

அது சாப்பிட்டவுடன் தூங்குவதற்கு முன் அல்லது காலை தேநீர் அருந்தும் போதும் பேசலாம்.

அப்போது நீங்கள் ஒரு நல்ல விஷயம் பற்றியும் அந்த நாள் பற்றிய ஒரு கடினமான விஷயத்தையும் பகிர்ந்துகொள்ளலாம் இது இருவருக்கும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பை கொடுக்கிறது.

2.**பேசுவதை கவனியுங்கள்(Active listening)**

3.ஒன்றாக(இருவர் மட்டும்)சுற்றுலா செல்லுங்கள்(Plan for frequent outing)

Atleast weekly once நீங்கள் இருவரும் தனியாக திரைப்படங்கள்,இரவு உணவு(Dinner),ஐஸ் கிரீம் அல்லது Simple car drive போக நேரம்

ஒதுக்குங்கள்.இது உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையே உள்ள உறவை மேம்படுத்த உதவும்.

4.உங்கள் காதலை வெளிபடுத்துங்கள்(Show your love and affection)

உங்கள் கணவன்/மனைவி மேல் உள்ள அன்பை வெளிக்காட்ட ஒரு சின்ன முயற்சியாவது செய்யுங்கள் லைக் a small dedicated time,பரிசுகள்,வாழ்த்துஅட்டைகள்,a small touch அல்லது just உங்கள் உணர்ச்சிகளை like love u darling காட்ட வேண்டும்.

5.மன்னிக்க தெரிந்த மனம்(Forgiveness)

நாம் ஒவ்வொருவருக்கும் நம் கணவன்/மனைவி மேல் பிடிக்காத விஷயங்கள் சில இருக்கும்.அதை பெரிது படுத்துவதை விட்டு விட்டு புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.இப்படி மன்னிக்க தெரிந்த உறவுகள் நீண்ட காலங்கள் நீடிக்கின்றன.So give up your egos

## கணவன்-மனைவி உறவு பலப்பட சில ஆலோசனைகள்..



கணவன் மனைவிக்கிடையே, திருமணமான புதிதில் இருக்கும் நெருக்கம், நாட்கள் செல்லச் செல்ல குறைந்துவிடும் என்பது பொதுவான கருத்து. இதற்கு காரணம், சரியான, பரஸ்பர புரிதல் இல்லாமையே.

கீழே தரப்பட்டிருக்கும் கருத்துக்கள், ஆண் பெண் என்ற பாகுபாடில்லாமல் இருவரும் கடைபிடிக்க வேண்டிய பொதுவான ஆலோசனைகள்.

இங்கு தரப்பட்டிருக்கும் ஆலோசனைகளில் சில, குழந்தைத்தனமானதாகவும் நகைச்சுவையாகவும் தோன்றலாம்.. ஆனாலும் தம்பதிகளுக்குள் கவுரவம் பார்க்காது, கடைபிடிப்பதில் தவறில்லையே..

1. எழும்போதே ஒருவருக்கொருவர் புன்னகையுடன் பார்த்துக் கொள்ளுங்கள். குட்மார்னிங் சொல்லிக்கொள்வதில் தவறில்லை.

2. வாரத்திற்கொருமுறை குடும்பத்தோடு வெளியில் சென்று வரலாம்.

3. மனைவிக்கு / கணவனுக்கு வேண்டியவர்களிடம் தன்மையாக நடந்துகொள்ளுங்கள.

4. அவ்வப்போது சின்னச் சின்ன பரிசுப் பொருட்களை வாங்கிக்கொடுத்து ஆச்சர்யப்படுத்துங்கள்.

5. எப்போதும் செய்தித்தாள் அல்லது டிவி பார்த்துக்கொண்டே இருக்காமல், கூடுமானவரை ஒருவருக்கொருவர் முகம் பார்த்து பேச முயலுங்கள்.

6. சமையல் முதல் அனைத்து வேலைகளிலும் ஒருவருக்கொருவர் உதவ முற்படுங்கள்.

7. சாப்பிடும் தருணங்களில் டிவி பார்க்காமல் பேசிக்கொண்டே சமையலை ருசித்து சாப்பிடுங்கள். அது எதிர் தரப்பினரை திருப்தியடையச் செய்யும்.

8. தொடுதல் மிக முக்கியம். தனிமையான தருணங்களில் இடைவெளிகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். தலைகோதிவிடுவது,

மடியில் தலை வைத்துப்படுப்பது, கை கோர்த்துக்கொள்வது போன்ற தொடுதல்கள் நெருக்கத்தை மேலும் வலுப்படுத்தும்.

9. எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்ற எதிர்காலக் கனவுகள் பற்றி ஒருவருக்கொருவர் பேசுங்கள்.

10. இருவருக்கும் பிடித்த, பொதுவான பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கேளுங்கள். அது யதார்த்த சூழலில் கேட்கப்படும்போது மனதுக்குள் புன்னகை உண்டாக்கும்.

11. பின்கூட்டி அணையுங்கள். இது உடல் சார்ந்தது மட்டுமின்றி மனரீதியாகவும் நெருக்கத்தினை ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

12. நகைச்சுவையான தருணங்களில் ஒருவருக்கொருவர் விஷயத்தைப் பகிர்ந்து சிரியுங்கள்.

13. I love you அல்லது I miss you போன்ற க்ரீட்டிங் கார்டுகளை அவ்வப்போது பரிமாறிக்கொள்ளுங்கள்.

14. ஒருவரின் தேவைகள் என்னவேன்று மற்றொருவர் கேட்கும் முன்பே, அதனைப் புரிந்துகொண்டு நிறைவேற்றுங்கள்.

15. வாதம் செய்யும்போதோ, அறிவுரை கூறும்போதோ, ஒருவர் சொல்வதை மற்றொருவர் அசட்டை செய்யாது கவனிக்க வேண்டும்.

16. தனக்குப் பிடித்த விஷயங்களை இன்னொருவர் செய்யும்போது மனம் விட்டுப் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள்.

17. ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணும்போது மற்றொருவரின் பார்வையிலும் இருந்து பார்த்து நடுநிலையாக முடிவெடுக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும், தன் வாதம் தான் கடைசியாக இருக்கவேண்டும் என்று நினைக்காதீர்கள்.

18. வெளியிலிருப்பின், அழைபேசி மூலம் அவ்வப்போது பேசி அக்கறையை வெளிக்காட்டுங்கள் .

19. தங்கள் விருப்பங்களை மற்றொருவர் உடனே நிறைவேற்ற வேண்டும் என்று அவசரப்படுத்தாதீர்கள். பொறுமை அவசியம். அதே போன்று நீ இப்படித் தான் இருக்க வேண்டுமென தன்னுடைய விருப்பங்களை அடுத்தவர் மேல் திணிக்கவும் கூடாது.

20. ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுங்கள். சுய விருப்பு வெறுப்புக்களை தெரிந்துவைத்துக்கொள்வது மிக முக்கியம்.

21. எந்த சூழ்நிலையிலும் அவரவர்க்குரிய சுய மரியாதையை கெடுக்கும் வண்ணம் நடக்கக் கூடாது.

22. நண்பர்கள் உறவினர்கள் போன்ற வெளியாட்கள் வீட்டுக்கு வரும்போது அவர்கள் முன் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்ளக் கூடாது.

23. உறவினர்கள் இருப்பின், மறைமுகமான, காதல் ஜாடைகளில் பேசிக்கொள்ளுங்கள்.

24. பிறந்த நாள், காதலர் தினம் போன்ற நாட்களை மறந்துவிடாமல் ஒருவருடன் ஒருவர் ஒன்றாக நேரத்தை செலவழியுங்கள்.

25. தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், தன் மேலுள்ள குறைகளையோ அல்லது தவறுகளையோ ஒத்துக்கொண்டு மனமார மன்னிப்பு கேட்கப் பழகுங்கள்.

26. கணவனோ மனைவியோ தம்மிடம் தவறினை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்கும்போது அவரைக் குத்திக்காட்டாமல் மனதார மன்னித்து ஏற்றுக்கொண்டு சகஜநிலைக்குத் திரும்புங்கள்.

27. முத்தம் என்பது காமம் சார்ந்ததில்லை. அது காதலை வெளிப்படுத்தும் ஊடகமே.. தினமும் ஒருவருக்கொருவர் முத்தமிட்டுக் கொள்ளுங்கள்.

28. தான் என்ன செய்தால் மற்றொருவர் மகிழ்ச்சியாக இருப்பார் என்பதை அறியமுடியவில்லையெனில், “நான் என்ன செய்தால் உனக்கு சந்தோசமாக இருக்கும்“என வெளிப்படையாக அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

29. எப்போதும் பாசிடிவ்வாக யோசியுங்கள்.

30. வீட்டில், குழந்தைகளிடமும் தன்மையாக இனிமையாகப் பேசுங்கள், பழகுங்கள்.

31. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பலவீனமாக உணர்ந்தீர்களானால் அதை தாராளமாக தன் துணையிடம் தெரிவித்து அவருடைய உதவியை ஈகோ பார்க்காமல் ஏற்றுக்கொள்ளலாம்.

32. வேண்டாவெறுப்பாக இருக்காமல், வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் உண்மையான அக்கறையைக் காட்டுங்கள்.

33. உங்கள் வாழ்வின் கடந்த கால அனுபவங்களை, அதாவது உங்கள் இருவருக்குள் நடந்த ஸ்வாரஸ்யமான காதல் சம்பவங்களை அவ்வப்போது நினைவுபடுத்தி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுங்கள்.

34. மனரீதியாக மட்டுமின்றி உடல்ரீதியாகவும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துவைத்திருக்க வேண்டும். உடல் சார்ந்த நேரங்களில் கூட, காமத்தை விட காதல் ப்ரதானமாக இருக்க வேண்டும்..

35. சாதாரணமாக கை கோர்க்கும் பிடியில் கூட உனக்காக நானிருக்கிறேன் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

36. ஏதாவதொரு பொதுவான விஷயத்தை தேர்ந்தெடுத்து அதை சேர்ந்து ரசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உதாரணமாக இசை, மழை, பௌர்ணமி நிலவு, கவிதைகள், புத்தகங்கள் போன்றவைகள்.

37. தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறும்போது, உதாரணமாக தலைவலி என்று சொன்னால் “எனக்கு அதுக்கு மேல வலிக்குது“ என்று பதிலளிக்காதீர்கள். உண்மையான அக்கறையுடன் பணிவிடை செய்யுங்கள்.




3. என்னதான் ஒருவருக்கொருவர் அதிகமாக காதலித்தாலும் அதை வெளிக்காட்டப் பழகுங்கள். மனதிற்குள் வைத்து ஒளிக்கும் அன்பு ப்ரயோஜனப்படாது.

விட்டுக்கொடுப்பதும், புரிந்துகொள்வதும் அந்நியோன்யத்தை வலுப்படுத்தும். ஒருவருக்கொருவர் அவமானமோ வெட்கமோ பார்க்காமல் வெளிப்படையாக இருத்தல், ஈகோ பார்க்காமல் மன்னிப்பு கேட்கவும், மன்னிக்கவும், பாரபட்சம் பார்க்காமல் அனைத்து விஷயங்களையும் ஒளிவுமறைவின்றி பகிர்தல் போன்றவைகள் கணவன் மனைவி உறவினை மேலும் வலுப்படுத்தும்.

ஒரு நாள் மாலையில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு ஒரு தம்பதியினர் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தனர்.
வரும் வழியில் ஒரு கயிற்றுப் பாலம் ஒன்று இருந்தது. சற்று இருட்டியதால் இருவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர்.
திடீரென மழைச் சாரலும் வீசியது.

வேகமாக நடந்து கொண்டிருந்தவர்கள் ஓடத்தொடங்கினர். கணவர் வேகமாக ஓடினார். கயிற்றுப் பாலத்தை கணவன்
கடந்து முடிக்கும் போது தான் மனைவி பாலத்தினை வந்தடைந்தார்

மழைச்சாரலோடு கும்மிருட்டும் சேர்ந்து வந்ததால் மனைவி பாலத்தை கடக்க பயப்பட்டாள். அதோடு, மின்னலும்
இடியும் சேர்ந்து கொள்ள பாலத்தின் ஒரு பக்கத்தில் நின்று கணவனை துணைக்கு அழைத்தாள். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

மின்னல் மின்னிய போது கணவன் பாலத்தின் மறுபக்கத்தில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. தன்னால் முடிந்த வரை சத்தமிட்டு கணவனை அழைத்தாள்., கணவன் திரும்பிப் பார்க்கவில்லை.

அவளுக்கு அழுகையாய் வந்தது...இப்படி பயந்து அழைக்கிறேன்.என்ன மனிதர் இவர்?? திரும்பி கூட பார்க்கவில்லையே... என, மிகவும் வருந்தினாள். மிகவும் பயந்து கொண்டே கண்களை மூடிக் கொண்டு கடவுளிடம் பாரத்தைப் போட்டு மெல்ல மெல்ல பாலத்தை கடந்தாள்.

பாலத்தை கடக்கும் போது இப்படி ஒரு இக்கட்டான நிலமையில் கூட உதவி செய்யாத கணவனை நினைத்து வருந்தினாள்.

ஒரு வழியாக பாலத்தை கடந்துவிட்டாள். கணவரை கோபத்தோடு பார்க்கிறாள்.

அங்கு கணவர் மழையில் ஒரு பக்கம் உடைந்து தொங்கிக்கொண்டிருந்த கயிற்றுப்பாலத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்.... அதை பார்த்த அவள், கண்களில் கண்ணீர் வடிய கணவரை கட்டியணைத்தாள்!!!

சில சமயம் கணவர் குடும்பத்திற்கு எதுவும் செய்யாமல் மௌனமாக இருப்பதாக தோன்றும். ஆனால்,.உண்மையிலேயே அவர் தன் குடும்பத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டுதான் இருப்பார்



தூரத்தில் பார்க்கும் போது அன்பு இல்லாதவர் போல இருந்தாலும்

அருகில் சென்று பார்க்கும் போது தான் அவரின் அன்பு தெரியவரும்.....

வாழ்க்கை ஒரு விசித்திரமான விந்தை. தூரத்தில் இருப்பது தெளிவாக தெரிந்தாலும், அருகில் வரும்போது மட்டுமே பொருள் புரிகிறது!!!

உண்மையான அன்போடும், நிலையான நம்பிக்கையோடும் வாழ்க்கையை நடத்துங்கள்..... இனிக்கும்!op of Form

## நீ பாதி நான் பாதி

மனைவி என்பவள் சரி சமம் ஆனவள் என்பதைக் காட்டவே அர்த்த நாரீஸ்வர் தோற்றத்தை இறைவன் காட்டினார் என்று சொல்வார்கள் நம் முன்னோர்கள்.

ஒரு மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் பெற்ற தாய்,உடன்பிறந்த சகோதரி, கட்டிய மனைவி,பெற்றெடுத்த மகள் என்று பெண்ணைச் சார்ந்தே வாழ்கிறான்.

ஒருவனுக்கு உயிரையும்,உடலையும் தந்து உலவ விடுபவள் தாய்.அந்தத் தாய் தன்னை மாதிரி தன் மகனைப் பாதுகாத்துப் பேண இன்னொரு தாய் போன்ற பெண்ணைத் தன் மகளுடன் இணைக்கிறாள்.

'மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்பது போல் வரும் பெண் வாழ்க்கையைச் சொர்க்கமாகவும் மாற்றலாம்,நரகமாகவும் மாற்றலாம்.

அதனால் தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்றார். நல்ல பெண் வாழ்க்கைத் துணையாக அமைந்தால் நலம். அல்லாவிட்டால் பிணி.




ஒரு ஆணின் வாழ்க்கையில் பெண் வாழ்க்கைத் துணையாக வந்த பிறகே வாழ்க்கைப் பயணம் அர்த்தமாகிறது.

குடும்ப வாழ்க்கையிலே, இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு ்வாழ்வை நல்லபடியாக நடத்த கணவன் மனைவி உறவு சீராக இருக்க வேண்டும்.

இருவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.கருத்து வேறுபாடு

பிணக்கு இருந்தால் ஒருவருக்கு ஒருவர் பேசி அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இருவரும் நல்ல நட்போடும் மாறாத அன்போடும் இருந்தால் வாழ்க்கை நலமாக இருக்கும்.

தரமில்லாத மனிதனை சரிபடுத்தி,நிலையில்லாத மனிதனை நெறிப்படுத்தி கணவனை நல்லவனாக,வல்லவனாக ,எல்லாம் உள்ளவனாக மாற்ற நல்ல மனைவியால் தான் முடியும்.

இயற்கை தனக்களித்த பொறுமை, தியாகம், இரக்கம், தாய்மை போன்ற குணங்களால் கணவனுக்கு எல்லாமே தானாகி அவனுக்குச் சிறப்பையும் மகிழ்ச்சியையும் நல்ல மனைவியால் தான் அளிக்க முடியும்.இல்லறமாகிய நல்லறத்தைச் சிறப்பிக்க முடியும்.

இப்படி எல்லாமாகிய மனைவியைக் கணவன் போற்ற வேண்டும். அதற்கு ஒரு நாள் தான் ‘ மனைவி வேட்பு நாள்’என்கிறார் அருள் தந்தை வேதாத்திரி.

# 9. குடும்பத்தின் விளக்கு மனைவி

இல்லறத்தில் இருக்கும் கணவன் மனைவி பற்றி ” ஒரு இறைவன் மற்றொரு இறைவனுக்கு உதவி வாழ்வது” என்று குறிப்பிடுவார் வேதாத்திரி மகரிசி.




கணவன் மனைவி உறவு என்பது, ஒரு இறைவன் இன்னொரு இறைவனுக்கு வாழ்நாள் முழுவதும் இன்பதுன்பங்களில சமபங்கு ஏற்று உயிர் தூய்மை பெற்று, வாழ்வின் நோக்கமாகிய இறைநிலையை அடைவதற்குத் துணையாக வரும் உறவு ஆகும்.

**கட்டிய மனைவி குலதெய்வம்**
**மனைவியும் தெய்வமும் ஒன்றில்லை**
**மனைவி இல்லாமல் தெய்வம் இல்லை**
**மனைவியும் தெய்வமும் ஒன்றில்லை**
**மனைவி இல்லாமல் தெய்வம் இல்லை**



குடும்பதின் விளக்கு---முதுமையிலும் வெளிச்சம் தரும்...)



ஜீவ நதியாய்

வருவாள்

என் தாகம் தீர்த்து மகிழ்வாள்

தவறினை பொறுப்பாள்

தர்மத்தை வளர்ப்பாள்

தரணியிலே வளம் சேர்த்திடுவாள்

ஒரு குடும்பத்தின் நிர்வாகத்தை உற்று கவனியுங்கள். உங்கள் மனைவிதான் - உள்துறை, நிதித்துறை, வெளிவிவகாரத்துறை, கல்வி, சுகாதாரம், உணவு போன்ற பல்வேறு துறைகளைக் கவனிக்கும் மந்திரியாகவும், குடும்பத்தின் விளக்காகவும் ஒளிவீசிக்கொண்டிருக்கிறாள்.

## அவள்தான் சும்மா இருக்கிறாளே!



"நான் வேலைக்கு போறேன்...
என் மனைவி வீட்டுல சும்மாதான்
இருக்கா!"
(ஒரு பெண்ணின் சாட்டையடி பதில்)
கணவன் ஒருவர், உளவியல் நிபுணரை சந்தித்தபோது, நடந்த உரையாடல்...
நிபுணர் : நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?
கணவர்: ஒரு கல்லூரியில் பேராசிரயராகப் பணிபுரிகிறேன்.
நிபுணர் : உங்கள் மனைவி?
கணவர் : அவள் வேலை செய்வது கிடையாது. வீட்டில்தான் இருக்கிறாள்.
நிபுணர் : குடும்பத்தினர் சாப்பிடுவதற்கு காலை உணவை தினமும் யார் தயாரிக்கிறார்கள்?
கணவர்: என் மனைவிதான். ஏனென்றால் அவள்தான் வேலைக்கு செல்வதில்லையே.
நிபுணர் : தினமும் காலை உணவு சமைப்பதற்காக உங்கள் மனைவி எப்போது எழுவார்?
கணவர்: அவள் காலை 5 மணிக்கு எழுவாள். ஏனென்றால் சமைப்பதற்கு முன்பாக வீட்டைச் சுத்தம் செய்வாள். அவள்தான் சும்மா இருக்கிறாளே!
நிபுணர் : உங்கள் குழந்தைகளை யார் பள்ளிக்கு அழைத்துச் செல்வார்கள்?
என் மனைவிதான் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வாள். அவளுக்குதான் வேலையில்லையே.
நிபுணர்: பள்ளியில் விட்டுவந்தது பிறகு உங்கள் மனைவி என்ன செய்வார்?
மார்க்கெட்டுக்கு செல்வாள், பின்னர் வீட்டிற்கு வந்து சமைப்பாள், துணி துவைப்பாள். உங்களுக்கு தெரியுமா... அவளுக்குதான் வேலையில்லையே
நிபுணர்: மாலையில் வீடு திரும்பியதும் நீங்கள் என்ன செய்வீர்கள்?
நாள் முழுக்க ஆபீஸில் இருப்பதால் மிகவும் களைப்பாக இருக்கும். அதனால் நான் ரெஸ்ட் எடுப்பேன்.
நிபுணர்: பிறகு உங்கள் மனைவி என்ன செய்வார்?
கணவர்: இரவு உணவு தயார் செய்வாள், குழந்தைகளுக்கு ஊட்டுவாள்

பிறகு எனக்கான உணவு தயார் செய்து பாத்திரங்களை கழுவுவது, வீட்டை சுத்தம் செய்து குழந்தைகளை படுக்க வைப்பாள்.

ம்... காலை முன் எழுந்தது முதல் இரவு வரை வேலை வேலை வேலை... என ஓடும் பெண், வீட்டுல சும்மாதானே இருக்கா... வேலையே செய்யாமல் என்று பேசுவது எத்தனை கொடுமை?

மனைவியை பாராட்டுங்கள், ஏனென்றால் அவளின் தியாகங்கள் எண்ணிலடங்காதது. ஒவ்வொருவரையும் மதித்து அவர்களை பாராட்ட, புரிந்து கொள்ள இது உங்களுக்கான ஒரு சந்தர்ப்பம்.




தூய நிலமாய் கிடப்பாள்

தூய நிலமாய் கிடப்பாள்

தன் தோளில் என்னை சுமப்பாள்

தன்மையில்லாமல் நான் மிதித்தாலும்

தாய்மையிலே மனம் கனிந்திடுவாள்

மேக வீதியில் நடப்பாள்

உயிர் மூச்சினிலே கலந்திருப்பாள்

மலை முடி தொடுவாள்

மலர் **மணம்** தருவாள்

மங்கல வாழ்வுக்கு துணை இருப்பாள்.

"நீங்கள் வேலை செய்கிறீர்களா அல்லது வீட்டில் சும்மாயிருக்கிறீர்களா?' என்று ஒரு பெண்ணிடம் கேட்க, அந்தப் பெண் தந்த பதிலையும் பாருங்கள்.

"ஆம் நான் முழுநேரம் பணியாற்றும் வீட்டிலிருக்கும் பெண். ஒரு நாளின் 24 மணிநேரங்களும் பணியாற்றுகிறேன்.

நான் ஒரு தாய்
நான் ஒரு மனைவி
நான் ஒரு மகள்
நான் ஒரு மருமகள்
நான் ஒரு அலாரம்
நான் ஒரு சமையல்காரி
நான் ஒரு வேலைக்காரி
நான் ஒரு ஆசிரியர்
நான் ஒரு செவிலியர்
நான் ஒரு பணியாளர்
நான் ஒரு ஆயா
நான் ஒரு பாதுகாவலர்
நான் ஒரு ஆலோசகர்
நான் ஒரு நலன் விரும்பி
எனக்கு விடுமுறைகள் கிடையாது
உடல்நிலை சரியில்லை என்றும் விடுமுறை எடுக்க முடியாது
இரவும் பகலுமாய் வேலை செய்ய வேண்டும்
எப்போதும் வேலை செய்வதற்கு தயாராகவே இருக்க வேண்டும்

எப்போதும் என்னை நோக்கி வீசப்படும் 'நாள் பூரா வீட்டுல சும்மாதானே இருக்கே?' என்கிற கேள்வியை எதிர்கொண்டபடி

இது பெண்களின் தியாகம்.............



சூப்பர் குடும்பத்திற்காக தியாகம் பண்ணுவதில் பெண்ணின் பங்களிப்பு கூடுதல் என்பதை மட்டும் ஏற்கலாம்.

திருமணமான பெண் தன் தாய்க்கு எழுதிய கடிதம்..

அன்புள்ள அம்மா,

எல்லா பெண்களைப் போலவே கல்யாண கனவில் களித்து மனதைக் கொள்ளையடித்தவரை உங்கள் சம்மதத்துடன் குதூகலமாகா ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன் .

பின்னர் தான் தெரிந்தது வாழ்க்கை சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்பு தான் தொடங்குகிறதென்று.
வாழ்க்கையில் விரும்புவது விரும்பப் படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிற்து என்று தெரிய வருகிறது.



எத்தனை பொறுப்புகள்
எத்தனை சுமைகள்
எத்தனை எதிர் பார்ப்புகள் ?
எத்தனை தியாகங்கள்
எத்தனை ஏமாற்றங்கள்

நினைத்த நேரத்தில் ,நிம்மதியாக முழு தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை.. குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு..
உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்ற விருப்பமான் உடைகளில்

சிட்டாக பறந்து கொண்டிருந்தேன்..
இங்கே அவர்கள் விருபிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர்..

இதோ என் தோழியை/தோழனைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டு சென்றது போல் சொல்லி செல்ல இயலவில்லை.

என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு..

நினைத்த நேரத்தில் தூங்க கூட முடிவதில்லை.
எனக்கு விருப்பமான டிவி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை..

சில நேரங்களில் எதற்கு இந்த திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது..

இந்த திருமணம் என் சுதந்திரதை அல்லவா பறித்து விட்டது..என் சுயத்தை அல்லவா சூறையாடி விட்டது
உன்னிடம் இருந்த போதே மிக மகிழ்வாக இருந்தேனே!
உன்னிடம் திரும்ப வந்து விடலாமா என்று கூட தோன்றுகிறது

உன் மடியில் படுத்து கொள்ளனும் போல இருக்கிறது வேண்டாம் வேண்டாம் என்று நான் சொல்ல சொல்ல ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ.. உனக்கு பிடிக்குமேன்னு பால் கோவா செஞ்சேன்னு நீ பின்னாலயே வந்து வந்து ஊட்டி விடுவதை கொஞ்சிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

எந்த கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில் உன் கொஞ்சலில் உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்க கூடாதா என்று தோன்றுகிறது..

ஆனால் அடுத்த கனமே நீயும் என் வயதில் என்னை மாதிரி தானே உணர்ந்திருப்பாய் நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்கள் தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது..

நீ அன்று  நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால் நான் இன்று இருப்பேனா..

நீ செய்த தியாகங்களையும் உழைப்பையும் பாசத்தையும் எதிர்பாறா அன்பையும் நான் திருப்பி தர வேண்டாமா..என்று நினைத்து கொள்கிறேன் ..

அதுவும் உன்னிடம் இருந்து கற்றது தான்..

அப்படி நினைக்கும் போது வாழ்க்கையே எளிதாக தெரிகிறது..

தெளிவாக புரிகிறது காலம் செல்ல செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல் நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன்..

நீ செய்த தியாகங்களை நானும் செய்ய தயாராகி விடுவேன்..
உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை திடத்தை என் குடும்பமும் எனக்கு தரும்

ஆமாம் மா நீ எனக்கு கொடுத்ததை நானும் என் குடும்பத்திற்கு கொடுக்க தயாராகி விட்டேன்..
நன்றிம்மா .

என்றும் அன்புடன்...!!
மனைவி அன்பில் ஒரு தாய்
மனைவி  அழகில் ஒரு தேவதை
மனைவி  அறிவில் ஒரு மந்திரி
மனைவி  அதரவுயில் ஒரு உறவு
மனைவி வெறுப்பில் ஒரு நெருப்பு
மனைவி வெற்றிக்கு ஒரு மாலை
மனைவி தோல்விக்கு ஒரு பள்ளம்
மனைவி நட்பில் ஒரு நேர்மை
பெண் கண்டிப்பில் ஒரு ஆசிரியார்
இருந்தாலும் மனைவி  ஒரு புரியாத புதிர்...

## உங்களுக்கு கிடைத்தமனைவி அரிய பொக்கிஷம்

வாழ்க்கையில்உங்களுக்கு இறைவன் கொடுத்த அரிய பொக்கிஷம் உங்கள் மனைவியே.

வாழ்நாள் முழுவதும் பத்திரமாக சுமந்து செல்லுங்கள். மனைவியிடம் அரசிய பொக்கிஷயங்கள் உள்ளன.



(அவினாசி அருகே ஆட்டையம்பாளையத்தில் நடந்த மனைவி நல வேட்பு நாள் விழாவில் கலந்து கொண்ட தம்பதிகளை படத்தில் காணலாம்.)

பகவான் கிருஷ்ணரை மிகவும் நேசிக்கும் பெண் ஒருவர் ஒரு நாள் துவாரகையில் அவரிடம் சென்று, “உன் விருப்பப்படி நடந்துகொள்வதை தவிர எனக்கு வேறு மகிழ்ச்சி எதுவும் இல்லை கிருஷ்ணா. உனக்கு நான் என்ன செய்யவேண்டும் சொல்?” என்றார்.

அடிப்படையில் இவள் மிகவும் ஏழை. தாய் தந்தையர் யாரும் கிடையாது. கிருஷ்ணர் தன்னிடம் ஏதாவது பக்தி பூர்வமாக கேட்பார் அதை செய்யலாம் என்று கருதித் தான் அவள் கேட்டாள். ஆனால் கேட்டது அந்த மாயாவியிடமாயிற்றே ? அவன் சும்மா விடுவானா?

அந்த பெண்ணிடம் அவள் அதிர்சியடையும் விதம், ஒரு கோணிப்பையை கொடுத்து, “நான் எங்கெல்லாம் செல்கிறேனோ அங்கெல்லாம் இதை தூக்கி கொண்டு வா. அது போதும். நம் கண்களை தவிர வேறு யார் கண்ணிற்கும் இந்த கோணிப்பை தெரியாது!” என்கிறார்.

வேறு எதையோ எதிர்பார்த்த அந்த பெண்ணிற்கு கடும் அதிர்ச்சி. கிருஷ்ணர் இப்படி ஒரு அழுக்கு சாக்கு மூட்டை தருவார் என்று அப்பெண் எதிர்பார்க்கவில்லை.

அவருடனே தூக்கி கொண்டு நடக்கும் அளவிற்கு அதனுள் அப்படி என்ன தான் இருக்கிறது என்று பார்க்க அந்த பெண்ணிற்கு ஆசை. ஆனால் கட்டுக்களை அவிழ்த்து பார்க்க முடியாதபடி மிகவும் பலமாக அது கட்டப்பட்டிருந்தது.

எனவே தாம் அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்க பகவான் விரும்பவில்லை என்று தெரிந்துகொள்கிறாள் அந்த பெண். திறந்து பார்க்கும் எண்ணத்தை மாற்றிக்கொண்டு கடவுளின் கட்டளைப்படி அதை தூக்கி சுமந்து அவர் செல்லுமிடங்கள் எல்லாம் செல்கிறாள்.

நேரம் செல்ல செல்ல, ஒரு கட்டத்திற்கு மேல் அவளால் அந்த மூட்டையை தூக்க முடியவில்லை.

“கிருஷ்ணா உன் கட்டளையை எதிர்பார்த்து உனக்கு பணி செய்ய வந்தேன். நீ என்னடாவென்றால் சுமக்க முடியாத ஒரு அழுக்கு மூட்டையை என்னிடம் தந்து விட்டாயே… கருணை கடலுக்கு இது அடுக்குமா??” என்று கோபித்துகொள்கிறாள்.

“உன் பலவீனத்தில் என் பலம் அடங்கியிருக்கிறது. கவலைப்படாதே உன் பக்கம் நானிருக்கிறேன். தைரியமாக நான் கூறும் வரை சுமந்துவா” என்கிறார் கிருஷ்ணர்.
மேலும் சில காலம் சென்றது.

சில இடங்களில் அவளால் தூக்க முடியாத போது கிருஷ்ணரும் தானும் தன் பங்கிற்கு ஒரு கை பிடித்து தூக்கி அந்த சுமையை பகிர்ந்து கொண்டார்.

ஒரு நாள் அவர்கள் போய் சேரவேண்டிய இடம் வந்தது. “போதும் நீ சுமந்தது. அந்த மூட்டையை இறக்கி வை!!” என்று கிருஷ்ணர் கட்டளையிட, அந்த மூட்டையை பகவானின் முன் கீழே வைக்கிறாள் அந்த பெண்.

“மூட்டைக்குள் என்ன இருக்கிறது என்று பார்ப்போமா?” என்று பகவான் புன்முறுவல் செய்தபடி கேட்க, அந்த பெண் அதற்காகவே காத்திருந்த அந்த பெண் “சீக்கிரம் கிருஷ்ணா” என்கிறாள் உரக்க. கிருஷ்ணர் தனது புல்லாங்குழலை அசைக்க முடிச்சுக்கள் தானே அவிழ்ந்து மூட்டை தானே பிரிந்து கொள்கிறது.

முதலில் கண்ணில் தெரிவது வைக்கோல் தான். ஆனால் வைக்கோல்களுக்கிடையே அரிய மாணிக்கங்களும் வைர வைடூரியங்களும், பொற்காசுகளும், தங்க ஆபரணங்களும் குவிந்து கிடந்தன. தேவலோகத்தில் உள்ள கற்பகவிருட்சம் மட்டுமே தரக்கூடிய பொக்கிஷம் அது!!

“இத்தனை காலம் பொறுமையுடன் நீ காத்திருந்தமைக்காக உனக்கு என்னுடைய பரிசு இது. எடுத்துக்கொள்!!”

அந்த பெண்ணுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. அதிர்ச்சி இன்ப அதிர்ச்சியாகி கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

“கிருஷ்ணா……. என்னை மன்னித்துவிடு” என்று அவர் காலில் விழுகிறாள்.

“அரும்பெரும் பொக்கிஷத்தை என்னிடம் கொடுத்திருந்தும் கூட அது தெரியாமல் இந்த பாவி இத்தனை காலம் உன்னை தவறாக நினைத்துவிட்டேன். உன்னை சந்தேகிக்காமல் உனது நோக்கத்தை புரிந்துகொண்டு நான் இருந்திருந்தால் இந்த பொக்கிஷத்தின் பாரம் எனக்கு சுமப்பதற்கு இன்பமாய் இருந்திருக்கும்.

புலம்பியிருக்கவோ புகார் செய்திருக்கவோ மாட்டேனே...” என்று அவள் உருக கிருஷ்ணர் தனக்கே உரிய சிரிப்பை உதிர்க்கிறார்.

ஒவ்வொரு சுமையும் அதை சுமப்பவர்களுக்கென்றே இறைவனால் மிகவும் கவனமாகவும் அன்புடனும் பிரத்யேகமாக செய்யப்படுகிறது. அவற்றை சுமை என்று நினைத்தால் சுமை. பொக்கிஷம் என்று நினைத்தால் பொக்கிஷம்.

எதுவாகினும் உங்கள் கைகளில் தான் அது உள்ளது. பார்க்கும் பார்வை தான் வித்தியாசப்படுத்தி காட்டுகிறது.
நம்மால் எதை சுமக்க முடியும் என்று ஆண்டவனுக்கு தெரியும். எனவே அவனை நம்புங்கள். முழுமையாக.

அஸ்வத்வஜாய வித்மஹே !
பாஸஹஸ்தாய தீமஹி !

தந்நோ சூர்யஹ் ப்ரசோதயாத் !! .. ..




எவரொருவர் தான் கட்டிய மனைவிக்கு சுய மரியாதை அளித்து, அளவில்லா அன்பு செலுத்துகிறாரோ !! அவர் குடிசையும் கோவிலென திகழும்...

குடும்ப அமைதிக்கு மகரிசி மூன்று தாரக மந்திரங்களை தந்துள்ளார்கள்.

1. விட்டுக் கொடுத்தல்
2. தியாகம்
3. சகிப்புத் தன்மை.

பெற்றோருக்கு பிறப்பது குழந்தை மட்டுமல்ல! அதனுடனே தியாகம்,விட்டுக்கொடுத்தல்,அர்ப்பணிப்பு இவை அனைத்தும் சேர்ந்தே பிறக்கின்றன.

# 10.மனைவியின் சிறப்பு.

கணவன் மனைவி உறவு மனித வாழ்க்கையின்மற்றெல்லா உறவுகளையும் விட மிக ஆச்சர்யம் தரத்தக்க உறவு எனலாம்.

யார் யாருக்கோ பிறந்தவர்கள் திருமணத்திற்குப் பிறகு திடீரென்று இணைகிறார்கள்.

பின்னர் இருவரது உள்ளங்களிலும் பெருக்கெடுக்கும் காதல், பிரியம், நெருக்கம், தாம்பத்யம், கருணை, கனிவு, பரிவு, விட்டுக் கொடுத்தல் முதலானவற்றிற்கு நிகரில்லை. அதற்கான காரணம் என்ன என்றும் நாம் அறிய முனைவதில்லை.



## கணவன் மனைவி உறவு

கணவன் மனைவி உறவைப்பற்றி குர்ஆனை விட சிறப்பாக யார் தான் கூறிவிட முடியும்? அந்த உறவின் இனிமையைப் பற்றி, அது இருக்க வேண்டிய நெருக்கத்தைப்பற்றி அல்லாஹ்வின் வர்ணனைகளை....

இவ்வளவு நிகரற்ற உணர்வலைகள் இருவரது உள்ளங்களிலும் சுரந்து பெருகி பெரு வெள்ளமாய் அவர்களது வாழ்வை வளமாக்க அவர்களது படைப்பாளன் கருணைமிக்க அல்லாஹ்தான் தனது அளப்பரிய அன்பாலும், நிகரற்ற அருட்கொடைகளாலும், தனது பேராற்றல் மிக்க நுண்ணறிவாலும் காரண கர்த்தாவாக இருக்கின்றான் எனும் உண்மையை அல்-குர்ஆன் எடுத்தியம்புகிறது.

அல்லாஹ் தன்னந்தனியாக இருந்தான். தன்னுடைய சக்திகளை வெளிப்படுத்த வேண்டுமென நாடினான். தன்னைத்தான் அறிவதற்காக ஓர் அற்புதமான சிருஷ்டியை படைக்க நாடினான். தன் கற்பனையில் உருவானபடி மனிதனைப் படைத்தான்.

படைத்துத் தன் பிரதிநிதியாக, கலீஃபாவாக பூமியில் ஆக்கினான். ஆணைப் படைத்த இறைவன் ஆணுக்குத் துணையாகப் பெண்ணையும் படைத்தான்.

அதுவும் ஆணின் விலா எலும்பிலிருந்தே பெண்ணைப் படைத்தான். படைக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்ப வேண்டுமென நாடினான்.

எனவே, பெண்ணிடத்தில் ஒரு கவர்ச்சியை வைத்தான். ஆணிடத்தில் கம்பீரத்தை வைத்தான்.ஆகையால் ஆண் பெண்ணை விரும்புகிறான். பெண்ணும் ஆண்மையை விரும்புகிறாள்.

விரும்பி ஆண்-பெண் இருவரும் இணைய வேண்டும் என்ற காரணத்தினால், ‘அல்லாஹ் உங்களிலிருந்தே உங்களுக்காக மனைவிகளைப் படைத்திருக்கிறான்.

அன்றி உங்கள் மனைவிகளிலிருந்து சந்ததிகளையும் பேரன். பேத்திகளையும் உற்பத்தி செய்து, உங்களுக்கு நல்ல ஆகாரங்களையும் புகட்டுகிறான்’ (ஸூரத்துன் நஹ்ல்: 72) என்று கூறுகிறான்.

உங்களுக்காக உங்களிலிருந்தே (உங்கள் மனைவிகளை அல்லாஹ் படைத்துள்ளான். நீங்கள் அவர்களிடம் மன அமைதியுறுவதற்காக உங்களுக்கிடையில் அன்பையும், நேசத்தையும் உண்டு பண்ணியுள்ளான்.’ (ஸூரத்துர் ரூம்: 21)

‘எவர் இறைவனுக்காக (அவனின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு) திருமணம் முடித்தாரோ, அவருக்கு அல்லாஹ் மறுமை நாளில் அரசாங்கத்தின் கிரீடத்தை சூட்டுகிறான்’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிவிக்கின்றார்கள். கிரீடம் சூட்டப்படும் இடம் எதுவாக இருக்கும் சுவனத்தைத்தவிர!

''நீங்களும் உங்கள் மனைவியரும் மகிழ்ச்சியோடு சுவர்க்கத்தில் நுழையுங்கள் (என்று மறுமையில் அவர்களுக்குக் கூறப்படும்).'' (அல்குர்ஆன்: ஸூரா அல்-ஜுக்ருஃப் 43:70)

திருமணத்தின் மூலம் நீங்கள் வெறும் மனைவியை மட்டும் பெறுவதில்லை. அன்றிலிருந்து உங்கள் வாழ்வின் இறுதிவரை அனைத்திலும்

அவள்தான் உங்கள் வாழ்க்கைத் துணைவி! இல்லத்தரசி! பங்காளி! வாழ்வின் நீண்ட பயணத்தின் வழித்துணை!

எதிலும் எஃகு போன்று நின்று அரவணைத்து நிற்பவள்! நீங்கள் ஏற்றம் பெற உற்ற தோழியாய் நிழலாய் வலம் வருபவள்! .

அன்று முதல் அவள்தான் உங்களுடைய ஒவ்வொரு நொடியையும், நாளையும், வருடத்தையும், சுகத்தையும், சுவையையும், துக்கத்தையும், கனவையும், நனவையும மகிழ்வையும், கவலையையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறவள்.

நீங்கள் நோயுறும்போது, அவள் உங்களை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொள்வாள். உங்களுக்கு ஏதேனும் தேவை என்றாலும் ஓடோடி வருபவளும் அவள்தான்.




உங்களுடைய ரகசியங்களை அவள் பாதுகாப்பாள். உங்களுக்கு ஆலோசனைகள் தேவைப்படும்போது அவள்தான் உங்கள் முக்கிய மந்திரி.

உங்கள் மனைவிதான் உங்களுடன் எப்போதும் உடன் இருப்பவள். காலையில் நீங்கள் கண் விழிக்கும்போது உங்கள் கண்கள் பார்க்கும் முதல் காட்சி அவளுடைய கண்களாகத்தான் இருக்கும். அன்றைய தினம் முழுவதும் அவள் உங்களுடன் இருப்பாள்.

சில சந்தர்ப்பங்களில் உடலால் உங்களருகில் அவள் இருக்க முடியாமல் போகும்போது அவளது நினைவுகள் உங்களை சூழ்ந்திருக்கும். காரணம் அவளது ஆன்மா, மனம், இதயம் மூன்றும் இறைவனிடம் உங்களுக்காக பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு நாளின் முடிவில் நீங்கள் படுக்கைக்கு போகுமுன் நீங்கள்

கடைசியாகப் பார்ப்பது அவளது கண்களாகத்தான் இருக்கும். உறங்கிய பிறகும் உங்கள் கனவிலும் அவள் வலம் வருவாள்.

சுருக்கமாகச் சொன்னால் அவள் தான் உங்கள் உலகம்! நீங்கள்தான் அவளது உலகம்!

‘அவர்கள் உங்களுக்கு ஆடைகளைப் போன்றவர்கள், நீங்கள் அவர்களுக்கு ஆடைகளைப் போன்றவர்கள் (ஸூரா அல்-பகரா 2:187).

எவ்வளவு எதார்த்தமான உவமை! ஆம் உண்மையில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆடைகளைப் போன்றவர்கள். காரணம் ஆடைகள் மனிதனின் மானத்துக்கும், உடலுக்கும், பாதுகாப்பை அளிக்கின்றன.

மரியாதையையும், மாண்பையும் தருகின்றன. அழகையும், கவர்ச்சியையும் வழங்குகின்றன. கடும் பனிப் பிரதேசத்தில் பயணிக்கும் பிரயாணிக்கு அவனது ஆடை எந்த அளவுக்கு சுகத்தையும், பாதுகாப் பையும் தரும் என்று கொஞ்சம் கற்பனை செய்து பார்த்தாலே அதன் அருமை புரியும்.

அந்த அளவுக்கு நமது வாழ்க்கைப் பாதையில் நமக்கு சுகத்தையும், பாதுகாப்பையும், கண்ணியத்தையும் வழங்குபவள் மனைவி தான்.

மேலும், அல்லாஹ் உங்கள் வாழ்க்கைத் துணைகளை உங்களிலிருந்தே உண்டாக்கினான். (ஸூரா அல்-நஹ்ல் 16:72)

அல்லாஹ் இதன் மூலம் அவனது அத்தாட்சிகளை இந்த பிரபஞ்சத்தில் தேடுவோருக்கு இந்த உணர்வுகள் அவனது அத்தாட்சிகளில் உள்ளவைதான் என்று உணர்த்தி அவனது வல்லமையை மனிதர்கள் உணர்வதற்காக கீழ்க்கண்ட வசனத்தில் சொல்கின்றான்:

மேலும் அவனது அத்தாட்சிகளில் ஒன்று, அதாவது அவன்தான் உங்களுக்கு துணைகளை உங்களிலிருந்தே ஏற்படுத்தினான், நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து நடந்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, உங்கள் உள்ளங்களில் அன்பையும் கருணையையும் பெருகச் செய்தான்.

நிச்சயமாக, அறிவுடையோருக்கு இதில் தெளிவான அத்தாட்சி இருக்கிறது’ (ஸூரா: அல்-ரூம் 30:21).

ஆனால், அல்லாஹ்வுக்கு மனிதனின் மனநிலையைப் பற்றி நன்கு தெரியும். அது நீண்ட காலம் ஒரே நிலையில் இருக்காது, அடிக்கடி அதன் தன்மைகள் மாறும. உணர்வுகள் வேறு வடிவம் பெறும்.

ஏன்! காலம் ஓட ஓட காதல் கூடக் கசக்கத் துவங்கும். முறையான கவனம் செலுத்தப்படவில்லை என்றால் திருமண பந்தம் தொய்வடையக் கூடும்.

நமது முயற்சி இல்லாமல் இல்லறத்தில் எந்த நேரமும் மகிழ்ச்சி நிறைந்திருக்குமென்று எண்ணிவிடக்கூடாது.

நாம் அரும்பாடு பட்டுக் கட்டிய அந்த இல்லறக் கூட்டில் மகிழ்ச்சி நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால் கணவன் மனைவி இருவரது கூட்டுப் பங்களிப்பு மிக மிக அவசியம்.

திருமண பந்தம் என்ற மரம் தழைத்தோங்கி வளர வேண்டுமென்றால், செடியை ஊன்றி விட்டால் மட்டும் போதாது, அந்த மரம் வளரவேண்டிய மண்ணுக்கு உரமிட்டு, நீரிட்டு பராமாரித்து, பாதுகாக்கப்பட்டால் தான் முடியும்.

பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சீரிய பணிகளுக்கிடையேயும் தமது இல்லற வாழ்வின் மகிழ்ச்சிக்காகவும் நேரம் ஒதுக்கிய சம்பவங்களை நினைவு கூர்ந்து பாருங்கள்.

தங்களது மனைவி ஆயிஷா அவர்களை பாலை வெளியில் அழைத்துச் சென்று தங்களுக்குள் ஓட்டப்பந்தயம் வைத்தார்கள்.

அதில் அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா வென்றார். ஆனால் சில காலத்திற்குப் பிறகு அன்னையாருக்கு எடைகூடிய காரணத்தால் அவர்களை நபியவர்கள் வென்றார்கள்.

மேலும் தங்களது மனைவியை எத்தியோப்பிய இளம் வீரர்களின் வீர விளையாட்டுக்களை காண அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

உங்களது மனைவியைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் அன்பை அடிக்கடி வெளிக்காட்டுவது, உறவை மேலும் மேலும் பலப்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் மனைவி மீது செலுத்தும் அன்புக்கு அல்லாஹ் கூலி கொடுக்கத் தவறுவதில்லை என்ற உண்மையை எண்ணிப்பாருங்கள். அதனால் தான் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

அல்லாஹ்வின் மகிழ்ச்சியை நாடி நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் நற்கூலி உண்டு, ஒரு கவள உணவாயினும்உங்கள் மனைவியின் வாயில் நீங்கள் அன்போடு ஊட்டி விடுங்கள்.

ஆகவே, நீங்கள் செய்யக்கூடிய சின்னஞ்சிறு அன்பான காரியங்களைக் குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்.

மனைவிக்கு உணவு ஊட்டி விடுவது, வாகனங்களில் அவர்கள் ஏற உதவுவது போன்ற சிறுசிறு விசயங்களா யினும் சரியே.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களது மனைவி ஒட்டகத்தில் ஏறி அமர தங்களது கால் முட்டியை மடித்து அமர்ந்து உதவி இருக்கிறார்கள் அல்லவா?

அடிக்கடி இருவரும் சேர்ந்து அல்லாஹ்வை வணங்குவதில் ஈடுபட முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள்.

வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக இரவில் விழித்தெழும் தம்பதியர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள்.

மேலும் முதலில் எழும் தம்பதியரில் ஒருவர் மற்றொருவரை விழிக்கச் செய்வதற்காக குளிர்ந்த நீரை முகத்தில் தெளிக்கத் தூண்டி இருக்கின்றார்கள்.

எப்போதும் சொல்லாலும் செயலாலும் உங்கள் மனைவியரிடம் நல்லவிதமாக நடந்துக் கொள்ள மிகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

மலர்ந்த முகத்துடன் அவர்களிடம் எப்போதும் பேசுங்கள், குடும்ப விசயங்களில் அவர்களது ஆலோசனைகளை கேட்டுப் பெறுங்கள், பிற விஷயங்களிலும் அவர்களது அபிப்ராயங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அவர்களுடன் இருந்து அளவளாவ நிறைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்ன பொன்மொழிகளை மறந்து விடாதீர்கள்.

''உங்களில் மிகச் சிறந்தவர் தங்களது மனைவியரிடம் மிகச் சிறந்தவர் என்று பெயர் எடுப்பவர்தான்''.

தம்பதியர் இணங்கி; இருப்பதும், தங்களது மரணம் வரை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பு செலுத்தி வாழ்வதும் இயல்புதான் என்றாலும், அது போதாது.

உங்கள் மனைவியிடம் அன்புடன் நடந்து கொண்டால் மட்டும் போதாது, அவர்கள் விரும்புவதை எல்லாம் நீங்களும் விரும்ப வேண்டும்.

அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவர்களது அன்புக்குப் பாத்திரமான ஒவ்வொருவரும் உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்களாக ஆக வேண்டும்.

விருந்தினர்களாக உங்கள் மனைவியரின் குடும்பத்தினரோ, அவர்களுக்கு விருப்பமானவர்களோ உங்கள் இல்லத்திற்கு வந்தால் அவர்களை வரவேற்கும் முதல் நபராக நீங்கள் இருக்க வேண்டும்.

இதற்கும் மேலாக ஒரு விஷயம் இருக்கிறது. உங்களது மரணம் வரை அவர்களை விரும்பினால் மட்டும் போதாது, அவர்களை நீங்கள் விரும்புவது உண்மையென்றால் மரணத்திற்குப் பிறகும் அவர்கள் உங்களது மனைவியராக இருக்க விருப்பம் கொள்ள வேண்டும்.

நாம்தான் மரணத்திற்குப் பிறகும் நிரந்தர வாழ்க்கை இருப்பதை நம்பிக்கை வைத்துள்ளோமே. இவ்வுலகில் நல் அமல்களை செய்தோர் தங்களது வாழ்க்கைத் துணைவியருடனும், தங்களது பிள்ளைகளுடனும் சொர்க்கம் புகுவார்கள்.

நீங்களும் உங்கள் மனைவியரும் மகிழ்ச்சியோடு சுவர்க்கத்தில் நுழையுங்கள் (என்று மறுமையில் அவர்களுக்குக் கூறப்படும்).

இந்த வசனத்தை உண்மையாக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வளவு அக்கறை செலுத்தியுள்ளார்கள் என்று பாருங்கள்:

இருபத்திஜந்து வருட காலம் தங்களது வாழ்க்கைத் துணையாக இருந்த அன்னை கதீஜா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் மறைவுக்குப் பின்னரும் நீண்ட காலம் ஆகியும் அன்னையாரின் குடும்பத்தினரை நபியவர்கள் மறக்காமல் அன்பு செலுத்தி வந்தார்கள்.

ஓருமுறை தங்களது வீட்டின் கதவு தட்டப்படும்போது அந்த ஓசையைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யா அல்லாஹ்! வந்திருப்பவர் என் மனைவி கதீஜாவின் சகோதரி ஹாலாவாக இருக்க வேண்டுமே என்று தங்களது ஆவலை வெளியிட்டார்கள்.

இந்த அறிய படிப்பினைகளை கடைப்பிடித்து வாழ்வோமானால் ஒவ்வொருவரும் தத்தம் பிரிய மனைவியோடு; கண்கள் காணாத, காதுகள் கேட்டிராத இன்பங்கள் கொட்டிக்கிடக்கும் சுவர்க்கத்திற்குள் நுழைய இறைவன் உத்தரவாதம் அளிக்கின்றான்.

ஆகவே இவ்வுலகில் உங்கள் மனைவியுடன் இல்லறத்தை நல்லறமாக்கி வாழுங்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன ''மனிதர்களில் சிறந்தவர் தன் மனைவியிடம் சிறந்தவரே'' எனும் அருள் மொழியை நினைவு கூறுங்கள்.

மனைவியிடம் நல்ல பெயர் எடுப்பது ரொம்பவும் கஷ்டம் என்கிறீர்களா? கஷ்டப்படாமல் சுவர்க்கம் கிடைத்துவிடும் என்று நினைக்கிறீர்களா?

சிறந்தவர்களாகத்தானே சுவர்க்கத்திற்குச் செல்ல முடியும்! ஆகவே, சிரமப்பட்டேனும் நல்ல பெயர் எடுத்துவிடுங்கள், உங்கள் மனைவியிடம்! ஜோடியாக சுவர்க்கம் செல்ல அதுதான் சிறந்த வழி"?



மனைவியை மதிக்க தெரிந்த எந்த ஒரு ஆணுக்கும்
,
புகழின் உச்சி சாத்தியமே..! "

*ஆம்.. ! ஆனால் .. நிறைய குடும்பங்களில் இதுதான் பிரச்சினை...!!*
*கணவனே தனது மனைவியை மதிக்காவிட்டால் ,*
*குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் எப்படி அவளை மதிப்பார்கள்*

இளையராஜா , தான் இசையமைத்த பல பாடல்களை , தன் மனைவி ஜீவாவை நினைத்துத்தான் மெட்டு அமைத்ததாக சொல்லி மனைவியை மேன்மைப்படுத்தி இருக்கிறார்...இதை விட வேறென்ன பாக்கியம் வேண்டும் ஒரு மனைவிக்கு .?

இன்னும் இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல..."இதயம் ஒரு கோயில்... அதில் உதயம் ஒரு பாடல்.." என்ற பாடலில் "என் பாடலின் "ஜீவன்" எதுவோ அது நீயே.." என்ற வரிகளை தன் மனைவி ஜீவாவை மனதில் வைத்துத்தான் எழுதினேன்" என்று எப்போதோ ஒரு பேட்டியில் சொல்லி இருக்கிறாராம் இளையராஜா...

"இதயம் ஒரு கோயில்.." என்ற இந்த பாடல்தான் , இளையராஜா எழுதிய முதல் பாடல் என்று கூகிள் கூறுகிறது... இந்தப் பாடலின் ஜீவனே ..."ஜீவன்" என்ற வார்த்தையில்தான் இருக்கிறது....

"இதயம்  ஒரு கோவில் அதில் உதயம் ஒரு பாடல்
இதில் வாழும் தேவி நீ
இசையை மலராய் நானும் சூட்டுவேன்..."

# இதுதான் பல்லவி... அடுத்து இளையராஜாவின் வரிகளை வாசித்துப் பாருங்கள்..!

"ஆத்ம ராகம் ஒன்றில்தான் வாழும் உயிர்கள் என்றுமே
உயிரின் "ஜீவ" நாடிதான் ராகம் தாளம் ஆனதே
உயிரில் கலந்து பாடும்போது எதுவும் பாடலே
பாடல்கள் ஒரு கோடி எதுவும் புதிதில்லை

ராகங்கள் கோடி கோடி அதுவும் புதிதில்லை
எனது "ஜீவன்" ஒன்றுதான் என்றும் புதிது....

காமம் தேடும் உலகிலே "ஜீவன்" என்னும் கீதத்தால்
ராம நாமன் மீதிலே நாதத் தியாகராஜரும்
ஊனை உருக்கி உயிரில் விளக்கு ஏற்றினாரம்மா
அவர் பாடலின் "ஜீவன்" அதுவே அவரானார்
என் பாடலின் "ஜீவன்" எதுவோ அது நீயே
நீயும் நானும் ஒன்றுதான் எங்கே பிரிவது...

நீயும் நானும் போவது காதல் என்ற பாதையில்
சேரும் நேரம் வந்தது மீதித் தூரம் பாதியில்
பாதை ஒன்று ஆனபோதும் திசைகள் வேறம்மா
எனது பாதை வேறு உனது பாதை வேறம்மா
மீராவின் கண்ணன் மீராவிடமே
எனதாருயிர் "ஜீவன்" எனை ஆண்டாயே
வாழ்க என்றும் வளமுடன் என்றும் வாழ்கவே..."

அடேங்கப்பா...! இதற்கு மேல் ஒரு கணவன் தன் மனைவியை எப்படி சிறப்பித்துக் கூற இயலும்...?
தன் ஜீவனான மனைவி ஜீவாவை சிறப்பித்து எத்தனை ஜீவ வரிகள்...!
இளையராஜா ...தி கிரேட்..!

இளையராஜா தன் மிகப் பெரிய சொத்தான இனிய மனைவி ஜீவாவை கடந்த 2011 இல் இழந்து , ஜீவன் இல்லாத ராஜாவாக ஆகிப் போனார்.. ...!

ஆனால்..இளையராஜாவைப் பொறுத்தவரை , அவரது அன்பு மனைவி ஜீவா , என்றென்றும் அவரின் ஜீவனுக்குள் ஜீவனாக இருக்கிறார் என்றே தோன்றுகிறது...!

" என் பாடலின் "ஜீவன்" எதுவோ அது நீயே...
நீயும் நானும் ஒன்றுதான் ... எங்கே பிரிவது..? "

# 11. தம்பதிகளின் நட்பு.

உங்களை சரியான வழியில் எடுத்துச் செல்ல வந்திருக்கும் இறைத் தூதுவன்தான் மனைவி.

தம்பதிகளின் நேசம், மற்றும் அனைத்து பிரியங்களுக்கும் தாய்வீடு, "அன்பு" என்ற ஒன்றே.!!

பரஸ்பரம் இணைந்து வாழும் பொழுது அது புனிதமாக மாறுகிறது. தனது துணைவிக்கு வாயில் ஊட்டும் ஒரு பிடி உணவும் நல்லறம் என நபி(ஸல்..) அவர்கள் கூறிய பொன்மொழி இங்கு நினைவுக்கூறத்தக்கது.

அதுமட்டுமல்ல கணவன்-மனைவிக்கு இடையேயான தாம்பத்யம் கூட நல்லறம் என இஸ்லாம் நமக்கு கற்றுத் தருகிறது.

## ஆண் - பெண் நட்பு! ஆனந்தம்

பொருளாதாரம், ஆண் - பெண் உடலுறவு , இன்பம் என்ற இருவகைக்குள் மனிதனின் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் அடங்கிவிடும்.

சமுதாய அமைப்பில் நிலவி வரும் பலவித சூழ்நிலைகளால் ஏற்படும் வாழ்க்கைத் தொல்லைகளைச் சமாளித்து வெற்றி பெறுவதில் **தம்பதிகளுக்கிடையே நட்பு** என்பது மிகவும் சக்தி வாய்ந்ததும், அவசியமானதும், பொறுப்பு வாய்ந்ததும் ஆகும்.



தம்பதிகளின் மனம் ஒத்த நட்பின் மூலம் கிடைக்கும் பலதரப்பட்ட வாழ்க்கையின் இன்பங்களை வேறு எவ்வழியில் பெற முடியும்?

வாழ்க்கைச் செல்வங்களுள் மிகவும் சிறப்பானது அன்றோ தம்பதிகளுக்கிடையே நட்பு?

**அறியாமை, அலட்சியம், முரட்டுத்தனம், வரட்டு கௌரவம்** ஆகியவற்றால் ஒரு சிறந்த விசயமான நட்பை ஒரு ஆணோ, பெண்ணோ, குலைத்துக் கொள்கிறார்கள் என்றால்?

இந்த நட்பில் களங்கத்தை ஏற்ப்படுத்திக் கொள்கிறார்கள் என்றால்? அவர்கள் அறிவின் நிலையை, திறமையை என்னெவென்று சொல்வது?

பிறந்து விட்டதனால் வாழ்ந்தேயாக வேண்டும் என்ற நிர்பந்தத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும், ஆணும், பெண்ணும் ஆழ்ந்து சிந்தித்து தம்பதிகள் நட்பினிலே உள்ள களங்கத்தை போக்கிக் கொண்டு, நல்ல நட்பு கொண்டு உறுதியான ஒரு நட்பான நிலை பாட்டில் வாழ முயற்சி செய்ய வேண்டும்.

1. ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்து கொண்டு செயலாற்றுவது.
2. தவறான போக்கு எனில் ஒருவருக்கொருவர் அன்போடும் அளவோடும் கண்டித்து திருத்துவது.
3. கோபம் என்ற விஷம் ஏறாமல் ஒவ்வொருவரும் தங்களை பாதுகாத்துக் கொள்வது.
4. சிக்கனமாகவும், பிறர் பழிகஞ்சியும் செலவு செய்து வருவதும்.
5. நேர்மையான வழியில் மட்டுமே முயற்ச்சித்து பொருளீட்டுவது.
6. உயிரை விடவும் மேலாக கற்பொழுக்கத்தை பாதுகாத்துக் கொள்வது.
7. பெற்றோர்களையும், குழைந்தைகளையும், பராமரிப்பதிலும், விருந்துபசரிப்பதிலும் சமமான பொறுப்பை ஏற்றுக் கொள்வது
8. சமுதாயம், சந்தர்ப்பம், அஜாக்கிரதை அகிய மூவகையில் ஏற்ப்படும் கஷ்ட நஷ்டங்களை காரணங்களை உணர்ந்து சகித்துக் கொள்வதும்.

என்ற எட்டு வழிகளை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப நுட்பத்தோடு பின்பற்ற பழகிக்கொண்டால் இவைகள் தம்பதிகளின் நட்பை பாதுகாக்கும் பலம் வாய்ந்த கோட்டையாகிவிடும்.

இவர திருத்தவே முடியாதுங்க ….?

ஒரு வாஸ்து சாஸ்திர நிபுணர் என்று தன்னையே தொலைக்காட்சி விளம்பரம் செய்யும் ஒருவர் இருந்தார் …

கணவன் மனைவி அவரிடம் சென்றால் ..உங்கள் வீட்டில் அக்கினி மூலை சரியில்லை அதானால் தான்
உங்களுக்குள் சண்டை என்பார் …!
யாரும் நோய் என்று சென்றால் …!

வீட்டில் வாயு மூலை சரியில்லை அதானால் தான் உங்களுக்கு வாயு தொல்லைகள் என்பார் …!

ஒருநாள் திடீர் என ஒரு அறிக்கை விட்டார் …!
மனிதனுக்கு இருதயம் வலது பக்கம் இருக்கிறது என்றார்..பாருங்களேன் …! அப்படி இருந்தால் தான் வாழமுடியும் . வாஸ்து சாஸ்திரப்படி அவன் வாழமுடியும் …என்றார் ..!

இவருக்கு விளக்கம் கொடுக்க பலர் முன் வந்து
ஐயா இருதயம் பக்கம் இடது இருக்கிறது என்றார்கள் ..அவர் நம்புவதாக இல்லை .
அவரை அழைத்துக்கொண்டு ஒரு வைத்தியாசாலையில் இறந்தவரின் உடலை வெட்டி காட்டி பார்த்தீர்களா ..? இருதயம் பக்கம் இடது இருக்கிறது..என்றனர் ..!

இவருக்கு வாஸ்து சாஸ்திரப்படி வலது பக்கம் இருக்காததால்தான் இவர் இறந்து விட்டார் என்றார் …பாருங்களேன் …!

இவர திருத்தவே முடியாதுங்க ….!



(மனைவி நல வேட்பு நாளில் தேவயானி ராஜகுமாரன் பேச்சு.)

## கணவன் மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும்?

கணவன் பால் எனில் அதில் கலக்கப்படும் தண்ணீரைப் போல் இருந்திட வேண்டும் மனைவி.

பாலில் எவ்வளவு தான் தண்ணீர் கலந்தாலும், தண்ணீரை தனி பிரித்துக் காட்டும் குணம் பாலுக்கில்லை. பாலை தனியே காட்டும் குணம் தண்ணீருக்கு இல்லை.

தண்ணீர் கலந்த பாலை அடுப்பில் வைக்கையில், தணணீர் நீராவியாகப் பிரிந்து செல்ல, அதை தாங்காத முடியாத பால் கோபத்தில் பொங்கி எழுந்து மேலே வரும்.

பொங்கி வரும் பாலில் சிறிது தண்ணீர் தெளிக்க தன்னை விட்டுகச் சென்ற தண்ணீர் தன்னிடம் திரும்பியதும், பால் கோபம் தணிந்து பாத்திரத்தில்அடங்கும்.

ஒரு வேளை அப்படி தண்ணீர் தெளிக்கப்படவில்லை எனில் பால் பொங்கி ஊற்றி அடுப்பையே அணைத்துவிடும்.

கணவனும் மனைவியும் ஒருவருக்குள் ஒருவர் அடங்கி இருக்கும் வரையில் தான் குடும்பம் எனும நெருப்பு அணையாமல் இருக்கும்.

## தாம்பத்ய நட்புக்கு ஒரு திரைப்படம்.

ஒரு ஆதர்ஷ வயதான தம்பதிகளின் குடும்பத்தினைக் காட்டிய வண்ணம் துவங்குகிறது படம்.

குடும்பத்தின் தலைவர் அமிதாப். அலுவலகத்தில் பல வருடம் கணக்காரகவே வேலை செய்யு ஓய்வு பெற்று பல லட்சம் ரூபாய்களுனடன் வீடு வருகிறார் அமிதாப்.

**தனது மூன்று மகன்களுக்காய் தனது பங்கிற்கு அவர்களுக்கு படிப்பு முதல் வேலை வரை**

எல்லா விதத்திலும் பாடுபட்டு வளர்த்து நல்ல நிலையில் அவர்களை வைத்திருக்கிறார்.

இரு மகன்களும் தனது மனைவி மற்றும் குழந்தைகளோடு வேறு வேறு ஊரில் வசிக்க, கடைசி மகன் படிப்புக்காய் வேறு இடத்தில் இருக்க, அபிதாப்பினைப் பார்க்க அனைத்து மகன்களும் வருகின்றனர்.

பல லட்சம் ஓய்வு பெற்று வைத்திருக்கும் தந்தையிடம், வேலைக்காகவும், படிப்புக்காகவும், சொந்த தொழில் துவங்கவும் எல்லா மகன்களும் கேட்டு பணத்தை வாங்கிக் கொள்கின்றனர்.

மகன்கள் மீது வைத்திருக்கும் பாசத்தாலும் அன்பாலும் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு அமிதாப்பும், ஹேமாமாலினியும் பெற்றவர்களின் அன்பை அழகாக வெளிப்படுத்தியிருப்பர்.

அமிதாபின் அனைத்து பணத்தையும் வாங்கிக் கொண்ட மகன்கள், தம்மோடே வந்து தங்கும் படி கேட்டுக் கொள்கின்றனர். அமிதாப்பும் ஹேமாமாலினியும் சரி என்று ஒப்புக் கொள்ள கிளம்பி பெட்டியெல்லாம் எடுத்து வைத்து காரில் ஏறும் சமயம், மூத்த மகன் சொல்கிறார்.

அப்பா என்னோடும் அம்மா இளைய மகன் வீட்டிற்கும் போவதால் தம் தாயை இளைய மகன் காரில் ஏறச் சொல்கிறார்.

அதுவரை பிரிவையே பார்த்திராத அந்த வயோதிக தம்பதிகளின் கண்ணில் உண்மைக் காதலை அழகாய் காட்டி கலங்க வைத்திருப்பார் படத்தின் இயக்குனர்.

3 அல்லது 6 மாதம் கழித்து மீண்டும் இடமாற்றம்.. அப்பா இளைய மகன் வீட்டிலும் அம்மா மூத்த மகன் வீட்டிலும் என திட்டம் போட்டு இருப்பர் மகன்கள்.

பிரிந்து வாழும் கணவர் மனைவி இருவரும் புகைப்படத்தைப் பார்த்து வருந்தும் காட்சியிலும், தொலைபேசி அழைப்புக்காய்

காத்து கண்ணீர் மல்க பாசத்தைப் பரிமாறிக் கொள்ளும் காட்சியிலும் ஹேமா மாலினி மற்றும் அமிதாப்பின் நடிப்பு முத்திரை இப்படத்தில்.

எப்போதும் மூத்தவர்களைத் தான் சாப்பாடு மேசையின் நடு நாயகமாய் அமர்த்தும் மரியாதை வழக்கம்.

அப்படி மகனது வீட்டில் அமிதாப் எப்போதும் போல் நடு நாற்காலியில் அமரும் போது, மருமகள் எழச் சொல்லி அது தன் கணவரும்  அமிதாப்பின் மகனுக்குத் தான் அவ்விடம், அவர் தான் வீட்டின் நாயகர் என்று சொல்லும் போது ஒரு வயோதிக தந்தைக்கு கிடைக்க வேண்டிய மரியாதை என்ன என்பதையும் அவர் கிடைக்காததால் படும் துயரையும்
இந்த சிறு காட்சியில் தெளிவாகக் காட்டியிருப்பார் இயக்குனர்.

தனக்கென எப்போதும் கூடவே வைத்திருக்கும் தட்டச்சு இயந்திரத்தை வைத்து இரவு மனைவிக்காய் தட்டச்சு செய்து கொண்டிருப்பார் அமிதாப்.

மருமகள் தூக்கத்திலிருந்து எழுந்து கணவரிடம் அச்சிறு சத்தத்தைக் கூட பொறுக்காமல் திட்ட, தன் மகன் வந்து திட்டி அப்பாவை அவமதிக்கும் காட்சியில் அமிதாப் உறக்கமின்மையால் தான் தட்டச்சு செய்வதாய் கூறி தன்னிலை விளக்கும் முன்னரே மகன் கதவடைத்து தன் படுக்கையறைக்கு சென்ற காட்சியில் அதிர்ந்து கலங்கி அசத்தியிருப்பார்.

அடுத்த நாள் முதல் காஃபி சாப்பிட வெளியில் செல்ல... அங்கே பழக்கமாகும் ஒரு அழகான தம்பதிகளின் நட்பு.

பல நகைச்சுவையான சம்பவங்கள் இந்த தம்பதிகள் செயலிலிருக்கும்.

அந்த சிற்றுண்டி கடையை நடத்தி வரும் தம்பதிகளின் நகைச்சுவைப் பேச்சில் கலந்து அவர்களின் அன்பிற்கு பாத்திரமாய் மாறி 'மோட்டா பாய்' என்று அழைக்கப்பட்டார் அமிதாப்.

இவரது எழுத்துப் பணியை அங்கு வைத்தே செய்ய

முற்படுகையில் அவர்கள் தமது சிற்றுண்டி நிறுவனத்தின் கணக்குகளையும் அவரிடம் ஒப்படைத்து பார்க்கச் சொல்லி மரியாதை செய்வர்.

அமிதாப்பின் உள்ளக் குமுறலை அவர் மனைவியின் நினைவு தரும் வலியை அழகாக அந்த தம்பதிகளிடம் பகிரும்காட்சி அருமை.

அமிதாப்பின் பேரனால் மூக்குக் கண்ணாடி உடைந்துபோகையில், தன் மகனிடம் கேட்பார் கண்ணாடி மாற்றித் தரும்படி.

சரியாக அதே சமயம் மனைவி ஹேமா மாலினியிடம் இருந்து கடிதமும் வரவே, அந்த கடிதத்தைப் படிக்க இயலாமல் கஸ்டப்படும் காட்சியிலும், தன் பேரன் அப்பாவிடம் ஷூவுக்காய் பணம் வாங்கி தன் தாத்தாவிடம் கொடுத்து கண்ணாடி மாற்றம் படி கூறும் காட்சியும் அருமை.

அந்த கடிதத்தை படிக்க ஆவலாய் இருக்கும் அமிதாப் அந்த சிற்றுண்டி நிறுவன தம்பதிகளிடம் சென்று கடிதத்தைப் படிக்கச் சொல்கிறார்.

அந்த கடிதத்தைப் படித்துக் காட்டுகையில் கண்ணீர் மல்க அதற்கு மேல் படிக்க இயலாமல் அழுதுவிடும் காட்சி கண்ணீர் வரவைக்கும் அனைவரையும்.

தனக்கான நேரத்தை இந்த கடையிலேயே மோட்டா பாய் ஆக கழிக்கும் அமிதாப். இறுதியாக அவர்களிடம் விடைபெற்று செல்லும் காட்சியில் அவர்கள் கொடுக்கும் சம்பளத்தை ஏற்க மறுக்கிறார்.

அவர் செய்த வேலைக்காய் கொடுத்து கண்ணீருடனும் பாசத்துடனும் அனுப்பும் காட்சி அசத்தல்.

ஹேமா மாலினியும் அமிதாப்பும் தொடர்வண்டியில் இரு மகன்களின் வீட்டிற்கும் மாறும் தருணம் வந்தது.

பயணிக்கையில் ஒரு நகரத்தில் 10 நிமிடம் இருவரின் ரயிலும் வந்து ஒன்றாய் நிற்கும் என்பதைச் சொல்லி... அந்த சில

நிமிடமேனும் பார்த்துக் கொள்ளும் ஆவலில் பயணிக்கும் அமிதாப் மற்றும் ஹேமா மாலினியின் நடிப்பு அருமை.

குறிப்பிட்ட ஸ்டேசன் வர, இருவரும் ஓடி வந்து சேர்ந்து கொள்ள, சில வினாடி கண்ணீர்... பின் பேச்சு என்று நேரம் கரைய... ரயில் மெல்ல நகர ஆரம்பிக்க.. இருவரும் ஒரு முடிவு எடுத்தவர்களாய் ரயில் பயணிக்காமல் அந்த நகரிலேயே தங்குகின்றனர்.

சிறு வயதில் சூபாலிஸ் வேலைசெய்து வந்த சல்மான்கானின் படிப்புக்கு உதவி முன்னேற்றிய அமிதாப் எதிர்பாராத விதமாக சல்மான்கானைச் சந்திக்க நேரிடுகிறது.

அவர்களை அடையாளம் தெரிந்து கொண்ட சல்மான் அவர்களை வீட்டிற்கு அழைத்து, தான் சமீபத்தில் தான் வெளிநாட்டிலிருந்து வந்து அவர்களைத் தேடினதாகவும் கூறுகிறார்.

சல்மானின் வற்புறுத்தலில் அவரது வீட்டிற்குச் செல்கிறார் அமிதாப் மற்றும் ஹேமா. நல்ல பாசமிக்க மகனாய் நடந்து கொள்கிறார் சல்மான்.

சல்மான் தம்மோடே இருக்கச் சொல்ல அதைத் தவிர்த்து தம் வீட்டிற்குச் செல்ல உத்தேசித்து செல்ல முற்படுகையில் அமிதாப்பின் கனவு காரை பரிசாக தருகிறார் சல்மான்.

வீட்டிற்கு சென்று வசித்திருக்கையில், மோட்டா பாய் என்ற அழைத்த தம்பதிகள் ஓட்டோடி வருகின்றனர் அமிதாப்பை பார்க்க.

அவர் எழுதிய சுயசரிதையை "பாஃபன்" என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டு பல லட்சம் பரிசாக ஒரு நிறுவனம் தருவதாக கூறி பாராட்டுவிழாவிற்கு ஏற்பாடு செய்திருப்பதாக கூறுகின்றனர்.

இறுதியில் என்ன ஆயிற்று, தம் மகன்கள் வந்தார்களா அமிதாப்பைத் தேடி என்று பல விசயங்களோடு மீதிக் கதை முடிகிறது.

**இன்றைய நவீனத்துவத்தில் பெற்றோரை முதியோர் இல்லத்தில் விடும் பல மகன்களுக்கு பாடம் புகட்டும் வண்ணம் அமைந்த படம் என்னை கவர்ந்ததால் இந்த படத்தைப் பற்றி விமர்சிக்க உத்தேசித்தேன்.**

**இப்படத்தில் கணவர் மனைவியின் ஆழ்ந்த அன்பையும் புரிதலையும் மகன் தந்தை உறவையும் அழகாய் காட்டியிருப்பர். நல்ல சமூகச் சிந்தையுள்ள படம்**

# 12.மனைவியின் முதன்மை

இன்றையப் பெண்கள் தூயகல்வி, நல்லெழுக்கம், உடலுறுதி, மனஉறுதி, உயர்ந்த நினைப்பு, இல்லறத் திறமை இவை பெற்று முதன்மையானவர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"வலிமை சேர்ப்பது தாயமுலைப் பாலடா

மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்" - பாரதியார்

பெண்ணினத்தின் பெருமதிப்பை எழுத்தாலும், பேச்சாலும், கவிதையாலும் வேதாத்திரி மகரிசி அவர்கள் உலகிற்கு உணர்த்தி இருக்கிறார்கள். அதனால் இன்று ஆணுக்கு பெண் சமம் என்ற நிலை உண்டாகி வருகிறது.

ஆணைப் பூரணமாக்கும் அருளே பெண் என்று அறிய வேண்டும். ஆண், பெண் உறவே ஆன்ம நேய வளர்ச்சிக்கு ஆதாரமாகும்.

ஆன்மநேயத்தால் அருட்கலப்பு அடைவதாகும் . பெண் எனப் பொலிவது மகாசக்தி விளக்கம்.

"வீட்டிற்கு அரசியும் பெண் அன்றோ
வீரர் விளை நிலம் பெண் அன்றோ
நாட்டிற்கு சமபங்கு பெண் அன்றொ
பொதுநல வணக்கமும் பெண் அன்றோ

நம் மனைவியை ஆழ்ந்து நோக்கினால், பெண் பிறவியின் நோக்கம் தெரியும்.

வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மனைவியின் கடமை மிகவும் சிறந்ததாகும்.

அறிவு, சுகம், அரசியல், பொருள், ஞானம் என்ற ஐந்து வகையான வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளித்தல், கணவன் - குழந்தை நலனைக் கவனித்தல் ஆகிய கடமைகளில் மனைவி முதன்மையாகத் திகழ்கிறாள்.

ஒரு கலந்துரையாடலில் "நீங்கள் யாருக்கு முதலிடம் தருவீர்கள்?" என ஒரு வாசகர் கேட்டார்.

கடந்த முப்பத்து ஏழு வருடங்களுக்கு மேலாக என்னுடனேயே பயணம் செய்யும் என் மனைவி தான்' என்று மனைவிக்கே முதலிடம் தந்தேன்..

வாழ்க்கையில் பெறுமதியான விடயமாக எதைக் கருதுகிறீர்கள்? என்ற கேள்விக்கு எழுத்தாளராக இருப்பதைத் தான் என்று பதில் சொன்னேன்.



நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையை பற்றி என்று கேட்டபோது,

'நாம் வாழ்ந்த வாழ்க்கை எத்தனை சின்னதாக இருந்தாலும் அந்த வாழ்க்கையில் எதிர்கொண்ட மேடு பள்ளங்களையும் கடந்து அதில் வரும் ஆனந்தம், துயரம் போன்றவற்றில் பங்கெடுத்து வாழ்வை புரிந்துகொண்டு வாழ்ந்து காட்டுவதுதான் மிகவும் இனிமையானது அர்த்தம் உள்ளது என்று கருதுகிறேன்.

வாழ்க்கை ஒரு முறை தான் வரும். அதை நாம் இழந்துவிடக் கூடாது. அதை நான் சரியாகவே பயன்படுத்தி திருப்தி அடைந்துள்ளேன்...' என்றேன் - என் மனைவியை நினைத்து

நிறைந்த மனதுடன்.

## மனைவிக்கு முதலிடம் தாருங்கள்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிசி 22 முறை உலகம் வலம் வந்தார். உலகின் பல நாடுகளுக்குச் சென்று மக்களோடு மக்களாக இருந்து பழகியவர். பயிற்சி கொடுத்தவர்.

பொதுவாக மகரிசி எங்குச் சென்றாலும் மன்ற அன்பர்களின் குடும்பங்களில் தங்கி மனவளக்கலை பயிற்சி அளிப்பார்கள். அந்த சமயத்தில் அவர்களுடைய பழக்க வழக்ககங்களையும் தனது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு தடவை அமெரிக்காவில் தங்கி பயிற்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். திரு பட்டேல் என்ற குஜராத் அன்பர் இல்லத்தில் தங்கியிருந்தார்கள்.

இயற்கையாக நற்குணம் வாய்ந்த திரு. படேல் தம்பதிகளுக்கு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழுகின்ற வாழ்க்கைக் கல்வி தெரியவில்லை.

சின்ன சின்ன விஷயங்களுக்குக்கூட எப்பொழுதும் பெரிதுபடுத்தி சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதனைக் கண்ட மகரிசிக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. அதற்காக அறிவுரை வழங்க தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவர் வீட்டில் அனைவரும் உணவருந்தும் வேளை வந்தது. உணவு பரிமாறுவதற்காக திருமதி. பட்டேல் தட்டுகளைச் சுத்தம் செய்து உணவருந்தும் மேஜை மீது வைக்கிறார்கள்.

தட்டில் ஒரு சிறிய அழுக்கு சுத்தம் செய்யப்படாத இருந்தது. அதைப் பார்த்தவுடன் திரு. பட்டேல் அவர்களுக்கு கோபம் எல்லை மீறியது.

தன் மனைவியைக் கடுமையான வார்த்தைகளால் வறுத்தெடுத்தார்.

உடனே அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள், மிஸ்டர் பட்டேல், விடுங்கள், நான் அதைச் சுத்தம் செய்து விடுகிறேன் என்று கூறி எழுந்து தட்டை எடுக்க ஆரம்பித்தார்கள்.

உடனே பதறிப் போன அவர் சுவாமிஜி மன்னியுங்கள். நானே அதைச் சத்தம் செய்துவிடுகிறேன், என்றவர் வேகமாக எழுந்து அந்தத் தட்டை எடுத்து சுத்தம் செய்தும் வைத்தார்.

இதைத்தான் மகரிசியும் எதிர்பார்த்தார். ”மிஸ்டர் பட்டேல், அதை நீங்கள் முன்பே செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும், தட்டின் முழுப்பகுதியையும் அவர்கள் சுத்தம் செய்து வைத்து விட்டார்கள்.

அதில் ஒரு புள்ளி அளவு இருந்த அழுக்கை உங்கள் பங்காக எண்ணிச் சுத்தம் செய்திருந்தால், இவ்வளவு நேரம் நீங்கள் பட்ட சினம் தேயைில்லாது போயிருக்குமே.

உங்களில் ஒருவர் மீது மற்றவருக்கு ஏற்பட்ட வருத்தமும் எழுந்திருக்காதே.

அத்துடன் திரும்ப இது போன்ற தவறு செய்யாத அளவுக்கு திருமதி. பட்டேலுக்கு திருத்தமும் வந்திருக்குமே என்றார்கள்.

இவ்வளவு எளிதாக அச்சிக்கலைத் தீர்க்க வழியிருந்தும் உங்கள் ஆணவத்தால் அதைப் பெரிதுபடுத்திக்கொண்ட அவருக்கு இது மனதில் நின்றாலும், கோபப்பட்ட நிலையில் அவர் சிந்தனைக்கு எட்டவில்லை.

இருந்தாலும் சுவாமிஜிக்கு முன்பாக நாம் சண்டையிட்டிருக்கக் கூடாது என்ற தெளிவை மட்டும் பெற்றார்கள்.

அடுத்த நாள் அடுத்த நிகழச்சி அரங்கேறிது. அவர்கள் குழந்தைகள் இருவரும் ஓயாது சண்டையிட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

பெற்றோர்களே அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, குழந்தைகள் எப்பொழுது பார்த்தாலும் அடங்காமல் சண்டை போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களை எப்படித் திருத்துவது?

அதற்கு மகரிசி அவர்கள் நிதானமாக, "இந்த வீட்டில் குழந்தைகள் மட்டுமா சண்டை போகிறார்கள்?" என்கிறார்கள்.

அறிவு விழிப்பு நிலை பெற்ற அந்த தம்பதிகள் சட்டென்று ஒருவரை மற்றொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் செய்த தவறு அவர்களுக்கு புரிகிறது. அன்றிலிருந்து அவர்கள் தங்களுக்கு சண்டையிடுவதை விட்டு மனவளக்கலைப் பயிற்சியில் ஆழ்ந்து மன அமைதியோடு வாழத் தொடங்குகிறார்கள். இனிய இல்லறம் உதயமாயிற்று.

## கணவன்—தன் மனைவிக்கு மதிப்புக் கொடுக்கும்..........

இயேசுவுக்கும் கணவர்களுக்கும் இடையே உள்ள ஓர் ஒப்புமை என்ன?

*இயேசுவைக் கடவுள் சபைக்குத் தலையாக நியமித்திருப்பதுபோல் கணவனைக் குடும்பத்திற்குத் தலையாக நியமித்திருக்கிறார். அப்போஸ்தலன் பவுல் இப்படிச் சொன்னார்:*

*"கிறிஸ்து சபைக்குத் தலையாக இருப்பதுபோல், கணவனும் மனைவிக்குத் தலையாக இருக்கிறான்; கிறிஸ்து தம் உடலாகிய சபையின் மீட்பராக இருக்கிறார். கணவர்களே, சபைக்காகக் கிறிஸ்து தம்மையே அர்ப்பணிக்கும் அளவுக்கு அதன்மீது அன்பு காட்டியதுபோல் நீங்களும் உங்கள் மனைவிமீது தொடர்ந்து அன்பு காட்டுங்கள்."* (*எபே. 5:23, 25*)

*இயேசு தம்முடைய சீடர்களை நடத்திய விதம், கணவர்கள் தங்களுடைய மனைவியை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு மாதிரியாக இருக்கிறது.*

இயேசு தமது சீடர்களை நடத்திய விதத்திலிருந்து கணவர்கள் என்ன கற்றுக்கொள்ளலாம்? (ஆ) கணவர்கள் என்ன செய்யும்படி பேதுரு ஆலோசனை கூறினார்?

*கிறிஸ்தவத் தலைமைத்துவம் என்பது சர்வாதிகாரிபோல் நடந்துகொள்வதை அல்ல, மதிப்பு மரியாதையையும் சுயநலமற்ற அன்பையும் காட்டுவதையே அர்த்தப்படுத்துகிறது; இதை இயேசுவின் முன்மாதிரியிலிருந்து கணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.*

*கணவர்கள் அவரைப் பின்பற்றி, தங்கள் மனைவியை அன்பாக நடத்தும்படியும், 'அவளுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுக்கும்படியும்' அப்போஸ்தலன் பேதுரு ஆலோசனை கூறினார்.* (1 பேதுரு 3:7-ஐ வாசியுங்கள்.)

*அப்படியானால், கடவுள் கொடுத்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்துகிற அதே சமயத்தில் மனைவிக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கணவர்கள் எப்படிக் கொடுக்கலாம்?*

கணவர்கள் தங்களுடைய மனைவிக்கு எவ்வாறு மதிப்புக் காட்டலாம்?

*ஒரு கணவர் தன் மனைவிக்கு எவ்விதத்தில் மதிப்புக் காட்டலாம்? அதற்கு ஒருவழி, குடும்பத்தில் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்குமுன் அவளுடைய கருத்துகளையும் உணர்வுகளையும் மனதில்கொள்வதாகும்.*

*வேறொரு இடத்திற்குக் குடிமாறிச் செல்வது, வேறொரு வேலை பார்ப்பது போன்ற பெரிய விஷயங்களானாலும் சரி, விடுமுறைக்கு எங்கே செல்வது,*

*சிக்கனமாக எப்படிக் குடும்பம் நடத்துவது போன்ற சிறிய விஷயங்களானாலும் சரி, அவளுடைய கருத்துகளைக் கேட்டறிய வேண்டும்.*

*இப்படி எடுக்கப்படுகிற தீர்மானங்கள் முழு குடும்பத்தையுமே பாதிக்கும் என்பதால், மனைவியின் அபிப்பிராயத்தைக் கேட்பது நல்லது;*

*அது அன்பான செயலும்கூட. அப்படிச் செய்யும்போது அவரால் எல்லாருடைய உணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுத்து நியாயமாகத் தீர்மானமெடுக்க முடியும்;*

*கணவர் இப்படியெல்லாம் செய்தால் அவருக்கு ஆதரவளிப்பது மனைவிக்குச் சுலபமாக இருக்கும். (நீதி. 15:22)*

*மனைவிக்கு மதிப்புக் காட்டுகிற கிறிஸ்தவக் கணவர்கள் தங்களுடைய மனைவியின் அன்பையும், மதிப்பு மரியாதையையும் சம்பாதிப்பார்கள்; அதைவிட முக்கியமாக, யெகோவாவின் அங்கீகாரத்தைப் பெறுவார்கள்.—எபே. 5:28, 29.*



**மனைவியின் மனதை கவர்வது எப்படி!!!**

நான் கேட்டு தெரிந்துக் கொண்ட கருத்துக்களின் அடிப்படையில், மனைவியை கவர சில டிப்ஸ்................

## டிப்ஸ் -1:

ஒரு மனைவி தான் பேசும் போது கணவன் அதை முழுமனதோடு கவனிக்க வேண்டும் என எதிர் பார்க்கிறாள்.

அதனால் பேப்பர் அல்லது புக் படித்துக்கொண்டோ, டி.வி பார்த்துகொண்டோ உங்களிடம் பேசிக்கொண்டிருக்கும் மனைவிக்கு வெறும் ' உம் ' 'உம் ' என்று வேண்டாவெறுப்பாக பதிலளிக்காமல்,

அவள் பேசுவது ' உப்பு சப்பில்லாத டப்பா ' மேட்டராக இருந்தாலும் அவள் முகம் பார்த்து கவனியுங்கள்.

'உம்' கொட்டுவதோடு மட்டும் அல்லாமல், " ஓ! அப்படியா", " ஆஹா! இப்படியா?" என்று உரையாடலில் பங்கு பெறுங்கள்.

உங்களின் இந்த ஈடுபாடு உங்கள் மனைவியை உற்சாகமடைய செய்யும். உங்கள் மனைவின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள், மனைவி

பெரிதும் எதிர்பார்க்கும் அங்கீகாரம் இது.

## டிப்ஸ் -2:

தமிழ் சினிமாவில் காண்பிப்பது போல் ' அல்வாவும், ஒரு முழம் பூவும்' வாங்கி கொடுத்தால் மனைவி நாய் குட்டியாக உங்களை வலம் வருவாள் என எதிர்பார்க்காதிருங்கள்.



பெண்களுக்கு 'பூ' பிடிக்கும்தான், அதை வாங்கி கொடுப்பது உங்கள் கடமை. பூ கொடுத்து 'ஐஸ்' வைக்கும் காலம் மலையேறி விட்டது.

மனைவிக்கு அவர்கள் விரும்பும் பொருளை [ உதாரனம்-: புடவை, நகை, அலங்கார பொருட்கள்......]

கணவன் தன் மனைவிக்கு எந்த முன்னறிவிப்பும் இன்றி ' சர்பரைஸ்' ஆக கொடுத்தால் பூரித்து போவார்கள். **மனைவியின் மனதை கொள்ளையடிக்க இது ஒரு முக்கியமான யுக்தி**!!!

கணவன் தன்னை சர்பரைஸ் டின்னருக்கு ரெஸ்டாரன்ட் அழைத்துச் செல்வதை வீட்டிலிருக்கும் மனைவி பெரிதும் எதிர்பார்க்கிறாள்.
வேலைக்கு செல்லும் மனைவி தன் வீட்டு வேலைகளில் சிறு சிறு உதவிகளை கணவன் செய்யும் போது அவன் மீது இன்னும் அதிக ஈர்ப்பும் அன்பும் கொள்கிறாள்.

## டிப்ஸ் -3:

பெண்களுக்கு புகழ்ச்சி , பாராட்டு இரண்டும் மிகவும் பிடிக்கும். அதிலும் முக்கியமாக அவர்கள் உடை அலங்காரம், அழகு போன்றவற்றை ரசித்து கணவன் பாராட்டினால் திக்கு முக்காடி மெய்மறந்து போய் விடுவார்கள்.



செயற்கைதனமாக , மற்றும் ஒப்புக்காக வர்னிப்பது, பாராட்டுவது போன்றவற்றை மனைவி

விரும்புவதில்லை, அதை எளிதில் கண்டும் பிடித்து விடுவார்கள்........ஜாக்கிரதை]

அதனால் மனைவியை மனதார பாராட்டுங்கள், ரசித்து வர்னியுங்கள்.

ஒரு டயமண்ட் நெக்லஸ் தர முடியாத சந்தோஷத்தையும் நிறைவையும் உங்கள் அன்பான வார்த்தைகள் உங்கள் மனைவிக்கு கொடுத்துவிடும்!!

## டிப்ஸ் -4:

மனைவியை குறை கூறுவதை நிறுத்துங்கள், முக்கியமாக குழந்தைகள் முன், மற்ற குடும்பத்தினர் முன், நண்பர்கள் முன் குறை கூறுவதை முற்றிலுமாக தவிர்த்து விடுங்கள்.

குறை கூறுதல் ஒரு மனைவியின் மன நிலையை பெரிதும் பாதிக்கும். உங்கள் மீதுள்ள நேசம் குறைந்து கடமைக்காக சேவை செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.



அதற்காக மனைவியை எப்போழுதும் புகழ்ந்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று அர்த்தம் அல்ல.

உதாரனமாக, உங்கள் மனைவியின் சமையலில் காரம் அதிகம், உப்பு இல்லை என்றால்,
முதலில் " சாப்பாடு ரொம்ப நல்லாயிருக்குதுமா, ஆனா உப்பு கொஞ்சம் போட்டா இன்னும் டேஸ்டா இருக்கும்" என நாசூக்காக கூறுங்கள், கப்பென்று புரிந்து கொள்வார்கள், தன் தவறையும் திருத்தி கொண்டு இன்னும் அதிக சுவையுடன் சமைக்க முனைவார்கள்.

உங்களுக்காக பார்த்து பார்த்து சமைக்கும் மனைவியின் மனம் நோகாமல் குறைகளை எடுத்துச் சொல்வது ஒன்றும் பெரிய விஷயமில்லையே!!!

## டிப்ஸ் -5:

பெண்களுக்கு பொதுவாக தன் பிறந்த வீட்டின் மேல் பிடிப்பு ஜாஸ்த்தியாக இருக்கும். அதனால் உங்கள் மனைவியிடம் அவர்கள் பிறந்த வீட்டினரை பற்றி குறை கூறாதிருங்கள்.



தன் பிறந்த வீட்டினரை தன் கணவன் நக்கல் செய்வது,

அவமானபடுத்துவது போன்றவை ஒரு பெண்ணின் உணர்வுகளை காயபடுத்தி உங்கள் மணவாழ்க்கையில் விரிசலை உண்டுபண்ணும். உங்கள் மீது உங்கள் மனைவிக்கு இருக்கும் மரியாதை குறையவும், பழிவாங்கும் உணர்ச்சியாக உங்கள் பெற்றோர் மீது வெறுப்படையவும் செய்யும்.

## டிப்ஸ் -6:

உங்கள் மணநாள், மனைவியின் பிறந்த நாள் போன்ற முக்கியமான தினங்களை ஞாபத்தில் வைத்துக்கொள்ள முயற்ச்சியுங்கள்.

மனைவியின் பிறந்த நாளன்று அவர் விரும்பும் இடத்திற்கு அழைத்துக் செல்லலாம், பரிசு பொருட்களை வாங்கி கொடுக்கலாம். அது ஒரு விலையுர்ந்த பரிசாக தான் இருக்க வேண்டுமென்பதில்லை.



மனைவியை கடைக்கு அழைத்துச் சென்று, "எனக்கு கார்ட்[வாழ்த்து அட்டை] செலக்ட் பண்ண தெரியாது, பரிசு வாங்க தெரியாது ,அதனால உனக்கு பிடித்ததை வாங்கிக்கோ, நான் உனக்கு பரிசாக கொடுத்ததாக நினைச்சுக்கோ"ன்னு கடமைக்காக பரிசு கொடுக்கிறேன் பேர்விழி என்று டுபாக்கூர் வேலையெல்லாம் செய்ய கூடாது.

சேலைதான் பெண்களுக்கு நல்லதொரு ஆபரணமாகும். மனைவி இல்லாத ஒரு தினம் கூட மிகவும் சிரமமாக இருக்கும் வகையில் பரஸ்பரம் மானசீகமாகவும், சரீரகமாகவும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும்பொழுதே இல்லறம் இனிமையை அடையும்.

உண்மையில் பெண்ணின் வாழ்க்கை மெழுகு திரி போன்றது. சிறு வயதில் பெற்றோர்களுக்கு செய்யும் சின்ன சின்ன சேவைகள் என துவங்கி கணவனுக்கும், பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் அண்டை அயலாருக்கும், சமூகத்திற்குமாக அவளுடைய சேவை பரந்து விரிந்தது ஆகும்.

ஆனால் பல பெண்களுக்கு சேவையின் இறுதியில் இவ்வுலகில் கிடைக்கும் பலனோ உடைந்து போன உள்ளமும், கண்ணீர் துளிகளுமாகும்.

மனைவி என்ற பதவி சேவையின் மறுபெயராகும். சொந்த விருப்பங்களையும், கனவுகளையும் தனது கணவனுக்காக மாற்றிவைக்கும் மனைவி தனது குழந்தைகளுக்காக ஊணும், உறக்கமும் கூட சிலவேளைகளில் தியாகம் செய்கிறாள்.

தம்பதியினர் இடையே நாம் எவ்வளவுதான் இல்லற வாழ்க்கையின் இனிமையில் இருவரின் பங்கினை குறித்து சிலாகித்து கூறினாலும், மனைவி தனது கணவனை விட சற்று கூடுதலாக பொறுமையை கடைப்பிடித்தாலே குடும்பம் எனும் ஓடம் அமைதியாக நகர்ந்து செல்லும்.

விட்டுக்கொடுத்தல் இதனைக் குறித்து முந்தைய தொடரில் கண்டோம். இல்லறத்தில் மனைவியே அதிகமாக விட்டுக் கொடுக்கிறாள். விட்டுக் கொடுத்தல் பெண்ணிற்கு ஒரு பரீட்சையாகும்.

கணவனும், கணவனுடைய் வீட்டார்களும் ஆதிக்க மனப்பான்மையுடன் அடக்கியாள முற்படும் வேளையில் எதிர்த்து நின்று போராடும்போது கிடைப்பது அல்ல பெண்ணின் வெற்றி.

விட்டுக்கொடுத்து சாந்தமாக தன்னடக்கத்துடன் நடந்துக்கொள்ளும் வேளையில் அவள் கணவனை மட்டுமல்ல கணவன் வீட்டாரின் உள்ளங்களையும் வென்றுவிடலாம்.

ஆண்களை பற்றிய ஒரு பெண்ணின் பதிவு..,
=======================================

👨 ஆண் என்பவன்...

🍁 கடவுளின் உன்னதமான படைப்பு

🍁 சகோதரிகளுக்காக, இனிப்புகளை தியாகம் செய்பவன்

🍁 பெற்றோர்களின் ஆனந்தத்திற்காக, தன் கனவுகளை 💭 தியாகம் செய்பவன்

🍁 காதலிக்கு பரிசளிக்க, தன் பர்ஸை காலி செய்பவன்

🍁 மனைவி குழந்தைகளுக்காக , தன் இளமையை அடகுவைத்து அலட்டிக்கொள்ளாமல் அயராது உழைப்பவன்

🍁 எதிர்காலத்தை  லோன் வாங்கி கட்டமைத்துவிட்டு, அதனை அடைக்க வாழ்க்கை முழுதும் லோ லோ என்று அலைபவன்

🍁 இந்த போராட்டங்களுக்கு இடையில், மனைவி-தாய்-முதலாளிகளின் திட்டுகளை வாங்கி, தாங்கிக்கொண்டே ஓடுபவன்

🍁 அடுத்தவர்களின் ஆனந்தத்திற்காகவே ஆயுள் முழுக்க அர்ப்பணிப்பவன்.

💧அவன் வெளியில் சுற்றினால், 'உதவாக்கரை' என்போம்.

💧வீட்டிலேயே இருந்தால், 'சோம்பேறி' என்போம்.

💧குழந்தைகளை கண்டித்தால், 'கோபக்காரன்' என்போம், கண்டிக்கவில்லை எனில், 'பொறுப்பற்றவன்' என்போம்.

💧மனைவியை வேலைக்கு செல்ல, அனுமதிக்காவிடில் 'நம்பிக்கையற்றவன்' என்போம், அனுமதித்தால் 'பொண்டாட்டி சம்பாத்தியத்தில் பொழப்பை ஓட்டுபவன்' என்போம்

💧தாய் சொல்வதை கேட்டால், 'அம்மா பையன்' என்போம்; மனைவி சொல்வதை கேட்டால், 'பொண்டாட்டி தாசன்' என்போம்

💎 ஆண்களின் உலகம், தியாகங்களாலும் வியர்வையாலும் சூழப்பட்டது.

💎 இதனை பகிர்ந்து, ஆண்களுக்கு புன்னகையையும் பெண்களுக்கு புரிதலையும், ஏற்படுத்தலாம்!

**பெருங்கவிக்கோ வா .மு .சேது ராமன் மனைவி சேது மதி இறந்ததும், அவரை தன் சொந்த ஊரில் அடக்கம் செய்து ஆலயம் கட்டி வருடம் தோறும் நினைவு நாளில் தமிழ் அறிஞர்களுக்கு பொற்கிழி வழங்கி ,ஊதுவார் வைத்து ஓதி பூசை நடத்தி வணங்கி வருகிறார் .**

**நான் அந்த ஆலயத்தை நான் நேரில் சென்று பார்த்து வந்தேன் . மனைவிக்காக அவர் எழுதியுள்ள போற்றிப் பாடல் அங்கு பதியப்பட்டுள்ளது .**

**மற்றவர்கள் மனைவிக்காக அவர் போல ஆலயம் கட்டாவிட்டாலும் -மனதளவிலாவது மனைவியை மதிப்போம் .**

## 13. மனைவிமார்களே சிந்தியுங்கள்.

ஒரு நாள் ஒரு குடும்பத்தலைவி சுவாமி வேதாத்திரி மகரிசியைச் சந்திக்க வந்தார். என்னம்மா உன் குறை என்று மகரிசி கேட்கிறார்கள்.

அதற்கு அந்தப் பெண் ”என் கணவனர் என்னை மிகவும் உதாசீனப்படுத்துகிறார். என்னை மதிப்பதில்லை. என்னிடம் எதையும் கலந்து ஆலேசிப்பதில்லை. அதனால் வர வர எனக்கு இல்வாழ்க்கையே கசந்து விட்டது சுவாமி” என்கிறார்.



சுவாமிஜி அந்தப் பெண்ணிடம்”அம்மா, உங்கள் கணவர் உங்களுக்கு ஏதேனும் நன்மைகள் செய்திருக்கிறாரா? அதை நினைவுப்படுத்திக் கூற முடியுமா?” என்கிறார்கள்.

சிறிது நேரம் யோசித்த அவர் தன் வாழ்க;கைத் கதையை சொன்னார்.

”சுவாமிஜி நான் 12அம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் பொழுது எனது பெற்றோர்கள் எனக்கு திருமணம்செய்து வைத்து விட்டார்கள். எனக்கு மேற்கொண்டு படிக்க் மிகவும்ஆசை. என் விருப்பத்தை கணவரிடம் தெரிவித்தேன். அதற்கென்ன படியேன் என்று கூறி என்னை தினமும் பள்ளியின் வாசலில் கொண்டு வந்து விட்டு அலுவலகம் செல்வார்”

”சரி”

"நான் 12வது தேர்வில் வெற்றி பெற்றேன். அதற்கு மேல் பட்டப்படிப்பில் படிக்க எனக்கு ஆசை. அதையும் அவரிடம் சொன்னேன். மகிழ்ச்சியோடு ஒப்புதல் அளித்து அஞ்சல் மூலம் கற்க உதவினார். பட்டப்படிப்பு படித்து முடித்தேன்"

"எப்படி தேர்வெல்லாம் நீங்களே சென்று எழுதி வந்தீர்களா? உங்களுக்கு வேறு யாரேனும் உதவினார்களா?"

"இல்லை மூன்றாம் ஆண்டில் சிறப்பு பயிற்சி வகுப்புகளுக்கும், தேர்வு எழுதும் பொழுதும் அவரே ஒரு மாதத்திற்கு மேல் அலுவலகத்திற்கு விடுமுறை எடுத்து வெளியுரில் வந்து என்னுடன் தங்கியிருந்து படிப்பை முடிக்க உதவினார் சுவாமிஜி."

அதற்கு மேல் பி.எட். படிக்க ஆசைப்பட்டேன். அந்த விருப்பதையும் என் கணவர் நிறைவேற்றினார். பி.எட். படித்து முடித்தேன்.

"சரி"

"எனக்கு சிறுவயதிலிருந்தே ஆசரியராகப் பணிபுரிய விருப்பம் நான் என் விருப்பத்தை அவரிடம் சொன்னேன். அவரும் மிகச் சிரமமப்பட்டு நான் விரும்பியபடி ஒரு பள்ளியில் ஆசிரயர் வேலையும் வாங்கிக் கொடுத்தார்".

"கடைக்குச் சென்று காய்கறிகளெல்லம் நீங்கள்தானே வாங்கி வருவீர்கள்?" என்கிறார் சுவாமிஜி.

"இல்லை. அதையெல்லாம் அவர்தான் வாங்கி வருவார். கத்தரிக்காய் என்ன விலை என்பதுகூட எனக்குத் தெரியாது" என்கிறார் புன்னகையுடன்.

"வீட்டுவேலைகளில் ஏதும் உதவுவாரா?"

"காய்கறிகளெல்லாம் பெரும்பாலும் அவரே நறுக்கிக் கொடுத்துவிடுவார். என்னுடைய வேலை எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு கலக்குவதுதான்" என்கிறார் பெருமையுடன்.

"சரி. பள்ளிக்கு எப்படிச் செல்வீர்கள்?"

"அவரே ஸ்கூட்டரில் கொண்டுவந்து எங்கள் பள்ளியில் விட்டுவிட்டு அவருடைய அலுவலகம் சென்றுவிடுவார்" என்கிறார் மகிச்சியாக.

"ஏனம்மா. இதற்கு மேல் ஒரு கணவர் மனைவிக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? என்ன செய்ய முடியும் என்று கருதுகிறீர்கள்?

இப்படி ஒரு கணவர் கிடைத்ததற்கு நீங்கள் வாழ்வில் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அவர் வாழ்வில் இதுவரை உங்களுக்குச் செய்துள்ள நன்மைகள் எல்லாம் ஒரு சில நிமிடம் நினைத்துப் பாருங்களேன்" என்கிறார் மகரிசி.

"சிறிதுநேர அமைதிக்கு பிறகு, ஆம்! கூவாமிஜி, என் கணவரின் அருமை பெருமைகளை நான் அறியாமல் இருந்து விட்டேன்.

இதுபோன்ற ஒரு கணவர் எந்தப் பெண்ணிற்கும் கிடைப்பதது அரிதுதான். என் முன்னோர்கள் செய்த புண்ணியம் இது" என்கிறார் நாதழுக்க. அந்த நினைவில் ஆழ்ந்து அவர் கண்கள் பனிக்கின்றன.

சுவாமிஜி அவரை வாழ்த்தி அனுப்பி வைக்கிறார்கள். சிறிது காலம் கழித்து சந்தித்த அவர், சுவாமிஜி இப்பொழுதெல்லாம் நாங்கள் மகிழ்சசியாக இருக்கிறோம்.

அவர் மேல் ஏன் குறைகூறினேன் என்ற காரணத்தையும் கண்டுபடித்து விட்டேன்" என்று கூறி காரணத்தை விளக்குகிறார்.

"எங்கள் பள்ளியில் 35 ஆசிரியைகள் வேலை செய்கிறோம். மதியம் உணவ இடைவேளயின் போது ஓய்வு அறையில் அவரவர்கள் தங்கள் கணவரைப் பற்றி - நான் சொன்னால் அவர் கேட்பதில்லை. எனக்கு உதவுவது இல்லை என்றெல்லாம் குறை கூறுவார்கள். குறைகளையே கேட்டுப் பழகிய நானும் என் கணவரை பற்றி என்ன குறை கூறலாம் என ஆராய்நது குறைகூறத் தொடங்கினேன். அதுவே எனக்கு பழக்கமாகி வழக்கமாகிவிட்டது"

"இப்போது எங்கள் பள்ளி ஓய்வு அறையில் என் கணவரின் பெருமையை மட்டுமே பேசுவது என முடிவு செய்து நான் முதலில் பேச ஆரம்பித்தேன்.

அதைக்கேட்ட பிறகு ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் கணவர்தான் உயர்ந்தவர் என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள்.




இப்பொழுது எங்கள் மனதில் குறைகள் தோன்றுவதில்லை. நிறைவேதான் இருக்கிறது. மன நிறைவோடு இருக்கிறோம்" என்று கூறுகிறார்.

இனிமையான குடும்ப வாழ்க்கைத் தொடர வேண்டுமானால் பிறர் நமக்குச் செய்யும் நமைகளை எல்லாம் அடிக்கடி எண்ணிப் பார்கக வேண்டும்.

நன்றி மறப்பது நன்றல்ல. நன்றி உணர்வு மனதில் பொங்க வேண்டும். அப்பொழுதுதான் சின்ன சின்ன குறைகள் குற்றங்கள் இருந்தாலும் அதைப் பெரிதுபடுத்தாமையும் மன்னிக்கும் தன்மையும் மனதில் தோன்றும். இல்லறம் இனிக்கும்.

## 14. வாழ்க்கைத் துணையை வாழ்த்தி வாழ்வோம்.

நாம் வாழும் போது நம்முடைய வாழ்க்கையிலே உறுதுணையாக இருந்து, இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு நம் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்வதற்குக் குடும்பத்திலே என்ன வேண்டும்?

கணவனுக்கு மனைவி, மனைவிக்குக் கணவன் வேண்டும். இந்த உறவு நன்றாக, சீராக இருக்க வேண்டும்.

அந்த இரண்டு உயிர்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லாமல் பிணக்கு ஏதுமில்லாமல் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்ள வேண்டும்.

என்றும் மாறாத அளவுக்கு நட்பு உருவாக வேண்டுமென்றால் அவர்களை நினைத்து மனமார வாழத்த வேண்டும்.

இதுவரைக்கும் மனைவி கணவனுக்காகப் பிரார்த்திக்க வேண்டும் என்பதாகத்தான் நடைமுறைப் பழக்கத்தில் உள்ளது.

மனைவியை வாழ்த்த வேண்டும் என்று கணவனுக்கு யாரும் சொல்லிக் கொடுத்ததே இல்லை. ஆனால் மனவளக்கலை மன்நத்தில்தான் இந்த அற்புதம் நடைபெறுகிறது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

கணவன் தொழிலற்சாலைக்கு, வேலைக்குச் சென்றால் மனைவி, "அவரை நல்லபடிக் காப்பாற்று" எனத் தெய்வத்தை வேண்டுவாள். சமுதாயத்தில் இது ஒரு பழக்கமாகவே வந்து விட்டது.

ஆனால், ஆண்களுக்கு நல்லதாக இருந்தால் கூட பெண்களைப் பாராட்டக் கஞ்சத்தனம்.

பெரிய, பெரிய நன்மைகள் பெற்றவர்கள்கூட மனைவியை வாய் திறந்து சிறிது பாராட்டத் தயங்குகிறார்கள். காரணம் அவள் கை ஓங்கி விடுமாம்!

மனைவியைப் பாராட்ட அந்த இன்பத்தை தானும் உணர மறுப்பவர்களுக்கு எங்கிருந்து உள்ளத்தில் அன்பு உண்டாகும்?

இதற்குக் காரணம் பல ஆண்டு காலமாக பெண்களை சாதாரணமாக உபயோகிக்கக் கூடிய பொருளாக மதித்து வந்தது தான். இந்தப் பழக்கத்தில பல நூல்கள் இருப்பதனால் அந்தக் கருத்து இன்னும் இருக்கிறது.

பெண்களுக்கு சம உரிமை மாத்திரம் இல்லை. பெரிய மதிப்பும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த உலகத்தில் வாழ்கின்ற எல்லோரும் பெண் இனத்தின் மதிப்பே என்பதை ஏன் உணர மறுக்கிறோம்?

பேருலக அமைதிக்கு அவசியம் எதுவென்றால் பெண்கள் மதிப்பையும். தியாகத்தையும் உணர்ந்து அவர்களை மனம் திறந்து பாராட்டுவது தான்.

போனகாலம் எல்லாம் போகட்டும். இனி வருங்காலத்திலேனும் முதலில் அவரவர்கள் வீட்டிலே தெடாங்குங்கள்.



இந்தத் தொடக்கத்தில் பழைய பதிவுகளாலான ஒரு வேகத்திலோ, சினத்திலோ மனைவி உணரலாமல் இருக்கலாம். நீங்கள் வாழ்த்திக் கொண்டு இருங்கள்.

அவர்கள் மீது சினம் தவிர்த்து வாழத்திக் கொண்டு இருங்கள். வரவர, எந்த மாதிரியான மாற்றம் வருகிறது எனப் பாருங்கள்.

அவர்கள் நினைப்பதையே நிங்கள் செய்வீர்கள். நீங்கள் நினைப்பதையே அவர்கள் செய்வார்கள். இது எவ்வளவு இன்பமாக இருக்கும்?

இன்று இன்ன சமையல் செய்தால் நன்றாக இருக்கும் என நான் நினைத்தேன். இந்தப் பொரியல் இருந்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன்.

வீட்டில் அதையே செய்திருந்தார்கள் என்ற அளவுக்கு மாற்றம் வரும். இது எல்லாம் பிரத்தியட்சமாக நான் கண்ட உண்மைகள்.

இந்த அளவு ஒன்றுமை வேண்டும் என்றால் வாழ்த்தி, வாழ்த்தி தான் வரவேண்டும். மனதை உணர்த்திக் கொள்ள வேண்டும். மனதைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்படி வாழ்த்தி, இரண்டு உள்ளங்களும் ஒன்றுபட்டு அடங்கி இருக்கக் கூடிய அன்பை விரித்துச் செயல்படுத்துவதற்கு இது ஒரு பயிற்சியாகிறது.

மனைவி கணவைனையும், கணவன் மனைவியையும் வாழத்துவது மிக்க நலமுடைய செயல். ஏன் எனில் கணவன், மனைவி உறவு சரியாக இருந்தால்தான் இருவருடைய வாழ்க்கையும் அமைதியாக இருக்கும்.

எந்தக் காரியத்திற்கு, எந்த செயலுக்குச் சென்றாலும் அது வெற்றியாக அமையும்.

இவர்கள் நல்ல முறையிலே, அமைதியிலே இருந்தால்தான் குழந்தைகள் நல்லவர்களாக, சமுதாயத்திற்கு ஏற்ற குழந்தைகளாகப் பிறக்கும். வளரும்.

எனவே கணவன், மனைவி இடையில் நல்லுறவு அவசியம். மாறாக, இவர்கள் ஒருவர் மேல் ஒருவர் சினம் கொள்வார்கள் என்றால் அதுவே சாபமாக மாறும்.

இதனால், அடிக்கடி சண்டைகள் வரலாம். குழப்பங்கள் வரலாம். ஒருவரை ஒருவர் அலட்சியம் செய்வதாலோ, பகைமை கொள்வதாலோ ஒருவர் உள்ளம் மற்றவர் மீது வருத்தம் அடையும்பொழுது அந்த வருத்தமே சாபமாகி விடுகிறது.

மற்றவர்கள் வருத்தத்தை விட. கணவன் மனைவி என்ற உறவிலே அவர்களுடைய எண்ணத்திற்கு அதிக வலுவுண்டு.

எனவே அந்தப் பகைமை உணர்வாலே ஏற்படக் கூடிய ஒரு தீய விளைவு. இருவருக்குமே அடிக்கடி நோய்களைத் தோற்றுவிக்கும். அத்துடன் தற்செயல் விபத்துக்கள் ஏற்படவும் காரணமாக அமையும்.

இதை உணர்ந்தலால் கணவன் மனைவி உறவு எவ்வளவு புனிதமானது என இருவருமே புரிந்து அதைப் போற்றிக் காக்க வேண்டும்.

இதனால்தான் மனவளக்கலை மன்றங்களிலே தியானம் முடிந்தவுடன் தன் வாழ்த்திற்குப் பிறகு, மனைவி கணவனையும், கணவன் மனைவியையும் வாழத்தும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

தியானம் செய்து முடிந்தவுடனே மனைவியைக் கணவனும், கணவனை மனைவியும் "வாழ்க வளமுடன்" என்று மூன்று முறை வாழ்த்த வேண்டும்.

வாழ்த்துப் பெறுபவர் முழு உருவத்தையும் மனதுள் நினைத்து ”வாழக வளமுடன்” என மூன்று முறை வாழ்த்த வேண்டும்

வாழ்த்துதல் மிக்க நலமுடைய ஒரு செயல். ஏனென்றால் கணவன் மனைவி உறவு சரியாக இருந்தால்தான் இருவருடைய வாழ்க்கையும் அமைதியாக இருக்கும்; எந்தக் காரியத்திற்கு, எந்தச் செயலுக்குச் சென்றாலும் அது வெற்றியாக அமையும்.

மேலும் கணவன் மனைவி உறவு நல்ல முறையிலே இருந்தால், அமைந்தால் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் நல்ல குழந்தைகளாக, சமுதாயத்திற்கு ஏற்ற குழந்தைகளாகப் பிறக்கும். எனவே தம்பதிகளுக்கிடையே இனிமையான உயிர்க்கலப்பு உணர்வு, நல்லுறவு அவசியம்".

வாழ்க வளமுடன் என்ற வார்த்தையின் ஒலியிலிருந்து ஒரு அலை ஒருவருரிடமிருந்து தோன்றி வந்தால் அதற்குப் பல ஆற்றல்கள் உண்டு. அது ஒரு வாரத்திலும் பல மாற்றங்களை, இன்பத்தைத் தரும்.

பகைமையை வைத்துக் கொண்டு வாழ்த்தவே முடியாது. வாழ்த்தும் போது பகைமை நிறகாது.

பொதுவாக பகைமை, வஞ்சம் என்பதை மன்னிப்பாக மாற்றும் தகைமை மனதிற்கு வர வேண்டும்.

மன்னிப்பு கணவன், மனைவி இடையேதான் அதிகம் இருக்க வேண்டும். எனவேதான் வாழ்க்கைத் துணையை வாழத்துவதை மனவளக்கலை மன்றங்களிலே வைத்துள்ளார்கள்.

மனைவிக்கு அவ்வளவு மதிப்புத் தர வேண்டியதமாக ஆண் சமுதாயம் உள்ளது என்பதுதான்உண்மை.

# 15. மருமகள்களுக்கு ஒரு தந்திரம்

அருட்தந்தை வேதாத்திரி மகரிசியினை நோக்கி ஒரு மருமகள் புலம்ப ஆரம்பித்தார்.

"சுவாமி, என் மாமியார் வீட்டில் அவர்களின் கொடுமைகள் தாங்க முடியலை. தொட்தற்கெல்லாம் குறை சொல்கிறார்கள். என் மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது. அவர்களிடம் எப்படி நடந்து கொள்வதென்றே எனக்குத் தெரியவில்லை. தாங்கள்தான் எனக்கு ஒரு நல்ல வழிகாட்ட வேண்டும்"

"அவர்கள் உனக்கு அப்படி என்னத்தான் செய்கிறார்கள் அம்மா?"

"என் மாமியார் சாராரணமாக காலையில் ஐந்து இட்லி சாப்பிடுவார்கள்."

அதனால் நேற்று காலை நான் அவர்களுக்கு தட்டில் ஐந்து இட்லி வைத்தேன். உடனே அவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

"நான் என்ன இத்தனையா தின்கிறேன். என் வயிறு என்ன தாளியா?" என்று எரிந்து விழுந்தார்கள். நான் பொறுத்துக் கொண்டேன்.

இன்று காலை, சரி இரண்டு இட்லி வைப்போம். அவர்கள் அதைச் சாப்பிட்டு முடித்த பிறகு மீண்டும் வைப்போம் என்ற கருதி, இரண்டு இட்லி வைத்தேன்.



என்னை சுட்டு எரித்து விடுவதைப் போல் பார்த்து, என் வீட்டிலேயே என்னைப் பட்டினி போட்டுக் கொன்று விடுவாய் போல் இருக்கிறதே" என்று

சத்தம் போட்டார்கள்.

என் அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டேன். நான் அவர்களிடம் எப்படி நடந்து கொள்வது சவாமிஜி?"

"அம்மா, நீ பொறுமையோடு இருக்க வேண்டும். நாளைக்கு இரண்டு இட்லியை ஒரு தட்டில் வைத்துச் சாப்பிடச் சொல். மற்றோர் தட்டில் நான்கு இட்லியை வைத்து அவர்கள் அருகில் வைத்து விடு.

"அத்தை, அருகில் நான்கு இட்லி வைத்துள்ளேன். நீங்கள் சாப்பிட்டுவிட்டு உங்களுக்குத் தேவையானதை எடுத்துப் போட்டுக் கொளளுங்கள்" என்று அன்பாடு, கனிவோடு கூறுங்களேன். அவர்கள் குறை சொல்லவதற்கு இடம் இல்லாமல் போகுமல்லவா?" என்கிறார்கள்.

அப்பெண்ணிற்கு மனதில் ஒரு நம்பிக்கை கீற்று விடுகிறது. அவர் மாமியார் குறைசொல்லாமல் தவிர்க்க இப்படியும் ஒரு வழி இருக்கிறதே!

"அம்மா நீ புகுந்தவீடு சென்று இருக்கிறாய், உனக்கு ஒரு தந்தரம் சொல்கிறேன். நீ இவ்வளவு காலம் உன் பிறந்த வீட்டில் பழகியிருக்கிறாய். அதே எண்ணம் அங்கு புகுந்த வீட்டில் செய்யும் செயல்களோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பேசத் தோன்றும். அதைக் கட்டுப்படுத்திக் கொள்.

நீ தவறிக்கூட உன் தாய் வீட்டுப் பெருமையை உன் மாமியார் வீட்டில் பேசிவிடாதே. அது பெருமைக்குரியதாக இருந்தாலும் சரி. அவர்கள் எது செய்தாலும் அது சிறப்பு என்றே கூறு.

உன் மாமியார் எடுத்துக் கொடுத்த புடவை உனக்கு பிடிக்கவில்லை என்றாலும் "என் அத்தையைப் போன்று யாராலும் புடவை தேர்வு செய்ய முடியாது. எனக்குப் பிடித்த புடவையையே எடுத்துக் கொண்டு வந்து கொடுப்பார்கள்" என்று அவர்கள் காதுபட பிறரிடம் சிறிது காலம் பேசிவா.

பிறகு பார், ”சொஞ்ச காலத்தில் சாவிக் கொத்து உன் கைக்கு வந்து விடும்” என்கிறார்கள் அப்பெண்ணிடம்.



மருமகள் என்பவள் மருவி வந்த மகள் என்பதை மாமியார் உணர வேண்டும். பிறர் வீட்டில் பிறந்து தன் வீட்டில் வாழ வந்த, தான் பெறாத மகள். அவ்வளவு தானே.

அதே போன்று தன் வீட்டில் பிறந்த மகள் பிறர் வீட்டில் வாழச் சென்றுள்ளாள் என்பதையும் மறந்து விடக்கூடாது. இதை மாமியார்கள் உணர்ந்து மருமளைத் தன் மகளாகப் பேண வேண்டும்.

அதே போன்று மருமகளும் மாமியாரை தன் தாயாகாக் கருத வேண்டும். அப்பயிற்சியும் பழக்கமும் வந்தாலே குடும்பத்தில் பிணக்கு நீங்கும்.

உலகில் எந்த Lawவை (சட்டதசை எடுத்துக் கொண்டாலும்) அது ஒன்று மற்றொன்றைத் தழுவியே நிற்கும்.

உதாரணமாக கார்ப்பரேசன் Law என்றால் அது மாநில அரசுக்கு உட்பட்டதாக இருக்கும். மாநில அரச Law என்றால் அது மத்திய அரசு Law- விற்கு முரண்படாமல் இருக்கும்.

ஆனால் இரண்டு Law க்கள் மட்டும் நம் நாட்டில் எப்பொழுதுமே ஒத்துப் போவதில்லை. அதில்ஒன்று Mother-in-Law மற்றெனாறு Daughter-in-Law என்பார்கள் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி வேடிக்கையாக.

# 16. மனைவியின் மனையாட்சி.

அன்பு, அருள், அறன் என்ற மூன்றின் இருப்பிடமாக அமைபவள் பெண். அவளிடத்துத் தாய், சகோதரி, மகள், கடவுள் போன்ற எல்லா இயல்புகளும் உள்ளன. திருமூலரும்,

"தாரமும் ஆகுவள் தத்துவமாய் நிற்பள்
காரண காரியமாகும் கலப்பினள்
புரண விந்து பொதிந்த புராதனி
பாரளவாம் திசை பத்துடையாளே"

ஆண், பெண் அன்பில் இணைந்து உருவாகும் இல்லற வாழ்க்கையில் ஆண்கள் மேலோங்கி மதிக்கப் பெறும் நிலை இன்று மாறிவருகிறது.

ஆண், பெண் இணைந்த புதியதொரு சமுதாயம் உணருவாகப் பெண்கள் அறிவு, திறமை, நுட்பம், செல்வம் மற்றும் எல்லாவற்றிலுமே சம உரிமை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற வேதாத்திரி மகரிசியின் கனவு நினைவாகி வருகிறது.

ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானமாகச் சுதந்திரத்தோடு அறிவுச் சுதந்திரத்தோடு வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆணுக்கள் பெண் அடக்கம் என்பதை உலகம் புரிந்து கொண்டு வருகிறது.

இந்த உலகம் காலை முதல் மாலை வரை எவ்வளவோ பொருட்களை - நம் தேவையை நிறைவு செய்ய, அனுபவிக்க - கொடுத்துக் கொண்டு உள்ளது.



ஓசூரில் மனைவிக்கு மரியாதை

அதற்கு ஈடாகத் திருப்பி நமது தொண்டினை, கடமையைச், செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து செயலாற்ற

இல்லறம் என்பது அவசியமாகிறது.

இதில் இல்லறம் என்பது ஏதோ சம்மசாரம் என்பது மட்டும் அல்ல. இல்லம் கொண்டு பொருள் ஊட்டிக் காத்துத் தானும் உண்டு, பிறர்க்கும் அளித்துத் தொண்டாற்றுவது தான் இல்லறம்.



மனைவியின் மனையாட்சி சிறப்பே, அந்த இல்லறத்தின் சிறப்பாகும்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரின் உறவினர்களும் விருந்தினர்களாக வர வாய்ப்புக்கள் உண்டு. அவர்களை ஒத்த மதிப்போடு இருவரும் உபசரிப்பது கணவன்,மனைவி இடையே அன்பு வளரச்செய்யும். எளிய உணவே ஆயினும் விருந்தினரை உபசரிப்பதில் இன்முகம் காட்டுக என்பார் வேதாத்திரி மகரிஷி

விட்டுகொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் இவற்றின் ஒட்டுமொத்த உருவமாக வலம் வருகிறாள் மனையாள்.

சூழ்நிலைகளுக்கேற்ப விட்டுகொடுத்தல், வளைந்துக் கொடுத்தல்போன்ற பண்புகளில் புகலிடமாக மனையாள் விளங்குகிறாள்.

சில நேரங்களில் சில சங்கடங்கள் வரும்போது பொறுத்துக் கொண்டுதான் போக வேண்டும். அதற்கும் மேல் சில நேரங்களில் நமக்கு பிடிக்காத விஷயங்கள் சகித்துக் கொள்ளவும் வேண்டும்.

சரியான நேரத்தில் நாசூக்காக எடுத்துக்கூறி மற்றவர்களையும் திருத்தி விடும் தியாகியாக இருப்பவள் மனையாள்.

தியாகம் என்பது நம்முடைய உரிமையையே விட்டுக்கொடுப்பது. இது என்னுடைய் பொருள்தான், ஆனா பரவாயில்ல நீயே வச்சுக்க.



கணவனின் வருமானத்திற்கேற்ப தன்னுடைய தேவைகளை சுருக்கிக்கொள்ளும் பெண் மனைவி அல்ல... ஒரு 'வரம்'...

இவையெல்லாம் கடைபிடிப்பதினால் நாம் மிகவும் குனிந்து போகிறோம் என்பதோ, கோழை என்றோ அர்த்தமல்ல. வரப்போவதெல்லாம் லாபம்தான். இதைவிட திருமண வாழ்வை இனிமையாகி கொள்ள வேறுவழியில்லை.



**வள்ளுவர் பெண்கட்கு மதிப்பளித்தார். மகளிர் பிறரால் கட்டுப்படுத்தப்படுதலின்றி உரிமையுடன் வாழ வேண்டுமென விரும்பினார்.**

## மனையும், மனைவியும்

தகுதி வாய்ந்த இல்லத் தலைவியையுடைய இல்லமே நல்லில்லமாக அமைதல் கூடும் என வள்ளுவர் கருதினார்.

ஒருவனின் மனைவியிடத்து

மனைகேற்ற மாட்சி, இல்லறத்தை நன்கு நடத்தும் இயல்பு இல்லாவிடின் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய பிற பல நலன்களைப் பெற்றிருப்பினும் பயனற்றது.

மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில் ஒன்றும் இல்லாவிடினும் யாதும் உள்ளது போலாகுமென்றும் அவள் சிறந்தவளாக வாய்க்காவிடில் பிற வளங்களனைத்தும் இருப்பினும் யாதுமில்லாதது போலாம் என்றும் கூறுகிறார்.

**"மனையாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்** "

இல்லவள் நல்லவளானால் எல்லா நன்மைகளும் அவ்வில்லம் பெறும், இல்லையேல் உள்ளது ஏன்? என்று வள்ளுவர் வினாத் தொடுக்கின்றார்.

.




அன்பும் அறனும்

அன்புடன் வாழ்வதே பண்பு; அறத்துடன் வாழ்வதே பயன். அன்பையும், அறத்தையும் இரு கண்களாகக் கொண்டு ஒழுகுவது தான் வாழ்வு நெறி என்பது வள்ளுவரின் தெளிந்த கருத்து. இல்வாழ்வைப் பின்னிப் பிணைத்துச் செல்வது அன்பறவேயாகும்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** "

என்பது வான்மறை. இல்வாழ்க்கையின் பயனால் துணைவியின் மேல் படர்ந்த அன்பு பிற உயிர்கள் மேலும் படர்ந்து அன்பறமாய் மாறுமானால் வாழ்வின் நோக்கம் வெற்றி பெறும்.

துணைவியை நேசித்து மனையிலிருந்து வாழ்ந்தால் மட்டும் இல்வாழ்வு சிறந்து விடாது தானும் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தையும் வாழ வைக்கும் அறமே இல்வாழ்வு; நல்வாழ்வு, அவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது யாதுமில்லை.

உலகில் உள்ள அத்தனை உயிரினத்துக்காக ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர், ஒரே ஒருவருக்கு மட்டும் நான்கடியில் ஒரு பாட்டு எழுதியுள்ளார் .

யார் அந்த பெருமைக்குரியவர்? வேறுயாருமில்லை அவரது மனைவிக்காகத்தான் அந்த பாட்டினை எழுதினார். அந்த தெய்வ புலவரின் துணைவியாரின் பெயர் வாசுகி அம்மையார்.

அந்த அம்மையார் தனது கணவரின் செயல்பாடுகள் குறித்து வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு விமர்சனமும் செய்ததில்லை.ஏனெனில் அவர் கணவர் மீது அளவு கடந்த நம்பிக்கையும் பாசமும் வைத்திருந்ததே காரணம்.

தனது கணவர் செய்யும் எந்த செயலும் நிச்சயம் அது சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தவர்.

தனது கணவர் உணவு உண்ணும் போது ஒரு சிறிய ஊசியினை கையில் வைத்திருப்பார்.

அவர் உண்ணும் போது கீழே சிந்தும் உணவு பருக்கையினை அந்த ஊசியின் மூலம் குத்தி பின்பு தண்ணீர் நிரம்பிய குவளையில் போடுவார். பின்பு தண்ணீரினை வடித்து விட்டு பின்பு அதனை தனது சாப்பாட்டுடன் கலந்துகொள்வார்.

இதற்கான காரணத்தை அந்த அம்மையார் தனது கணவராகிய திருவள்ளுவரிடம், தாம் இறக்கும் தருவாயில் தான் கேட்டு தெரிந்துகொண்டார்.

திருவள்ளுவரின் இல்லத்திற்கு துறவி ஒருவர் வந்தார். அவரை இன்முகத்துடன் வரவேற்று இருக்கையில் அமரச் செய்தார்.

பின்பு இருவரும் பழைய சாதம் உண்டனர். அப்போது வள்ளுவர் தனது மனைவி வாசுகியிடம் "சாதம் சூடாக உள்ளது விசிறிவிடு" என்றார்.

நாமாக இருந்தால் " பழைய சாதம் எப்படி சுடும் " என்ற கேள்வியினை கேட்டிருப்போம்.

ஆனால் வாசுகி அம்மையார் அதுபோன்று எந்த கேள்வியினையும் கேட்கவில்லை கணவரின் சொல் படி விசிற ஆரம்பித்துவிட்டார்.

இதனால் அம்மையார் ஏதும் அறியாதவர் என்ற அர்த்தமில்லை,தனது கணவர் கூறினால் அதில் நிச்சயம் ஆழ்ந்த பொருள் இருக்குமமென நம்பினார்.

வள்ளுவர் இதன் மூலம் நிருபித்தது என்னவெனில் வாதம் செய்யாமல் விட்டுகொடுக்கும் மனப்பான்மையை தனது துணைவியார் பெற்றிருந்தார் என்பதே.

வாசுகி அம்மையார் ஒருமுறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது வள்ளுவர் அவரை அழைத்தார்.

உடனே அம்மையார் கிணற்றுக்கயிற்றினை விட்டுவிட்டு சென்றார். ஆனால் அந்த கயிற்றுடன் கூடிய குடம் கிணற்றில் விழாமல் அப்படியே நின்றதாம்.

இப்படி ஒரு மனைவி கிடைத்தால் நிச்சயம் அந்த கணவன் பாக்கியசாலி தான். உடல் நலக்குறைவால் வாசுகி அம்மமையார் இறந்துவிட்டார்.

இந்த உலகிற்கே தனது குறள் வரியின் மூலம் பலம் சேர்த்தவர்

" நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு "

என்ற குறள் மூலம் அறிவுரை வழங்கிய தெய்வப்புலவர் தனது மனைவி வாசுகியின் பிரிவினை தாங்காமல் கலங்கிவிட்டார்.

இந்த குறளின் பொருள் என்னவெனில் " நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பதுதான் இந்த உலகிற்கே பெருமை" என்பதாகும்.

ஆகையால் அம்மையாரின் பிரிவினை அவர் இயற்கையின் நியதியாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அம்மையாரின் பிரிவினை தாங்காமல்,

"அடியிற்கினியாளே அன்புடையாளே
பாவாய் - அடிவருடி

பின்தூங்கி முன்னெழு
படிசொல் தவறாத ம்பும் பேதாய் - இனிதா [அ]ய்

என் தூங்கும் என்கண் இரவு"

- என்று அவரின் பிரிவை நினைத்து நாலுவரி பாட்டெழுதினார். இந்த பாட்டு வரியின் பொருள் என்னவெனில்

"அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே ! என் சொல்படி நடக்க தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே ! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படிதான் இரவில் தூங்கப் போகிறதோ! " என்பதுதான் இப்பாடலின் பொருளாகும்.

எவ்வளவு அருமையான இல்லறத்தை வாசுகி அம்மையார் நடத்தியிருந்தால், அவ்வளவு பகுத்தறிவு சிந்தனையை தந்த வள்ளுவர் அவரின் பிரிவுக்காக வருந்தியிருப்பார்.

இன்றைய காலங்களில் தேவையில்லாத சிறு சிறு காரணங்களால் கணவன்,மனைவி இடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு,வாக்குவாதம் பெருகி திருமண முறிவு ஏற்படுகிறது.

நீதிமன்றத்தில் இன்று எதனை விவாகரத்து வழக்குகள் உள்ளன நமது குடும்ப பெருமையினை நீதிமன்றங்களில் விவாகரத்து என்ற பெயரில் புதைத்து விடுகின்றோம். இது தேவையா?

வள்ளுவர்,வாசுகி அம்மையாரின் வாழ்க்கையினை நமது மனதில் நிறுத்தி குறைந்தபட்சமாவது ஒற்றுமையுடன் வாழ முயற்சிப்போம்.

# 17. மனைவி சொல்லே மந்திரம்

“மனம் விரும்புதே உன்னை உன்னை

உறங்காமலே கண்ணும் கண்ணும் சண்டை போடுதே

நினைத்தாலே சுகம்தானடி நெஞ்சில் **உன்** முகம்தானடி “

பாரதநாட்டை எடுத்துக் கொண்டால் கவிக்குயில் சரோஜினி நாயுடு, பண்டிட் விஜயலட்சுமி, எம்.எஸ். சுப்புலட்சுமி, இந்திரா காந்தி, ஜான்சி ராணி போன்ற பல பெண்மணிகள் இந்த நாட்டின் பெயரையும், புகழையும் உலகில் நிறுத்திய பெருமைக்குரியவர்கள்.

இந்த வகையில் பல்துறையிலும் வல்லுனராக விளங்கும் பல பெண்கள் நமது நாட்டின் புகழுக்கும், பெருமைக்கும் அணி சேர்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

இத்தகைய பெருமைக்கு காரணம் என்ன?

குடும்பத்தலைவியான மனைவியின் சொல்லே மந்திரமென நினைத்து போற்றும் குடும்பங்கள் சிறப்படைகின்றன. அதில் தோன்றும் மக்கள் பேரும் புகழும் பெற்று சரித்திரம் படைக்கின்றனர்.

## மனைவி ஒரு மந்திரி என்பதை நிரூபியுங்கள்

திருமணமான பெண்களுக்கு பண்முகத்திறமை உண்டு. சிறந்த இல்லத்தரசியாகவும், கணவருக்கு சிறந்த மனைவியாகவும், குழந்தைகளுக்கு சிறந்த தாயாகவும் கடமையாற்ற வேண்டும்.

இதில் சிக்கலான விசயம் கணவரிடம் சிறந்த மனைவி என்ற பெயரெடுப்பதுதான். மனைவி என்பதை அதிகாரம் செய்யும் பதவியாக எடுத்துக்கொண்டு கணவரை அடிமையாக நடத்துவபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஒரு கிராமத்தில் கொல்லன் ஒருவன் வாழ்ந்து வந்தான்,

"இரும்பு சாமான்கள் செய்து விற்று பிழைப்பு நடத்தி வந்தான்"......!!

அவனுக்கு..,
" அன்பும் அழகும் நிறைந்த மனைவி  இருந்தாள்"....!!

அவன் வாழ்க்கை...
உழைப்பும்,
காதலும்,
ஊடலுமாக
மகிழ்ச்சி
வெள்ளமாய்
ஒடிக் கொண்டிருந்தது.......!!

கொல்லப் பட்டறை தொழில்...,
" ஒரு சமயம் நலிவுற்றது"......!!



"அன்றாட உணவுக்கே வறுமை ".....,
என்ற நிலை வந்துவிட்டது.....!!

"கொல்லன் சோகமே உருவாகி விட்டான்".......!!

அதைக் கண்ட மனைவி ஆறுதலாய் பேசினாள்,

"எதுக்கு கலங்குறீங்க"......!!

"இந்த தொழில் இல்லைன்னா என்ன"......,

"பக்கத்து காட்டுல போய் விறகு வெட்டி".....,

"அதை அக்கம் பக்கத்து கிராமத்துல".....,
" வித்தா நாலு காசு கிடைக்குமே".......!!

"அதை வெச்சு ராஜா வாட்டம் வாழலாமே" என்றாள்,,,,.!

"புது நம்பிக்கை
புது உற்சாகம்
உள்ளத்தில்" கொல்லன்.......,

"இப்போது விறகுவெட்டி ஆனான்".......!!

"அந்தத் தொழிலில் ஓரளவு வருமானம் கிடைத்தது".......!!

வீட்டில் தினமும்..,
சோளக்கஞ்சி,
கொள்ளுத் துவையல்....

கூடவே .....,
மனைவியின் சிரித்த முகமும்...... ,

கனிவான கொஞ்சலும் .....,

"அவனுக்கு ஒரளவு மகிழ்ச்சியை தந்தாலும்".....,

சற்றே சோகமும் இழையோடி இருந்தது,

ஒருநாள்...,
" ஊடலும் சரசமுமாய் இருந்த வேளையில் மனைவி கேட்டாள்"........,

"மாமா...
"இன்னும் உங்க மனசு ஏதோ சோகமாய் இருப்பது போல
தெரியுதே"........!!

விறகு வெட்டியான.....
கொல்லன் சொன்னான்...

"பட்டறைத் தொழில் நல்லாயிருந்த காலத்தில்,

"நம்ம வீட்டில்...
தினந்தினம்
நெல்லுச்சோறும்..,
கறிக் கொழம்புமாய் இருக்கும்"......!!

இப்போ....,
" இப்படி வயிற்றைக்.கட்டி வாழுறோமே".......!!

அதுதான்டி குட்டிம்மா...., "மனசுக்கு என்னவோ போல இருக்கு"..,....!!!

"கண்ணு கலங்காதீங்க"......!!

"என்னோட நகையை வித்தா கொஞ்சம் காசு கிடைக்குமே".....,

அதை மூலதனமா போட்டு "நாம ஒரு விறகு கடை வச்சிரலாம்".......!!

காட்டுல விறகு வெட்டுற ஜனங்களுக்கு........,

" கூலி கொடுத்து விறகு வாங்கிப் போடுவோம்"......!!

கடைன்னு ஆயிட்டா.....,

" எந்த நேரமும் ஜனங்க விறகு வாங்க வருவாங்க".....!!

"நமக்கு நல்லபடியா வருமானம் கிடைக்கும்".... என்றாள்.

"மீண்டும் புத்துணர்ச்சி நமது கொல்லனின் உள்ளத்தில்"......!!

விறகு வெட்டியானவன்....,
"இப்போது விறகுக்கடை முதலாளியானான்"........!!

"வருமானம் பெருகியது"......!!

அப்புறமென்ன....
" வீட்டில் கறிசோறு தான்".....!!

ஆனால்...,

வாழ்க்கை
அடுத்தடுத்த

சோதனைகளை
ஏற்படுத்தாமல் விட்டு விடுமா என்ன.......!!

"வந்தது கெட்ட நேரம்"........,

"விறகு கடையில் தீ விபத்து".........!!

"அத்தனை முலதனமும் கரிக் கட்டையாகி விட்டது"...,,,!!

"தலையில் அடித்துக் கொண்டு அழுதான்" .....
விறகு கடை முதலாளி.

நண்பர்கள் பலரும் வந்து ஆறுதல் சொன்னார்கள்,

"கலங்காதே நண்பா"..... ,

"மறுபடியும் விறகுவெட்டி வாழ்க்கை நடத்து"......!!

எதிர்காலத்தில்.......,

" எதாவது நல்லது நடக்கும் என்றார்கள்"....!!

மனைவி வந்தாள்.....!!

"கண்ணீரை துடைத்தாள்"....!!

"அவன் தலைசேர்த்து நெஞ்சோடு கட்டியணைத்தாள்".....!!

"கண்ணீர் மல்க சொன்னாள்".....,

"இப்போ என்ன ஆயிடுச்சுனு அழறீங்க".....!!

"விறகு எரிஞ்சு வீணாவா போயிருச்சு".......!!

"கரியாத்தானே ஆகியிருக்கு"......!!

நாளைலயிருந்து....,
" கரி வியாபாரம் பண்ணுவோம்".......!!

தன் தலை நிமிர்த்தி.....,
" அவளின் முகம் பார்த்தவனுக்கு"....... ,

"மீண்டும் வாழ்வில் ஒளி தெரிந்தது"........!!

'ஊக்குவிக்கவும்'....... ,
'உற்சாகப் படுத்தவும்'........,
"அன்பு செலுத்தவும்"...,

"அன்பான மனைவி அமைந்தால்".......... ,

"முடங்கி கிடக்கும் முடவனும் கூட ".......,

"எவரஸ்ட் சிகரம் தொடுவான்"

மனைவியாக இருப்பதை விட கணவருக்கு நண்பியாக இருப்பதுதான் சிறந்தது என்று உளவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறந்த மனைவியாகயும், ஆலோசகராகவும் திகழ நினைப்பவர்களுக்கு உளவியல் நிபுணர்கள் தெரிவித்த சில யோசனைகள்

## மனைவி ஒரு மந்திரி

கணவரின் முதல் ஆலோசகரும், விமர்ச்சகரும் மனைவிதான் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுங்கள்.

மனைவி ஒரு மந்திரி என்பதை அனைத்து சந்தர்ப்பத்திலும் கணவருக்கு உணர்த்த வேண்டும்.

கணவரின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதோடு மட்டும் மனைவியின் கடமை முடிந்து விடுவதில்லை. தவறுகளை எடுத்துக்கூறி திருத்துவதற்கும் உரிமை உண்டு.

## புரிதல்தான் வாழ்க்கை

கணவன் மனைவிக்கிடையே ஒரு சில நேரங்களில் கருத்து மோதல்கள் ஏற்படுவது இயல்பு.

ஆனால் அவற்றை சாதாரணமாக எடுத்துக்கொண்டு உடனடியாக தீர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேவையற்ற விவாதங்களை தவிர்த்தாலே குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படாது.

## ஈகோவை துரத்துங்கள்

கணவரிடம் பேசும்போது, வெளிப்படுத்தும் வார்த்தைகளில் அன்பும் கனிவும் மட்டுமே இருக்கவேண்டும். அதிகாரமோ, ஆணவமோ தேவையில்லை.

சிறு வார்த்தைக் கூட மனதளவில் காயத்தை ஏற்படுத்தி விடும். நீங்கள் பேசும் வார்த்தைகள் எளிதாக உங்கள் கணவரை சென்றடைந்து அதை செயல்படுத்தும் விதமாக அமைய வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் ஈகோவை எட்டிப்பார்க்க விடாதீர்கள்.

## கணவருக்கு மதிப்பு

எந்த சந்தர்ப்பத்திலும் பிறரின் முன் கனவரை விமர்ச்சிக்க வேண்டாம். குழந்தைகளின் முன் கூட கணவரை விமர்ச்சிப்பது தவறான முன் உதாரணமாகிவிடும்.

கணவர் செய்வது தவறாகவே தெரிந்தாலும், தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பேசி அவரது தவறை புரிய வைக்க வேண்டும்.

## மன உளைச்சலை தீர்க்கலாம்

எல்லா நாட்களிலும் படுக்கையறையில் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

வேளைப்பளு, மன உளைச்சல் உள்ளிட்ட காரணங்களில் சில நாட்களில் செயல்பட முடியாத நிலை ஏற்படாலாம்.

அன்றைய தினத்தில் கணவரை தொந்தரவு செய்வதை விடுத்து அவரை உற்சாகமூட்டும் விளையாட்டுக்களின் ஈடுபடலாம். அது கணவரின் மன உளைச்சலை போக்கி விடும்.

கணவர் என்பவர் காலம் முழுவதும் நம்முடன் வரப்போகிறவர் என்ற எண்ணம் மனைவிக்கு இருக்க வேண்டும். வாழ்வின் சரிபாதி. கணவரின் மதிப்பை உயர்த்துவது மனைவியின் கடமை.

அசாதாரண சந்தர்ப்பங்களில் கணவரின் நண்பர்கள் உங்கள் வீட்டிற்கு வர நேர்ந்தால் நீங்கள் நடந்து கொள்ளும் விதம்தான் அவர்களிடம் மதிப்பை உயர்த்தும்.




*அனுமன், சீதாபிராட்டியை அசோக வனத்தில்*
சந்தித்து, தன்னை ராம பிரானின் தூதுவனாக அறிமுகம் செய்து கொண்டபோது, சீதா பிராட்டிக்கு மனதுக்குள் இலேசான வருத்தம் வந்ததாம்.

எவ்வாறு ராமர் தனது அனுமதி இல்லாது எவரெவரையோ தனது நண்பனாக்கிக் கொண்டுள்ளாரே என்று.

அனுமனிடம் சீதாபிராட்டி, ‘எப்படி எனது ராமர் வானரமான உன்னுடன் நண்பரானார்?’ என்று கேட்டாராம்.

அனுமன் உடனே அவரது கேள்வியின் அர்த்தத்தை புரிந்து கொண்டு பதிலளித்தாராம்.

அன்னையே, நானும் என் வானரக்கூட்டமும் சுக்ரீவனது நாட்டிலே வாழ்ந்து கொண்டு இருந்தபோது ஒருமுறை நீங்கள் வானத்திலிருந்து ஒவ்வொரு நகையாகத் தூக்கி எறிந்தீர்களே? ஞாபகம் உள்ளதா?

அப்போது அந்த நகைகளைத் தந்து நீங்கள்தானே முதலில் எங்களை ரட்சித்தீர்கள்?

அதன்பின்னர்தானே ராம லட்ஷமணர்களையே நாங்கள் சந்தித்தோம்?

ஆகவே, உங்களுது கடாக்ஷம் முதலில் எங்களுக்குக் கிட்டியதால்தான் ராமச்சந்திர பாகவானின் கடாக்ஷமும் கிட்டியது!' என்று கூறிய ஹனுமன் 'மாதாவே சரணம்!' என விழுந்து வணங்கினாராம்.

சீதா பிராட்டியின் மனமும் குளிர்ந்ததாம்..!

நீதி:

எந்த ஒரு காரியத்துக்கும் மனைவியர் முதலில் சாங்ஷன் கையெழுத்துப் போட்ட பின்னரே ஆண்மகன் அதைச் செயல்படுத்த வேண்டும்.

மனைவி சொல்லே மந்திரம்!



"என் பொண்டாட்டியைப் புரிஞ்சுக்கவே முடியல...' என்று அலுத்துக்கொள்ளும் ஆண்கள் அனேகம். அது ஒன்றும் அலிபாபா மந்திரமல்ல.

இன்றைய, "நவீன யுக மனைவி'யின் அன்பைப் பெற வேண்டுமா? உங்களுக்கு இதோ சில டிப்ஸ்...

1. வீட்டு வேலையைத் தவிர, தங்களால் நிறைய விஷயங்கள் சாதிக்க முடியும் என, பெண்கள் நிரூபித்து நீண்டநாட்களாகி விட்டன. எனவே, மனைவியை அவரது திறமைக்காக மதியுங்கள். புதிய விஷயங்களைச் சாதிப்பதற்கு ஊக்குவியுங்கள்.

2. இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு என்று ஓர் லட்சியம், கனவு இருக்கிறது. உங்களுக்காக அவர்கள் தங்கள் கனவுகளை விட்டுவிட வேண்டும் என்று

வற்புறுத்தாதீர்கள்.
3. மனைவியை சமாதானப்படுத்துவதற்கான பழைய விதிகள் எல்லாம் காலாவதி ஆகிவிட்டன. புதிய யோசனைகளில், சோதனை முயற்சிகளில் ஈடுபடத் தயங்காதீர்கள். மனைவிக்கு திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தை கைவிடாதீர்கள்.
4. "ஆண்கள் அழ மாட்டார்கள்' என்பது சரி தான். உணர்வுகளை வெளிப்படுத்தும், உணர்வுப்பூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகின்றனர் என்பதே உண்மை. அதற்காக, எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்காதீர்கள். அழுமூஞ்சி ஆண்களை, பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது.
5. நீங்கள் ஒரு முடிவெடுக்கும்போது, உங்கள் மனைவியின் ஆலோசனையையும் கேளுங்கள். அது பணத்தை பற்றியதாக இருக்கலாம், தொழிலைப் பற்றியதாக இருக்கலாம். மனைவியின் கருத்தைக் கேளுங்கள், அதற்கு மதிப்பு கொடுங்கள்.
6. நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரை, மனைவிக்கு பிடிக்கும். அப்படிப்பட்ட கணவர் தான் அவர்களை பொறுத்த வரை, "முழுமையானவர்'.
7. பேசுவது பெண்களுக்குப் பிடிக்கும் என்று தெரியும். மனைவியுடன் வழக்கமான விஷயங்களை மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்று பல விஷயங்களைப் பற்றியும் பேசுங்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள், பயங்கள் என்று எல்லாவற்றைப் பற்றியுமே பகிர்ந்து கொள்ளுங்கள்.
8. வீட்டுக்கு வருகிற மனைவி, உங்கள் குடும்பத்தோடு ஒன்றிப்போய் விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படி நீங்களும், ஒரு அன்பான மருமகனாக மனைவியின் வீட்டில் அக்கறை காட்டுவது அவசியம்.
9. அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்குப் போகும்போது, நான்கு பேர் உங்கள் மனைவியை வியப்பாக பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி அவரும் எதிர்பார்ப்பது நியாயம்தானே?
9. எல்லாவற்றிலும் புதுமை இருக்க வேண்டும் தான், இருப்பினும், அவ்வப்போது, "நீ தான் எனக்கு கிடைத்த மாபெரும் பொக்கிஷம்...' என்று "பழைய டயலாக்' பேசுவதில் தவறு இல்லை.
என்ன கணவன்மார்களே... மனைவியை கவர, இந்த டிப்ஸ் போதும் தானே!

பெண் என்பவள் அழகிய தேவதையா? இல்லை சூனியக்காரக் கிழவியா?

ஒரு குட்டிக்கதை

இரண்டு மன்னர்களுக்குள் சண்டை.தோற்றவனிடம் வென்றவன் சொன்னான்

"நான் கேட்கும் கேள்விக்கு சரியான பதிலைச் சொன்னால் உன் நாடு உனக்கே"

கேள்வி : ஒரு பெண் தன் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாள்?

(வென்ற மன்னனின் காதலி அவனிடம் இக்கேள்வியைக் கேட்டு விட்டு விடை சொன்னால் தான் நமக்கு திருமணம் என்று சரி சொல்லியிருந்தாள்)

தோற்ற மன்னன் பலரிடம் கேட்டான்.விடை கிடைக்கவில்லை.கடைசியாக சிலர் சொன்னதால் ஒரு சூனியக்காரக் கிழவியிடம் சென்று கேட்டான்.

அவள் சொன்னாள்
விடை சொல்கிறேன். அதனால் அவனுக்கு திருமணம் ஆகும்;உனக்கு நாடு கிடைக்கும்.ஆனால் எனக்கு என்ன கிடைக்கும்?

அவன் சொன்னான்,"என்ன கேட்டாலும் தருகிறேன்"

சூனியக்கார கிழவி விடையைச் சொன்னாள்,'"தன் சம்பந்தப்பட்ட முடிவுகளைத் தானே எடுக்க வேண்டும் என்பதே ஒரு பெண்ணின் ஆழ்மனது எண்ணம்"

இப்பதிலை அவன் ஜெயித்த மன்னனிடம் சொல்ல,அவன் தன் காதலியிடம் சொல்ல,அவர்கள் திருமணம் நடந்தது.இவனுக்கு நாடும் கிடைத்தது.

அவன் சூனியக்கார கிழவியிடம் வந்தான்.வேண்டியதைக் கேள் என்றான்.

அவள் கேட்டாள்
"நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்"

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அவன் ஒப்புக் கொண்டான்.

உடனே கிழவி ஒரு அழகிய தேவதையாக மாறிக் காட்சி அளித்தாள்.

அவள் சொன்னாள்,
"நாம் வீட்டில் தனியாக இருக்கும் போது நான் கிழவியாக இருந்தால், உன்னுடன் வெளியே வரும்போது தேவதையாக இருப்பேன்; ஆனால் நான் வெளியே உன்னுடன் வரும் போது கிழவியாக இருந்தால் வீட்டில் உன்னுடன் அழகிய தேவதையாக இருப்பேன்.இதில் எது உன் விருப்பம்?" என்றாள்.

அவன் சற்றும் யோசிக்காமல் சொன்னான்"இது உன் சம்பந்தப்பட்ட விஷயம்;முடிவு நீ தான் எடுக்க வேண்டும்" என்று

அவள் சொன்னாள்"முடிவை என்னிடம் விட்டு விட்டதால் நான் எப்போதும் அழகிய தேவதையாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்.!" என்றாள்

ஆம்!

பெண் அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும்போது தேவதையாக இருக்கிறாள். முடிவுகள் அவள் மீது திணிக்கப்படும் போது சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள்.

அனைவரும் புரிந்து செயல்படுங்கள்!

# 18. மனைவியின் இல்லற நோன்பு

கட்டிய கணவன் வெளியில் சென்றால்,நல்ல விதமாக திரும்பிவர எல்லா தெய்வங்களையும் வேண்டிக்கொண்டு இருப்பவள் பெண்,

தன் பிறந்தகத்தை விட்டு வந்து,தன் கணவன் குடும்பத்திற்காகவே வாழ்பவள் பெண்.உண்மையில் துறவி பெண்தான் என்கிறார் மகரிஷி.

குடும்பத்தில் மனைவிமார்கள் தங்கள் கணவன் சிறப்புடன் வாழ வேண்டும் "சுமங்கலி நோன்பு" (கௌரி விரதம்) கொண்டாடுகிறார்கள்.

**காரடையான் நோன்பு :**

'**க**ல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்பது பழமொழி. தாலிகட்டி, கரம் பிடித்து, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, இல்லற வாழ்க்கையில் இணைந்த கணவன், எப்போதும் பிரியாமல் இருக்கவும், அவன் நீண்ட ஆயுளுடன் வாழவும் மனைவி நோற்கின்ற விரதம் இது.

மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்பதே, இந்த நோன்பின் குறிக்கோள் ஆகும்.



மந்திர தேசத்து மன்னன் அஸ்வபதியின் மகள் சாவித்திரி, வீரத்தில் சிறந்தவள். இவள் ஒருநாள் வேட்டைக்குச் செல்லும்போது, தியானத்தில் இருந்த சாளுவதேசத்து இளவரசன் சத்தியவானைப் பார்த்தாள்.

அவனது தந்தை ஒரு போரில் நாட்டை இழந்து விட்டார். அதனால், காட்டில் மகனுடன் வசித்தார்.

பார்வையற்ற பெற்றோரை சத்தியவான், அன்புடன் கவனித்துக் கொண்டான். அவனையே திருமணம் செய்வதென்று முடிவு செய்தாள் சாவித்திரி.

மந்திர தேசத்திற்கு வந்த நாரதர், சாவித்திரியின் தந்தையிடம் இன்னும் ஓராண்டு காலத்தில் சத்தியவான் இறந்து விடுவான் என்றும், அதனால் சாவித்திரியை அவனுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டாம் என்றும் எச்சரித்தார்.

ஆனால், சாவித்திரி விடாப்பிடியாக சத்தியவானையே திருமணம் செய்து கொண்டாள். கணவனையும், பார்வையற்ற மாமனார், மாமியாரையும் அவள் அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

அரண்மனைவாசியான அவள் காட்டில் பல சிரமங்களை அனுபவித்தாலும், பொறுமையுடன் ஏற்றுக் கொண்டாள்.

சத்தியவானின் ஆயுள் முடியும் நாள் வந்தது. அன்று அவள் கணவனைப் பிரியவே இல்லை. அவர்கள் காட்டில் பழம் பறித்துக் கொண்டிருந்தனர். திடீரென சத்தியவான், மயங்கி விழுந்து இறந்தான்.

அவனது உயிரை எமதர்மராஜா எடுத்துச் சென்றார். சாவித்திரி எமனைப் பின்தொடர்ந்தாள்.

தலை சிறந்த கற்புக்கரசி என்பதாலும், கணவன் இறப்பான் என்று தெரிந்தும், தைரியத்துடன் அவனை திருமணம் செய்து கொண்டதாலும், பார்வையற்ற முதியவர்களுக்கு தளராத சேவை செய்தவள் என்பதாலும் அவளுக்குக் காட்சி தந்த எமதர்மர், அவளை திரும்பிப் போகச் சொன்னார்.

அவரிடம், நான் என் கணவருடன் வாழ விரும்பு கிறேன். நான் பதிவிரதை என்பது உண்மையானால், அவரது உயிரைத் திருப்பித்தர வேண்டும், எனக் கேட்டாள்.

இறப்புக்குப் பிறகு யாருக்கும் வாழ்வு கிடையாது என மறுத்த எமதர்மர், அதற்குப் பதிலாக வேறு எந்த வரம் கேட்டாலும் தருவதாகக் கூறினார்.



சாவித்திரி சமயோசிதமாக,என் மாமனார், மாமியாருக்கு மீண்டும் பார்வை வேண்டும். ஆண் வாரிசு இல்லாத என் தந்தைக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும். எனக்கு நூறு குழந்தைகள் வேண்டும், என்றாள்.

சற்றும் யோசிக்காத எமதர்மன் அந்த வரங்களைக் கொடுத்து விட்டார். எனக்கு நூறு குழந்தைகள் பிறக்க வேண்டுமென்றால், என் கணவன் உயிருடன் இருந்தாக வேண்டுமே! அவரது உயிரை திரும்பக் கொடுங்கள், என யாசித்தாள் சாவித்திரி.



எமதர்மராஜா அவளது அறிவின் திறனை வியந்து, சத்தியவானை அங்கேயே விட்டுச் சென்றார். மாசியும், பங்குனியும் இணையும் சமயத்தில் காரடையான் நோன்பு நோற்பது வழக்கம்.

மாங்கல்ய பாக்கியத்திற்காக பெண்கள் அனுஷ்டிக்கும் விரதம் காரடையான் நோன்பாகும். மாசி மாதம் முடிந்து, பங்குனி மாதம் துவங்கும் வேளையில் இந்த விரதம் அனுஷ்டிக்கப்படும்.

மாசியும் பங்குனியும் கூடும் வேளையில் நோற்கப்படுவது காரடையான் நோன்பு. மாசி மாத கடைசி நாள் இரவு ஆரம்பித்து பங்குனி முதல் நாள் காலையில் முடிப்பர்.

இந்த நோன்பை காமாட்சி நோன்பு, கவுரி நோன்பு, சாவித்திரி விரதம் என்றும் சொல்வார்கள்.

சுமங்கலிப் பெண்கள் தங்கள் கணவரின் ஆயுள் விருத்திக் காக காரடையான் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்.

கார்காலத்தில் விளையும் நெல்லைக் குத்தி, பச்சரிசி மாவுடன் இனிப்பு கலந்து தயாரிப்பதே காரடை ஆகும்.

இந்த நோன்பு சுமங்கலிகளுக்கு தீர்க்க சௌமங்கல்யத்தை அளிப்பதற்காக ஏற்பட்டது.

தேவியை பிரார்த்தனை செய்து படத்தின் முன்னால் சிறிது இலை/ தட்டு வைத்து, அதில் அடை சிறிது வெண்ணை, வெற்றிலைப் பாக்கு மஞ்சள் கயிறுகளையும் அதில் வைத்து விட வேண்டும்.

பிறகு கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்லி பிரார்த்தனை செய்து ஒரு கயிற்றை அம்பாளின் படத்திற்கு சாத்திவிட்டு மற்றதைத் தான் அணிய வேண்டும்.

பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் செய்து, கற்பூர ஆரத்தி காண்பித்து பூஜையை முடிக்க வேண்டும். மஞ்சள் கயிற்றை கட்டிக் கொள்ளும்பொழுது சொல்ல வேண்டிய ஸ்லோகம்.

தோரம் கிருஷ்ணாமி சுபகே ஸஹாரித்ரம்
தராமி அஹம்!பர்த்து:ஆயுஷ்ய
ஸித்யர்த்தம் ஸுப்ரீதாபவ ஸர்வதா

பொதுவாக உமா மகேஸ்வரர், லக்ஷ்மிநாராயணன், என்று அம்மை பெயருடன்தான், ரிஷிகள் ஸ்வாமி பெயர்கள் வரும். இங்கே சத்யவான் சாவித்திரி என்று சத்யவான் முன்பாகவும் சாவித்திரி இரண்டவதாகவும் சொல்லப்படுகிறது.

கணவனே மாதா, பிதா, பதி தெய்வம் என எல்லா வகையிலும் கணவனுக்கு முக்யத்துவம் கொடுத்து, அவன் வாழ்வே தன் வாழ்வு என நினைத்து, கணவன் வாழ்வுக்காக, கணவனை எமன் எங்கெல்லாம் இட்டுச் சென்றானோ அங்கெல்லாம் தன் தவவலிமையால் சென்று, எத்தனையோ பல வகையான வரங்கள் தருகிறேன் என்று சொன்னாலும் ஒரு வரனிலும் விருப்பமில்லாமல், கணவன் மீண்டும் வரவேண்டும் என ஒரே வரத்தோடு கணவனை மீட்டு வந்த காரிகை சாவித்ரி.

ஆகவேதான் சத்யவான் சாவித்ரி என்று சொல்வார்கள். பொதுவாக இல்லறத்தில் கணவன் மனைவி இருவருமே பொதுக் காரியங்களில் ஒத்துப்போகவேண்டியதாக இருந்தாலும் கணவனுடைய ஆபத்து காலத்தில் அவன் பிரிந்து விட்டால் என்ன ஆகுமோ என்று பயந்து போய் விடுவார்கள்.

பிற்காலத்தில் தனக்கு வேண்டிய பொருள்களை சேகரித்து வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். இது உலக நியதி.

இதற்கு விதிவிலக்காக பலரும் உண்டு. குந்தியின் கணவன் பாண்டு இறந்தவுடன் மாத்ரி என்ற மற்றொரு மனைவி இறந்து விடுகிறாள்.

அப்போது குந்திதேவி கணவனோடு உயிர்த்தியாகம் செய்யாமல், சாபத்தினால் உயிர் போவதை தடுக்க முடியாமல் போனதால் கணவன் சொல்படி ஐந்து குழந்தைகளை காப்பதில் ஈடுபட்டாள்.




மாத்ரி போல் குந்தியும் கணவனோடு உயிர்விட்டிருந்தாலும், அல்லது குந்தியின் வரபலத்தால் சூரியன் வந்தது போல் யமனை வரவழைத்து பாண்டுவின் உயிரை காப்பாற்றியிருநதாலும்,

ரிஷிகளின் சாபப்படியும், மகபாராதத்தில் நடந்த தெய்வீக ஸங்கல்ப்பப் படியும், எமனால் கூட பாண்டுவின் மரணத்தை தவிர்க்க முடியாது.

ஆகவேதான் அத்தனை வலிமையுள்ளவளாக இருந்தும் அவதியின் பலத்தோடு மகாபாரத நிகழ்ச்சிக்கு உறுதுணையாக பஞ்ச பாண்டவர்களை காப்பாற்றினாள்.

இதுபோலத்தான் காந்தாரியும் கணவன் பார்க்காததை தானும் பார்க்க மாட்டேன் என்று தன் கண்களையே கட்டிக் கொண்டு வாழ்ந்தாள்.

இப்படி சிலர் கணவனுக்காக வாழ்ந்தாலும் சாவித்ரி போல் விதியின் பலத்தையும் மாற்றி கணவனோடு வாழ்நாள் முழுவதும் சுமங்கலியாக வாழும் பாக்யத்தை பெற்றவள்



ஆகவே காரடையான் நோன்பின் தத்துவம் கணவனோடு எப்பொழுதும் சுமங்கிலியாக வாழவேண்டும் என்பதுதான்.

இல்லற நோன்பு : மகரிசியின்  ஞானக்களஞ்சியம்

.

"அன்பு ஊற்றாம் இல்லறத்தில் ஆண்பெண் இருபேரும்
அவரவர்கள் துணைவர்களை மனம் வருந்தச் செய்தால்
துன்ப உணர்வலை எழும்பி தாக்கியோரைத் தாக்கும் தொல்லைதரும்
சாபமாம் நோய்கள் வரும்தேர்வீர்
இன்ப ஊற்று இருவரிடைப் பெருக வாழ்த்தலோடு
இன்முகமும் பொறுமை தியாகம் தகைமை காட்டவேண்டும் தன்புகழ்
விளங்கும் நல்லதரமுடைய மக்கள்
தழைப்பார்கள் இல்வாழ்வை ஆய்ந்து கண்டஉண்மை ."

.

"மனைவியவள் தனைமதிக்க வில்லையென்ற குறையால்
மனம்வருந்தும் கணவருக்கும்; மணந்தவர் பொறுப்பாய் எனைமதிக்க
வில்லையென்று ஏங்கும் பெண்களுக்கும் இன்பவாழ்வு மலர்வதற்கு
ஏற்றவழி சொல்வேன்
நினைவு கூர்ந்துன் வாழ்க்கைத்துணை இதுவரை உங்கட்கு
நிறை மனத்தோடன்பு கொண்டு செய்தவெல்லாம் பாரீர் உனைமதித்து
ஆற்றியுள்ள இனியசெயல் அனைத்தும்
உள்நினைந்து நன்றிகூறி வாழ்த்த மனம் நிறையும்."

## 19. மனைவி மந்திரி மட்டுமல்ல ! நல்ல மருந்தும்கூட

மனைவி என்பவள் துணைவி மட்டுமல்ல....  ..தாய்,தோழி,மதி மந்திரி.,நல்ல நிர்வாகி. நல்ல  மருந்தும்கூட.....

சமையல்காரி, வேலைக்காரி...இப்படி  பலப்பல பொறுப்புகள் ..

இந்த சூழலில் கணவனின் சின்னச்சின்ன அன்பு வெளிப்பாடுகள் அவளுக்குப் பெரிய மனோ பலத்தைத்தரும் என்பது வாழ்வியல் உண்மை..

குடும்பத்தின் குல விளக்கு
மனைவி.
அன்பின் அணையா விளக்கு
மனைவி.

நிர்வாகக் கட்டமைப்பின்
ஒழுங்கமைப்பு மனைவி.
மந்திரி மட்டுமல்ல
இராஜ தந்திரியும் மனைவி.

மனைவி ஒரு வாய்ப்பல்ல
அது ஒரு வரம்.
வெற்றிகளின் மறைபொருள்
மனைவி.

படைப்பாளிகளின் நூல் நிலையம்
மனைவி.
சாதனையாளர்களின் பின்புலம்
மனைவி மட்டுமே!

சுமைகளை சுகமாய்ச்
சுமப்பவள் மனைவி.
விமர்சனத்தின் வித்தகி
மனைவி.

பலன் எதிர்பாரா
பண்பாளி மனைவி.
புலன் விசாரனையின் சிறப்பு
அதிகாரி மனைவி.

மீறினால் சீறும்
நாகம் மனைவி.
படம் எடுக்காள்

பாடம் புகட்டுவாள்.
பஞ்ச புதங்களின்
பெரும் கலவை மனைவி.

அணைப்பிற்கு முத்தம்.
அதிகாரத்துக்கு யுத்தம்.
அடக்குவதற்கு சத்தம்.
மொத்த வெளிப்பாடு மனைவி.

அனுபவத்தால் ஆக்குவதும்
அறியாமையால் அழிப்பதும்
சூத்திரதாரி மனைவி.
மனைவி மிரண்டால்
வீடு கொள்ளாது.
பதமடி நின்றால் மகமாயி.
மதம் கொண்டால் பத்திரகாளி.
பாசம் வைத்தால்
மோசம் புரியாத ஜீவன் மனைவி.

அன்பை மட்டும் சேமித்தால்
மனைவியும் ஒரு காப்புறுதி.
மனைவியின் முதல் நுகர்வு
நீ காட்டும் விசுவாசம்.

சமையல் அறையில் சாணக்கியம்
பள்ளி அறையில் சாமத்தியம்
சாமி அறையில் சாஸ்திரமும்




மனைவி என்பவள், தென்றலாகவும், பிரச்சினையின் போது புயலாகவும் மாற வேண்டும், பெண்ணே !!

ஒவ்வொரு மனைவியும், குடும்ப உறவுகளை மணக்கச் செய்பவர்களாக இருக்க வேண்டும்.

அப்படி மணக்கச் செய்வதற்கு வாழ்க்கை பயணத்தில் மனைவி என்பவள், கணவர் தவறான காரியங்களை தேர்வு செய்யும் போது, மோதியடிக்கும் புயலாகவும், சரியான காரியங்களை செய்யும் போது, படகின் பாய்களை புடைக்கச்செய்கின்ற தென்றலாகவும் இருக்க வேண்டும்.

கணவர் ஒரு தவறான காரியத்தை தேர்ந்து எடுக்கும் போது, மனதில் குழப்பமும், தவிப்பும், போராட்டங்களும், தடுமாற்றங்களும் உண்டாகும்.

எப்படி இருந்தாலும், துவக்கத்திலேயே அந்த தவறான காரியங்களில் இருந்து, அவரை விடுபட செய்வதற்காக, மனைவியானவள் மோதியடிக்கும் புயலாக மாற வேண்டும்.



ஒவ்வொரு கணவரையும், பிரச்சினையில் இருந்து பாதுகாத்து, அதனால் உண்டாகும் வெறுப்புகள், கசப்புகள், காயங்கள் போன்றவற்றில் இருந்து அவர்களை மீட்டு நல்வழிப் படுத்துவதும், மனைவியின் கடமையாகும்.

ஒவ்வொரு மனைவிக்கும், வாழ்க்கை என்பது பிரச்சினை என்று நினைப்பதை விட, அதை வாழ தெரியாமல் தவிப்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

எனவே, பிரச்சினைகளை சரி செய்து குடும்பங்களில் ஏற்படும் முறிவுகளை அகற்றி, குடும்பம் என்ற நூலை அறுந்து போகாமல் காப்பது, மனைவின் கடமையாகும்.

பெண்ணே! எனக்கு ஒரு கணவர்–மனைவியை பற்றி நன்கு தெரியும். அவர் மற்றவரை கடித்துக்கொள்ளவும், கண்டிக்கவும் மிகவும் கஷ்டப்படுவார்.

ஆனால் அவரது மனைவி அப்படி அல்ல., ஒரு காரியம் தவறு என்றால், உடனே அவரை கடிந்து கொள்வார்., கண்டிக்க கொஞ்சமும் தயங்க மாட்டார்.

ஆனால் அவரது கணவர்,"ஒருவரை கண்டித்து விட்டு, பிறகு அவரது முகத்தில் எப்படி விழிப்பது? அவரது அன்பு போய்விடுமே" ,என்று நினைப்பார்.

ஆனால், கம்பை எடுக்காவிட்டால், அன்பே இல்லை என்று மனைவி கூறுவாள். கண்டிக்கா விட்டால், அன்பு போய்விடும் என்பது, எனது பலவீனம் என்றால், கண்டிக்காவிட்டால், அன்பே இல்லை என்பது என் மனைவியின் பலம் என்று கூறினார்.

எனவே, ஒரு சிறு விஷயத்தில் கூட இருவரது கருத்தும் ஒத்துப்போக வில்லை என்று கணவர் கூறினார். இதில் இருந்து கணவன்–மனைவிக்குள், வேற்றுமைக்கு அடுத்த வித்தியாசங்கள் உள்ளது. இந்த வித்தியாசம் என்பது முரண்பாட்டுக்கு அல்ல.,

இது ஒருவருக்கு ஒருவர், தவறான காரியத்தை தேர்வு செய்யும் போது, அதை ஒருவருக்கு ஒருவர் புரிய வைப்பதற்கே ஆகும்.

இதில் மனைவியானவள், கணவரது வேற்றுமையை புரிந்து கொண்டு பொறுமையாக அவரை விட்டுக்கொடுக்காமல் செயல்பட வேண்டும். மருந்தாக இருக்க வேண்டும்.

இன்னொரு குடும்பத்தில், மனைவி தனக்கு கீழ்படியாதது நிமித்தம், அவளை நேசிக்க கணவர் தடுமாறுகிறார்.

கணவர் தன்னை நேசிக்காதததால், மனைவியோ அவருக்கு கீழ்ப்படிய தடுமாடுகிறாள்.

எப்படி கணவருக்கு கீழ்ப்படிவது என்பதை மனைவி புரிந்து கொள்ளுவது அவசியமோ, அது போல மனைவியை நேசிக்க வேண்டும் என்பதை கணவரும் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியம்.

எப்படி புரிதல் இல்லாமல், கீழ்ப்படியவோ, நேசிக்கவோ முடியாதோ, அதே போல உண்மை மனைவி, தன்னை புரிந்து கொள்ள வேண்டும் என்று கணவர் நினைப்பதும், கணவர் தன்னை புரிந்து

கொள்ள வேண்டும் என்று மனைவி நினைப்பதும் புரியாத புதிராகவே இருக்கிறது.

இந்த புதிரை சரி செய்ய, மனைவி கீழ்ப்படிந்து முயற்சி செய்தால் மட்டுமே, அந்த குடும்பம், சந்தோஷமான குடும்பமாக காணப்படும்.
ஒரு மனைவியானவள், தன் கணவர் எல்லா காரியங்களையும் சுருக்கமாக என்னிடம் பேசாமல், விரிவாகவும், விலாவாரியாகவும் பேச வேண்டும்.,

நான் வெளியே சென்றால் , அடிக்கடி போன் செய்து விசாரிக்க வேண்டும்., நான் கொஞ்ச நேரம் அவரை விட்டு பிரிந்தாலும், அவர் அப்படியே துடித்துடித்து போக வேண்டும்.

நான் வெளியே போய் விட்டால், திரும்ப எப்போது வீட்டுக்கு வருவேன் என்று, ஏக்கத்துடன் காத்திருக்க வேண்டும்.,

நான் பிரயாணம் பண்ணிக்கொண்டு வருகையில், இப்போது எங்கே வந்து கொண்டு இருக்கிறாய்? எங்கே இருக்கிறாய்? என்று நூறு நேரமாவது என்னிடம் போன் செய்து கேட்க வேண்டும் என்று, ஒவ்வொரு மனைவியும், கணவரிடம் இருந்து எதிர்பார்ப்பாள்.

ஆனால் இதில் ஒன்றை கூட கணவர் எதிர்பார்க்கவும் மாட்டார்., அதை செய்யவும் மாட்டார். இதனால் குடும்பங்களில் ஆண்–பெண் உறவுகளில் பிரச்சினை ஏற்படுகிறது.
இதில் ஒவ்வொரு மனைவியும், பெண்களை போல் ஆண்களால் செயல்பட முடியாது என்பதை புரிந்து கொண்டு, குடும்பத்தின் உறவுகளை சமாதானமாய் நடத்திச்செல்ல வேண்டும்.

இது ஒவ்வொரு மனைவியின் இன்றியமையா கடைமையாகும்.
குடும்பம் ஒரு கதம்பம் என்பர். எப்படி கதம்பம் என்பது பல மலர்களை கொண்டு உருவாக்கப்பட்டதோ, அது போல குடும்பங்களும், பல உறவுகளை கொண்டு உருவாக்கப்பட்டது.

இந்த உறவுகள் மணக்க வேண்டுமானால், மனைவியான உன் கையில்தான் இருக்கிறது, பெண்ணே!!!.



ஒரு 80 வயதைத் தாண்டிய தம்பதிகள். அழகான பார்க் ஒன்றிலிருந்து சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பேச்சையும் சிரிப்பையும் பார்க்க இளைய தலைமுறையினருக்கே பொறாமை வருவது போலிருந்தது.

**“இந்த வயதிலும் இவ்வளவு ஒற்றுமையாக, இப்படிக் காதலாக, இப்படி மனம் விட்டுச் சிரித்து பேசிக்கொண்டிருக்கிறீங்களே.... இதுக்கான வாழ்க்கையின் ரகசியம் என்ன?”**

அதுக்கு தாத்தா சொன்னார்...

**“இதுக்கு எல்லாம் காரணம், என்னிடம் அதிகம் கெட்ட குணங்கள் இருந்தன, அவைதான் இன்று என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது”** என்று.

அப்படியா? புதுத் தகவலாக இருக்கிறதே... கெட்ட குணங்கள் அதிகம் இருந்தமையால் மகிழ்ச்சியாக இருக்கிறீங்களோ.. என கேட்டபடி பாட்டியிடம் திரும்பி... அதே கேள்வியைக் கேட்டோம்... அதுக்குப் பாட்டி சொன்ன பதில்.

**“அவரிடம் இருந்த கெட்ட குணங்கள்தான், இன்று எம்மை இவ்ளோ மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது”**

**எமக்கு ஏதும் புரியவேயில்லை... உங்களுக்கு?:)) புரியல்ல இல்ல?:).**

அதுக்கு அவர்கள் அளித்த விளக்கம்... எம்மை எங்கேயோ கொண்டு சென்றது..

**அதாவது, தாத்தாவிடம் இருந்த நல்ல குணங்களை விட, அவரிடமிருந்த கெட்ட குணங்களை ஆராய்ந்து, அதனை லவ் பண்ணத் தொடங்கினாவாம் பாட்டி.. நல்ல குணங்கள் எப்பவும் எல்லோருக்குமே பிடிக்கும்தானே? அதனால் நல்ல குணங்கள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை அல்லவா.**

**கணவனிடமிருக்கும் கெட்ட குணங்களைக் கண்டறிந்து, அதனை மனைவி விரும்பத்தொடங்கினால், வாழ்க்கையில் சந்தோசம்தான் அதிகமாகும். இப்படியே கணவனும் நடந்து கொண்டால், அக் குடும்பத்தில் துன்பத்திற்கு இடமேது.**

# 20. ஆனந்தம் விளையாடும் வீடு

இல்லறம் என்பது லாட்டரிச் சீட்டில் விழும் பரிசு போல அதிர்ஷ்டம் அல்ல. தனது துணையிடமிருந்து திருடும் உரிமையும் அல்ல. இல்லறம் ஒரு புனிதப் பணியாகும்.

வீடு என்பது வாழ்க்கைக் கலைகள் அனைத்தையும் கற்பதற்கு ஏற்ற ஒரு சர்வ கலாசாலையாகும். குடும்பத்தில் ஒழுங்கும் அமைதியும் நிலவுவதற்கு முதலில் முயலுங்கள்.

இந்த வெற்றியானது வெளியில் நீங்கள் போகின்ற இடங்களிலெல்லாம் இனிமை தருகின்ற அலைகளாகப் பயன் தரும்.

கணவன் மனைவி உறவில் அன்பும் ஒற்றுமையும் நிலவுவதற்கு உங்கள் முயற்சியெல்லம் முழுமையாகப் பயனாகட்டும்.



இதன் விளைவானது உங்கள் வாழ்வில் மட்டுமின்றி, உங்களது குழந்தைகளுடைய

வாழ்விலும் பல நலன்களை விளைவிக்கும்.

குழந்தைகள் எதிரில் கணவன் மனைவிக்கிடையே ஒருவரை மற்றவர் மதிப்பளித்துப் பேசிக் கொண்டிருங்கள்.

அதைப் பார்க்கின்ற குழந்தைகள் உங்கள் இருவருக்கும் மதிப்பு தருவார்கள். அவர்கள் வாழ்விலும் ஒழுக்கம் உயர இதுவே வழி.

குழந்தைகள் மத்தியில் தம்பதிகள் சண்டையிடுவதோ, ஒரு வரை ஒருவர் மதிப்புக் குறைவாகப் பேசுவதோ, இழிவுபடுத்திப் பேசுவதோ, தீய பதிவுகளை அக்குழந்தைகள் மனதில் ஏற்படுத்தி விடும்.

தன்னடக்கமும், பிறரை மதிக்கின்ற பண்பாடும் இல்லாத தம்பதிகள், ஒழுக்கமும் மேனமையும் உடைய மக்களைப் பெற முடியாது.

மக்கட்செல்வம் குடும்பத்துக்கும், ஊருக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் நலம் பல பயக்கவல்லது.

அச்செல்வத்ததைப் போற்றிக் காப்பது இல்லறத்தாரின் முக்கியமான கடமையாகும் என்பதைத் தம்பதியினர் உணர வேண்டும்.

வாழ்க்கையின் நன்மைகளையெல்லாம் அடைய வேண்டும என்று விரும்புகிறீர்கள் . அது நல்ல விருப்பம் தான்.

ஆனால் தீமைகளை ஒழிக்கவில்லையானல் எப்படி நன்மைகள் கிடைக்கும். நிலைக்கும்?

குடும்ப அமைதி உட்பட, என்ன நலன் வேண்டுமோ, அந்த நலனைப் பெற ஏற்ற செயல்களைத் தேர்நத்தெடுத்துப் பின்பற்ற வேண்டும். விளைவு நிச்சயம். நீங்கள் நிச்சயமாக வெற்றி பெற அவ்வுணர்வு உதவும்.

"குடும்ப வாழ்வில் கணவன் மனைவி உறவு புனிதமானது, தெய்வீகமானது. ஆண் பெண் இருபாலரும் வரையறையற்ற அன்பால் வாழ்க்கைத் துணைவர்களாகி ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும்

உலகில் வாழ்ந்து பேரின்ப நிலையை எய்த ஏற்றபடி இறை ஆற்றலால் அமைக்கபட்டிருப்பதே ஆண் பெண் எனும் இரண்டு வகையில் அமைந்த பால்வேறுபாடுள்ள பிறப்புகள்.

ஆண்களும், பெண்களும் அநேகமாக சரிபாதியாக உள்ள மனித குலத்தில் அந்த பாதி எண்ணிக்கையுடைய ஆண்களைப் பெற்றெடுத்தவர்கள் பெண்களேயாம். "

பெண்மையின் பெருமையினை உணர்வதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

"இயற்கையின் வெளிச்சச் சுடர்"

எந்த ஒரு ஆணோ, பெண்ணோ பிறக்க வேண்டும் என்றால் பெண்ணின் கருப்பையில் உருவாகி, அவள் ரத்தத்தையே உடலில் ஏழு தாதுக்களாக ஏற்றுக் கொண்டு, முழு உருவம் பெற்று வெளி வருவது ஒரு வியப்பு அல்லவா. இறைநிலையின் பெருமையை அதன் பேரறிவின் தன்மையை எடுத்துக்காட்டுகின்ற "இயற்கையின் வெளிச்சச் சுடர்" பெண்மை ஆகும்.

.

மேலும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு பெண்ணின் துணையும், உதவியும் எந்த அளவு கலந்து இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு யாராலும் கூற முடியுமா? இத்தகைய பெரும் வியப்பான பெண்மையை மனித இனம் புரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாக பெண்மைக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்று நான்கு குணங்களை வர்ணிப்பார்கள். மேலும் ஒரு தெய்வீகக் குணம், தியாகம் என்பது பெண்மையிலேயே இயல்பாக அமைந்திருக்கிறது என்பதும் நினைவு கொள்ள வேண்டும். மனித உற்பத்தி, வாழ்க்கை இவற்றில் பெண்மையின் பங்கினை யூகித்துப் பார்ப்போம்.

கரு வளரும்போது பத்து மாதங்கள் வயிற்றுக்குள் பெண் தான் வைத்துச் சுமக்கிறாள். பிறந்த பிறகு அதன் வளர்ச்சியில் பெரும் பகுதி காலத்தில், அதே குழந்தையைச் சுமந்து கொண்டும் இருக்கிறாள்.

இவ்வாறு இன்னும் பல நிலைகளிலும் குடும்பப் பொறுப்பில் உள்ள எல்லாச் சிக்கல்களையும், துன்பங்களையும், கடமைகளையும் சுமந்து கொண்டிருப்பதிலும் ஆண்களை விடப் பெண்கள்தான் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

இத்தகைய பெண்ணினத்திற்குப் பொருளாதாரத் துறையில் சமத்துவம் அளிக்காமல் எக்காலத்தும் அடிமையாகவே நடத்துகின்ற ஆண் மக்களின் செய்கை இறைநிலைக்கே செய்யக் கூடிய முரண்பட்ட காரியம், பாவ காரியம் ஆகும்.



சென்னையில் "மனைவிநல வேட்பு விழா"

.

பெண்களால் பெரிய நன்மைகளை எல்லாம் தொடர்ந்து பெற்ற ஆண்கள் கூட மனைவியை பாராட்டுவதற்கு ஒரு கஞ்சத்தனம் ! ஒரு சிறிய பாராட்டு வாய் திறந்து சொன்னால் அவள் கை ஓங்கிவிடுமாம் !

தானாக தன்னுடைய மனைவியைப் பாராட்டி அதிலே இருந்து அந்த மகிழ்ச்சியை அடையக்கூட மறுக்கக்கூடிய உள்ளங்களுக்கு ' அன்பு' என்பது எங்கே உண்டாகும்?

இதற்கு அடிப்படை காரணம் என்ன என்றால் நீண்டகாலமாகப் பழக்கத்தில் பெண்களை சாதாரணமாக உபயோகப்படக்கூடிய

பொருளாகவே மதித்து மதித்து, அதே மாதிரி நிலையிலே பல நூல்கள் வந்ததனால் அந்தக் கருத்து இன்றும் நிலவி வருகிறது.

பெண்களுக்குச் சமஉரிமை மாத்திரம் இல்லை, பெரிய மதிப்பும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

எல்லோருமே பெண்களால் அளிக்கப்பட்ட, பெறப்பட்ட பிள்ளைகள்தான் என்பதை உணர்ந்தாலே போதும். சம உரிமை மாத்திரம் அல்ல, இன்னும் பிரத்தியட்சமாகச் சில உரிமைகள் கூட அவர்களுக்குக் கொடுத்து நாம் வாழவைக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஒரு குடும்பம் நல்ல குடும்பமாக திகழ சில மகரிசியின் அவசியமான அறிவுரைகள் :

1. நாம் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்த வேண்டிய இடம் நம் குடும்பமே.

2. கணவன்-மனைவி உறவுக்கு இணையாக உலகில் வேறெந்த உறவையும் சொல்ல முடியாது.

3. குடும்ப நிர்வாகம் செய்வது உங்கள் அறிவாகத்தான் இருக்க வேண்டும். எந்தநிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக் கூடாது.

4. வரவுக்குள் செலவை நிறுத்துங்கள். அது குடும்ப அமைதியைக் காக்கும். வீண் செலவுகள் செய்ய வேண்டாம். அது குடும்ப அமைதியை சீர்குலைக்கும்.

5. ஒரு குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் பொருளீட்டும் திறன் வேண்டும். அல்லது, பெரும்பாலானோர் பொருளீட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். சிலர் அதிகமாக சம்பாதிக்கலாம். சிலர் குறைவாக சம்பாதிக்கலாம். எப்படி இருந்தாலும் அதை காப்பது, கவர்வது, பிறருக்கு இடுவது ஆகிய செயல்களில் சமமான பொறுப்பு வேண்டும்.

6. கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ, மனைவிக்குத் தெரியாமல் கணவனோ சம்பாதிப்பதும், செலவு செய்வதும், சேமிப்பதும் சரியாக

இருக்காது. அது பிரச்சினைகளுக்கு இடம் தரும். மனதில் ஒளிவு மறைவு வைத்துக்கொண்டிருந்தால் தெய்வீக உறவு இருக்காது.

7. குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றால் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் ஆகியனவற்றையும் கடைப்பிடித்து வரவேண்டும்.

8. பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழி வகுக்கும்.

9. தனக்கு கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறை கொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனமே இதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

10. நல்ல குடும்பத்தில் நன்மக்கள் தழைப்பார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கும் குடும்ப அமைதி அவசியம்.

ஒரு நிகழ்ச்சியில் வேதாத்திரி மகரிஷி பேசிக் கொண்டிருந்தார்.

அதாவது இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைய விட்டுக் கொடுப்பது, அனுசரித்துப் போவது, பொறுத்துப் போவது ஆகிய மூன்று பண்புகளை பின்பற்ற வேண்டும் என்றார்.

அப்போது ஒரு பெண் எழுந்து, விட்டுக் கொடுப்பது என்று பொதுவாக சொல்கிறீர்கள்.

யார் விட்டுக் கொடுப்பது? கணவனா? மனைவியா?

பிரச்சினை அங்குதானே ஆரம்பிக்கிறது.. என்று கேட்டார்.

அதற்கு வேதாத்திரி மகரிஷி பதிலளிக்கையில்,

"யாரிடம் அன்பு அதிகமாக இருக்கிறதோ, யார் அறிவாளியோ அவர்கள்தான் முதலில் விட்டுக்கொடுப்பார்கள். அவர்கள்தான் அனுசரித்துச் செல்வார்கள். அவர்கள்தான் பொறுத்துப் போவார்கள் "என்றார்.

உங்கள் வீட்டில் இனி யார் விட்டுக் கொடுத்துப் போவது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

## எது இனிய இல்லற வாழ்க்கை முறை?

ஆண் - பெண் உறவையோ, இயக்கத்தையோ உலகத்தின் எந்த மதமும் மறுத்ததில்லை. அப்படி எந்த மதமாயினும் மறுத்திருக்குமானால் உலக இயக்கமே தடுமாறிப் போயிருக்கும் .

இஸ்லாம், கிறிஸ்தவம், இந்துமதம் இவை அனைத்துமே முழுக்க இல்லறத்தை ஆதரித்தவையாகும்.

பெண்டு பிள்ளைகளைத் துறந்து விட்ட மாத்திரத்திலேயே ஒருவன் முக்திக்குத் தகுதி உடையவன் ஆக மாட்டான் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

பெண்டுகள், பிள்ளைகள், சுற்றத்தார், இனத்தார், நாட்டாரை துறந்து செல்பவன் கடவுளுடைய இயற்கை விதிகளைத் துறந்து செல்கிறான்.

மனவலிமை இல்லாமையே அதன் காரணம். வசிஷ்டர், வாமதேவர் முதலிய மகரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்து கொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர்.

புலன்களை அடக்கியாளும் பொருட்டாக அக்காலத்து ரிஷிகள் பிரம்மச்சாரிகளாக இருந்த, நெடுங்காலம் பலவகைக் கொடிய தவங்கள் செய்து முடித்து, பின்பு இல்வாழ்க்கையில் புகுதலே மகரிஷிகளுக்குள் வழக்கமாக நடைபெற்று வந்தது.

ஆண் - பெண் உறவு என்பது வெறும் காம இச்சை அன்று. உடல் உறவின் புனிதத் தன்மையைக் கோயில் பிரகாரத்தில் இருந்து கோயிலின் உள்ளேயும் பார்க்கிறோம் அல்லவா! அப்படியே வாழ்க்கையையும் வாழ்ந்து பார்க்க வேண்டும்.

உற்சாகமான ஒரு தாம்பத்ய வாழ்க்கையை மேற்கொள்வதை, ஆடவர்கள் புனிதமான கோயில் வாழ்க்கையாக எண்ணிக் கொள்ள வேண்டும்.



மனைவிக்கு மரியாதை

வெறும் வரட்டுத்தனமும், வெறும் காம வேட்கையுமல்ல இல்லற வாழ்க்கை என்பது. பல கடமைகளுக்கு நடுவே காதல் என்றாலும், காதல் தான் முதலிடம் வகிப்பது அந்த முதலிடத்தைக் கணவன் தான் மனைவிக்குத் தந்தாக வேண்டும்.

கற்புடைய மனைவியுடன் காலதலுற்று அறமும் தர்மமும் தவறாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் சுவர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும்.

ஒருவனுக்குத் தன் வீடே கோயில், வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமையில்லாதவன் மலைக்குகையிலோ, மற்ற கோயிலிலோ கடவுளைக் காண மாட்டான்.

மனைவியுடன் துயிலும் போது, மனைவியின் கையால் சாப்பிடும் போது, மனைவி தமக்குப் பெற்றெடுத்துத் தந்த குழந்தை தொட்டிலில் தூங்கும் போது இந்தப் புனிதமான வாழ்க்கை உலகில் எவருக்கும் அமையாது என்கின்ற உற்சாகம் வேண்டும்.

பல கடமைகளுக்கு மேலே தான் அவள் காதலை வைத்திருக்கிறாள் என்றாலும் அவளுடைய உடம்பையும் அமைதிப் படுத்த வேண்டியது, நிம்மதிப்படுத்த வேண்டியது கணவனின் கடமையாகும்.

ஒரு பெண் வாழ்ந்தாள் என்று சொல்வதே அவள் கணவனோடு வாழ்ந்தாள் என்பதைத் தான் குறிக்கும்.

இல்லறமல்லது நல்லறமில்லை. அனுசரித்துப் போவது தான் இல்லறத்தில் மிக முக்கியம்.

நல்ல குழந்தை ஒரு வீட்டில் பிறந்திருக்கிறதென்றால் கணவன், மனைவி நன்றாக வாழந்திருக்கிறார்கள் என்பது அதன் பொருளாகும்.

கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடக்கூடாது. மனைவியிடம் இருந்து கணவனும் கடமையை எதிர்பார்க்கலாம். அதை நிறைவேற்ற அவள் தயங்கக் கூடாது.

*ஒரு இந்தியப்பெண் தன்னுடைய கணவனின் தேவைகளை எந்தக் காலத்திலும் மறுக்கவும் மாட்டாள். மறக்கவும் மாட்டாள்.*

எனவே கணவன் - மனைவி உறவு என்பது புனிதமானது. கோயில் போன்றது. கோபுரத்துச் சிலை போன்றது என்பதை மனதிலே கொண்டு வாழ்வைத் துவக்குங்கள்.



உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தையும் ஆரோக்கியமாக இருக்கும். அவனுக்கு வருகின்ற மனைவியும் - அவளுக்கு வருகின்ற மண மகனும், ஆக மாப்பிள்ளை வந்தாலும் மருமகள் வந்தாலும் உங்களைப் பார்த்து அவர்கள் வாழக் கற்றுக் கொள்வார்கள்.

ஆரோக்கியமான சந்ததி உருவாகும். உங்களாலே நீங்கள் மட்டுமல்ல, உங்கள் குழந்தைகள் வாழ்கின்றன.

உங்கள் பேரன் பேத்திகள் வாழ்கின்றார்கள். உங்களைப் பார்த்து அடுத்த வீடு, அக்கம் பக்கம் வாழ்கின்றது. அத்தோடு சமுதாயமே வாழ்கின்றது. நல்ல சமுதாயத்துக்கு அடிப்படை ஒரு நல்ல குடும்பம்.

## குடும்ப அமைதி

குடும்பத்தில் அமைதி இல்லாமல் பிணக்கு எழ தேவை, அளவு, தன்மை, காலம் ஆகிய நான்கு காரணங்கள் அமைகின்றன. சகிப்புத்தன்மை (பொறுமை), விட்டுக்கொடுத்தல், தியாகம் (adjustment, tolerance, sacrifice) என்ற மூன்று நற்குணங்களின் மூலம் குடும்பத்தில் அமைதியை நிலைநாட்டலாம்.

பிறரைக் குறை கூறுதல், அதிகாரம் செலுத்துதல், எதிர்பார்த்தல் (comment, command, demand) என்ற மூன்றையும் விட்டுவிடுதல் வேண்டும். மேலும் கணவன் மனைவி நட்பில் சினத்தை தவிர்த்து, வாழ்த்துக்

கூறிவந்தால் குடும்பம் அமைதியாகவும் இனிமையாகவும் இருக்கும் என்கிறார் வேதாத்திரி மகரிஷி .

குடும்பத்தில் அமைதி இல்லாமல் பிணக்கு எழ தேவை, அளவு, தன்மை, காலம் ஆகிய நான்கு காரணங்கள் அமைகின்றன.

சகிப்புத்தன்மை (பொறுமை), விட்டுக்கொடுத்தல், தியாகம் (adjustment, tolerance, sacrifice) என்ற மூன்று நற்குணங்களின் மூலம் குடும்பத்தில் அமைதியை நிலைநாட்டலாம்.

பிறரைக் குறை கூறுதல், அதிகாரம் செலுத்துதல், எதிர்பார்த்தல் (comment, command, demand) என்ற மூன்றையும் விட்டுவிடுதல் வேண்டும்.

மேலும் கணவன் மனைவி நட்பில் சினத்தை தவிர்த்து, வாழ்த்துக் கூறிவந்தால் குடும்பம் அமைதியாகவும் இனிமையாகவும் இருக்கும்.

**இல்லற வாழ்க்கை இனித்திட- குடும்ப நல கோர்ட்டின் 10 அறிவுரைகள்.**

10 அறிவுரை.




விவாகரத்து கோரி வரும் தம்பதிகள் இந்த பத்து அறிவுரைகளையும் ஒரு பத்து நிமிடம் ஆற அமர நின்று ஒன்றுக்கு இரண்டு முறை படித்தாலே போதும், ‘டைவர்ஸ்’ கேட்டு வரும் ஜோடிகள் ‘டைவர்ட்’ ஆகிச் செல்லும் வாய்ப்பு உருவாகும்

1. ஒரேசமயத்தில் இருவரும் கோபப்படாதீர்கள்.

2. வாக்குவாதம் ஏற்படுகின்ற பிரச்சினைகளில் ஒருவர் மற்றவரை ஜெயிக்கவிட்டு மகிழ்ச்சி அடையுங்கள். விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை எப்பொழுதுமே!

3. விமர்சனத்தையே வாஞ்சையுடனும், அன்புடனும் செய்து பாருங்கள்.

4. கடந்தகால தவறுகளைச் சுட்டிக் காட்டாதீர்கள்.

5. உலகத்திற்காக போலியாக வாழ்வதைக் காட்டிலும், உங்களுக்காகவே வாழ்ந்து பாருங்களேன்.

6. விவாதம் தவிர்க்க முடியாதது என்றால், கூடியவரைக்கும் அதை ஒத்திப் போடுங்கள்.

7. ஒரு நாளைக்கு ஒரு முறையாவது ஒரு அன்பான வார்த்தையோ அல்லது வாழ்த்தோ உங்கள் துணையிடம் உபயோகப்படுத்திப் பாருங்கள்.

8. செய்த தவறை உணரும்போது அதை ஒத்துக் கொள்ளவும் அல்லது அதற்காக மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள்.

9. இல்லற வாழ்க்கை இனித்திட, மூன்று தாரக மந்திரங்கள்.

- சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல்- அனுசரித்துப் போகுதல்- மற்றவர்களை மதித்து நடத்தல்.

# 21.மனைவியின் தியாகம்

நம் நாட்டின் பண்பாட்டின்படி பெண்கள் – மனைவிகள் இயற்கையிலேயே தியாகிகள். எங்கோ எப்போதோ படித்த கவிதை ஒன்று.

கருவிலே கருத்தறியா தோன்றி - பின்
கள்ளி பால்த்தனை தானும் எதிர்க்கொண்டு
தாயின் துணைக்கொண்டு தன்னுடல் வளர்த்து
பேதை உருக்கொள்ள தானும் தயாரானாள்

ஐந்தில் தொடங்கி ஏழு கடலாய் அலைய
தான் அமர்ந்த மடிதனை தமையனும் பறித்திட
உணர்வுதனை அடக்கி தனிமையில் படுதப்பின்
பெதும்பை வாழ்வுதனை தானும் ஏற்களானாள்

எட்டை எட்டிட எண்ணங்கள் மலர்திட
தம்பியை காத்திட அன்னைதான் கூற
அரை மனம் கனத்து அகத்திணை நாடி
பதினொன் முடிந்து மங்கையவள் ஆனாள்

பன்னிரு தொடங்கி ஒன்றினை கூட்ட
மொட்டுகள் விரிந்து பூக்களாய் மாற
ஆடவும் ஓடவும் தடைகள் வந்திட
வீட்டில் முடங்கி மடந்தை ஆனாள்

பத்துடன் நான்கு பருவத்தை அடைய
தேனிகள் வருகையை பூக்களும் அறிய
விட்டில் வாழ்வாய் எல்லைகள் குறைந்து
அறிவை வளர்த்து அரிவை ஆனாள்

புரியா ஈர்ப்புகள் இருபதில் தொடங்கிட
இருட்டிலும் கைகள் மைதனை தீண்ட
பழிச்சொல் அனைத்தும் கண்களை கிள்ள
மையும் கரைந்து தெரிவை ஆனாள்

காதலின் பிடியில் இருபத்திந்திணை தொடவும்
மோதலில் முட்டி உறவுகள் பிரிய
கட்டிய ஆடவன் காலனை தீண்ட
சருகாய் விழுந்து பேரிளம் ஆனாள்

ஆசைகள் ஆனைத்தும் முப்பத்திரண்டில் அழிய
அவளின் உறவாய் குழந்தைதான் மிஞ்ச
இறைவனை அடையா பூப்போல் வாட
கல்லறை புகுந்து கடவுளாய் ஆனாள்

கற்பு, அன்பு, பொறுமை, சகிப்புத் தன்மை, தியாகம், தூய்மை ஒற்றுமை ஆகிய குணங்களின் மொத்த உருவம்தான் மனைவி என்ற பெண்.

மாதர் தோள் சராதோர் மாநிலத்தில் இல்லையே

மாதர் தோள்புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே
மாதாராகுஞ் சத்திஒன்று மாட்டிக் கொண்ட தாதலால்
மாதராகும் நீளகங்கை மகிழ்ந்துகொண்டான் ஈசனே“

எனச் சிவவாக்கியாரும்,

”மாதவாய் வந்தே அமுதளித்தாய்
மனையாட்டியாய் வந்து சுகம் கொடுத்தாய்
ஆதரவான தங்கையானாய்
ஆசைக் கொழுந்தியும் தானானாய்”

எனக் கொங்கண சித்தரும் , பெண்களின் தியாகத்தைப் பெருமையைப் பற்றிக் கூறி உள்ளார்கள்.




நீங்கள் இந்த உலகத்திற்கு எப்படி வந்தீர்கள் ? உங்களை ஒரு பெண் அல்லவா தன் வயிற்றில் பத்து மாதம் வைத்து காத்து உருவாக்கினாள்!

அப்பொழுது அவள் உண்ட உணவை, அவள் சுவாசித்த காற்றை அல்லவா நீங்கள் பங்கிட்டுக் கொண்டீர்கள் ?

மேலும் முதலில் இந்த உலகிற்கு வந்தீர்களே, அங்கு உங்களுக்கு தன் இரத்தத்தை அல்லவா பாலாக மாற்றி முதல் உணவாக அளித்தாள்.

நாம் கடைகளில் சென்று ஒரு புதிய வாகனம் வாங்கும் பொழுது அந்தக் கம்பெனியே உங்களுக்கு முதல் பெட்ரொலை இட்டு நிரப்பி நீங்கள் சிறிது தூரம் வாகனத்தை இயக்குவதற்கு உதவி செய்வது போல், தாய் தானே உங்களக்கு தன் இரத்தத்தைப் பாலாக்கி முதல் உணவு (Fuel) அளித்து நீங்கள் உயிர்வாழ உதவினாள். அதற்கு மேலும் பல மாதங்கள் அந்த தாயின் பாலைக் குடித்துத்தானே வளர்ந்தீர்கள்.

"அந்தப் பெண்மைதானே உங்களுக்கு வாழ்க்கைத் துணையாகவும் வந்து வாழ்நாள் முழுவதும் உங்கள் இன்ப,

துன்பங்களில் பங்கு கொண்டு நீங்கள் வீடுபேறு அடையவும் உதவுகின்றாள்.

இதில் ஏதாவது ஒன்றை உங்களால் மறுக்க முடிமா ? இவ்வளவு பெருமை வாய்ந்த பெண்ணினத்தை போற்றுவதில் உங்களுக்குக் கஞ்சத்தனமும் பொறுக்க முடியாமையும் ஏன் வரவேண்டும் ?"

"பெண் வயிற்றிலுருவாகி பெண்பாலுண்டே உணர்ந்தாய்

பெண்துணையால் வாழ்கின்றாய் பெண்ணின் பெருமை உணர்," (மகரிசி)



பெண்துணையால் வாழ்கின்றோம். பெண்மையின் பெருமையை உணர்வோம். பெண்கள் நாட்டின் கண்கள்.

பெண்ணின் பெருமையை நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள் கூறியதுடன் பெண்ணினத்தின் விடுதலைக்கு வித்திட்டுள்ளார்கள்.

நம் நாட்டின் பண்பாட்டின்படி பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள். பெண்ணாக பிறந்ததற்கு பெருமை படுவோம்.

தாய் இல்லாமல் நான் இல்லை

தானே எவரும் பிறந்ததில்லை

எனக்கொரு தாய் இருக்கின்றாள்

என்றும் என்னை காக்கின்றாள்

ஆதி அந்தமும் அவள் தான்

நம்மை ஆளும் நீதியும் அவள் தான்

ஆதி அந்தமும் அவள் தான்

நம்மை ஆளும் நீதியும் அவள் தான்

அகந்தையை அழிப்பாள் ஆற்றலை கொடுப்பாள்

அவள் தான் அன்னை மகாசக்தி

மனைவியின் தியாகத்தை மதிக்கும் கணவன்மார்கள்.

மனைவி என்பவள் மிகச் சிறப்பானவள், அன்பின் அடையளமாய் திகழ்பவள், அத்தனை உயிர்களையும் தோற்றுவிப்பது பெண்ணினமே.

பனிக்குடம் உடையும்வரை

தனியொருத்தியாயிருந்தவள்
சேயொன்று காலடியில்விழ
தாயாகிப்பேர்கொண்டேன்
மாயம்போல் மேனி
மாறக்கண்டேன்

மிருதுவான இறகுகளில்
மெத்தைஒன்று செய்தாற்போல்
அருகினிலே சிறுபுதையல்
அள்ளி எடுக்கையிலே
அற்புதமாய்த்தான் உணர்ந்தேன்

மடியைச்சுரக்க வைக்கும் மந்திரமோ
அடிப்பெண்ணே உன்குரல்தான்
கண்ணுக்குதெரியாத
கருணைஉணர்வதனை
பாலாக்கித்தரவைக்கும்
பாக்கியத்தை அளித்தாயே

குழந்தைக்கு தாய் தரும்
முதல் சீதனம்
இதுவே இயற்கையின்
பெரும் நூதனம்!

ஐந்துநட்சத்திரத்தை
அற்பமாக்கும்
ஆயிரம் நட்சத்திர
விருந்து இது!



ஒரு உயிர் பெற்றெடுப்பதில் பெண்ணின் தியாகம் கேள்விப்பட்டதுண்டு.
வலியின் உச்சம் தொட்டுவந்ததை அனுபவத்தில் கண்டபிந்தான் ஒரு உயிரின் உண்மை மதிப்பும்
கேட்ப்பதற்கும் உணர்வதற்குமான வித்தியாசமும் உணர்து கொண்டென்.
நான் தந்தையானேன் என்று சொல்வதிலும் பார்க்க
என் மனைவி தாயானாள் என்பதே பொருத்தமாக இருக்கும்.



நம் நாட்டின் பண்பாட்டின்படி பார்த்தால் பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள் என்று கூறலாம்.
திருமணத்திற்கு பின் கணவன் வீட்டுக்கு வரும்போதே தாய், தந்தை, பிறந்த வீட்டுச் சூழ்நிலை எல்லாவற்றையும் துறந்துதான் வருகிறார்கள். திருமண வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்பே துறந்து வரக்கூடிய ஒரு இயல்பு அவர்களுக்கு வந்துவிடுகிறது.

உலகில் சரிபாதி பெண்ணினம் என்றால் மறுபாதி



ஆண் இனம் அன்றோ! அந்த சரிபாதி ஆண் இனமும் பெண்களால் அளிக்கப்பெற்ற அன்பளிப்பே ஆகும் அன்றே!"
– தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

கற்பு, அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், தூய்மை, ஒற்றுமை ஆகிய உயர்ந்த குணங்கள் யாவும் அடங்கியவர்கள்தான் பெண்கள்.

குழந்தையின் பெருமையே குடும்பத்தின் பெருமை. குழந்தையை தருவது தாய். ஆகையால் ஒரு குடும்பத்தின் சீரும், பெருமையும், வளமையும், சிறப்பும், நலமும், திருவும் தாய்மாரின் வழியாலே வருவன ஆகும்.

இவ்வளவு சிறப்புகள் பெருமைகள் கொண்ட பெண்ணினத்திடம் எந்த ஒரு குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் கொள்கிறார்களோ அந்த குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்திருக்கும்.

அன்பு என்பது அதையே கொடுத்துப் பெற வேண்டிய பொருள்.அன்பைக் கொடுத்தால் தான் அன்பைப் பெற முடியும்.

# 22. மனைவிக்கு மரியாதை



மதிப்பு, மரியாதை என்பது எல்லோருடைய வாழ்க்கையிலும் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. மதிப்பு என்பதை ஆங்கிலத்தில் (Value)

வேல்யூ என்று சொல்கிறோம்.

**1)respect, 2)propriety, 3) civility. என்று கூட விளக்கம் சொல்வார்கள்.** நம்மைப் பொறுத்த அளவில் முக்கியத்துவம் என்று கொள்ளலாம்.

## மரியாதை (Respect)

இதை கண்ணியம் என்றும் கௌரவம் என்றும் கூடக் கூறலாம். தோற்றத்தில், ஆடையில் கூட பிறரிடம் நம்மீது மரியாதையை உண்டாக்க முடியும். இது நிரந்தரமில்லாதது; மாறிவிடும் இயல்பு கொண்டது.

*"எல்லாரையும் கனம் பண்ணுங்கள்," 'ஒருவரையும் தூஷிக்காதீர்கள்' என்று பைபிள் நமக்கு சொல்கிறது. சொல்லப்போனால், நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் "தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட[வர்கள்]." (யாக். 3:9) ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்திருக்கிறார். (யோவா. 3:16)*

*நற்செய்தியை கேட்பதற்கும் அதற்கேற்ப செயல்பட்டு இரட்சிப்படையும் வாய்ப்பைப் பெறுவதற்கும் அனைவரும் தகுதியானவர்கள். (2 பே. 3:9) விசேஷித்த மதிப்பையும் மரியாதையையும் பெறுவதற்கு ஏற்ற குணங்கள் அல்லது அதிகாரம் சிலரிடம் இருக்கிறது.*

மனித குலத்தின் மாண்புகளில் ஒன்று இந்த மரியாதை. அறிமுகமில்லாத ஒருவர் தொடர்பு கூட, உடனே அவர்மீது ஒரு மரியாதையை உண்டாக்கும்.

பழகப் பழக இந்த மரியாதையானது மதிப்புக்காக மாறுகிறது அல்லது அவர் தொடர்பை விட்டு விடுகிறோம்.



(மனைவிக்கு மரியாதை செலுத்தும் நூலாசிரியர்)

நல்ல பண்புகள் உள்ளவர்கள் பிறர் என்ன நினைப்பார்களோ என எண்ணி கவலைப்படாமல், தாங்களே நன்றாகச் சிந்தித்து, துன்பமில்லாத வகையில் செயல்படுவதால், மற்றவர்களிடம் மரியாதையை எதிர்பார்ப்பதில்லை.

மரியாதை என்பது கேட்டுப் பெறுவதல்ல. பிறரிடமிருந்து தானாக வர வேண்டும். “எனக்கு அவர் உரிய மரியாதை அளிக்கவில்லை’ எனச் சில சமயம் நாம் நினைப்பதுண்டு.

(Give and Take Respect) மரியாதை என்பது கொடுப்பதால் பெறமுடியும் அல்லது தன் தோற்றத்தால், பேச்சால், செயலால் மட்டுமே பெறமுடியும் என முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

ஆறறிவில்லாத தாவரம் உள்ளிட்ட உயிரினங்கள் கூட, தம்மீது அன்பு, அக்கறை காட்டுவோரிடம் தமது நன்றியை வெளிப்படுத்துவதை நாம் அறிவோம்.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பதன் இருப்பிடம் குடும்பம். எனவே, குடும்பத்தில் மரியாதைகள் காலப்போக்கில் மதிப்பாக மாறவேண்டும்.

சிலர் குறைபட்டுக் கொள்வார்கள். “என்னை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை” என்று இங்கு மதித்தல் என்பது மதிப்பு (Value) ஆகாது.

அங்கீகாரம் என்று கூறலாம். தன் இருப்பை அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்பதை அப்படிக் கூறுகின்றனர்.

அழைப்பிதழ் பெற்ற நிகழ்வு ஒன்றுக்குச் செல்கிறோம். கூட்டம் அதிகம். அழைத்தவரைச் சந்திக்க வாய்ப்பில்லை. நிகழ்வு முடிந்து திரும்பும்போது மனதுள் நெருடல்.

வீடுதேடி வந்து அழைத்தவர்கள் சரியாக மதிக்கவில்லை; உபசரிக்கவில்லை என்று இது தேவையில்லை. நிகழ்வின் முக்கியத்துவம் கருதி நம்மால் என்ன உதவி அவருக்குச் செய்ய முடியுமோ, அதைச் செய்வது தான் சரியானது.

சிறுவயதுக் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் கற்பிக்க வேண்டிய ஒன்று – பிறருக்கு மரியாதை அளிப்பது; வயதுக்கு மரியாதை பணிவாய் பேசுவது; அவர்கள் கூறுவதைப் பொறுமையாகக் கேட்பது; தெளிவுக்காக சந்தேகங்கள் கேட்பது போன்றவை.

கல்விக்கு மரியாதை இன்று கல்வி என்றாலே, வேலைக்கானது என்றாகிவிட்டது.

எனவே, எந்தத் துறையைத் தேர்வு செய்கிறோமோ, அந்தத் துறையின் விற்பன்னர்களிடம் தேவையான தகவல்கள் பெற, இந்த மரியாதை உதவும்.

அனுபவத்துக்கு மரியாதை ஒரு செயலால் பெறும் பலனை அனுபோகம் என்று கூறுகிறோம்.

அனுபவித்தல் என்று பொருள். அனுபோகங்கள் அனுபவங்களாகப் பதிவாகின்றன. அனுபவசாலிகளை மரியாதையுடன் போற்றவேண்டும்.

அவர்களது அனுபவங்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகளாக அமைய வாய்ப்புண்டு.

மரியாதையில் போலி மரியாதை என்று ஒன்று உண்டு. நேரில் பார்த்தால், மிகவும் பவ்யமாய் செயல்படுவர்; பிறகு தரக்குறைவாய் பேசுவர். தமிழில் "கூழைக்கும்பிடு" என்றசொல் உள்ளது. காரியம் ஆக வேண்டுமென்றால் காலையும் பிடிப்பார்கள். முடிந்தபின் காலை வாரிவிடவும் தயங்கமாட்டார்கள்.

தன்னம்பிக்கையுள்ளவர்கள் இதுபோன்று கூழைக்கும்பிடு ஆசாமிகளாக மாறமாட்டார்கள். அதே நேரம் மற்றவர்களிடம் மரியாதையை எதிர்பார்த்து ஏங்கவும் மாட்டார்கள்.

இவர்கள் தங்கள் மதிப்பை (Value) நன்கு உணர்ந்துள்ளதால், அதற்கேற்றவாறு செயல்படுவார்கள். போலியாக பிறரது மரியாதையை எதிர்பார்க்காமலிருப்பதுடன் மற்றவர்களுக்கும் போலியாக, அளவுக்கும் அதிகமாக மரியாதை காண்பிக்கமாட்டார்கள்.

இந்த வாழ்க்கையில் நமது தோற்றம், பேச்சு, செயல்கள் எல்லாம் மற்றவர்கள் மனதில் நம்மீது முதலில் மரியாதையை உருவாக்க வேண்டும்.

காலப்போக்கில் இது மதிப்பாக மாறவேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவது நல்ல எண்ணங்களும், நல்ல பண்புகளுமாகும்.

## மனைவிக்கு மரியாதை.

மனைவிக்கு மரியாதை என்ற தலைப்பில் சிந்திப்பதால், மரியாதையைப் பற்றி விளக்கத்தை நாம் பார்த்தோம்.

சமுதாயத்தில் மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பது அப்புறம் இருக்கட்டும். முதலில் நம்முடன் , நம் வாழ்க்கையுடன், நம் உடலுடன் இரண்டறக் கலந்துவிட்ட மனைவிக்கு மரியாதை செலுத்த பழகிக் கொள்வோம்.



மனைவிக்கு தரும் மரியாதையே நாம் நம் குடும்பத்திற்கு தரும் மரியாதை. மனைவிக்கு தரும் மரியாதையே நாம் நமக்கே தரும் மரியாதை. மனைவிக்கு தரும் மரியாதையே நாம் நம் சமுதாயத்திற்கு தரும் மரியாதை.

## மனைவியை நேசியுங்கள்

பெண்களைப்பற்றி சரியாக புரிந்து கொள்ளாமலேயே பெரும்பாலான ஆண்கள் “பெண்கள் ஒரு புதிர், அகம்பாவம் பிடித்தவர்கள்…’ என, அவர்களை ஒதுக்கித் தள்ளுகின்றனர்.

ஆனால் பெண்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் புறக்கணிக்கப்படுவதாலேயே வெறுப்படைகின்றனர் என்கின்றனர் மனோதத்துவ நிபுணர்கள்.

மனைவியோ, காதலியோ அவர்களை மகிழ்ச்சிப்படுத்த ஆண்கள் ஒரு சில விசயங்களை செய்தால் போதும் என்கின்றனர் அவர்கள்.

பெண்கள் உற்சாகமாக இருந்தாலே குடும்பம் உற்சாகமாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். மனோதத்துவ நிபுணர்கள் கூறும் அறிவுரையை படியுங்களேன்.

## குண்டாயிருக்கேனோ ?

பெரும்பாலான பெண்களின் மனதை வாட்டும் விசயம் குண்டாக இருப்பது. ஏனெனில் உடலில் சதை போடுவது பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது.

கொழுப்பு, சதையை குறைக்க ஒரு மருந்து கிடைத்தால் போதும். கணவர் அதை வாங்கிக் கொடுத்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

## சரிசமமாக நடத்துங்கள்

மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல, அதேபோல் சம்பாதித்து கொடுக்கும் மிசினும் அல்ல. அவளும் உணர்வு பூர்வமானவள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சரிசமமாக நடத்தவேண்டும் என்பதையே ஒரு பெண் எதிர்பார்ப்பாள்.

அம்மா போல யாராலும் சமைக்க முடியாதுதான். ஆனால் மனைவியின் சமையலை ஆகா, ஓகோ என்று பாராட்டுங்கள். அவர்கள் உச்சிக்குளிர்ந்து போவார்கள்.

விடுமுறை நாட்களில் விரும்பிய படி ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும். அன்றும் விசேஷமாக சமையல் செய்ய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது. சமையல் அறையில் மனைவிக்கு கணவரும் உதவ வேண்டும்.

## தொந்தரவு செய்யாதீர்கள்

எல்லாவற்றையும் அவசர, அவசரமாக செய்ய வேண்டும் என தொந்தரவு செய்யக் கூடாது.

குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மனைவியை திட்டக் கூடாது.

குழந்தையை பராரமரிக்கும் பொறுப்பு இருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## அடிக்கடி பாராட்டுங்கள்

மனைவி உடுத்தும் உடைகளைப் பார்த்து இந்த உடை உனக்கு நன்றாக இருக்கிறது…’ என பாராட்ட வேண்டும்.

வருமானம் முழுவதும் கணவனிடமே இருந்தால், மனைவியை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். தினமும் ஒருமுறையாவது இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

நன்றாக, சிரித்த முகத்துடன் குழந்தைகள் படுக்கைக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளை அடிமை போல் நடத்தக் கூடாது. இதில் கணவர்களின் பங்கு முக்கியம்.

பெண்கள் விரும்புவது இவ்வளவு தான். இவற்றை கணவரோ, பெற்றோரோ, குழந்தைகளோ நிறை வேற்றினால் போதும். அந்த குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.

## மனைவிக்கு வாழ்த்து.

அருட்தந்தை வேதாத்திரி மகரிசி மனவளக்கலையில் கற்றுத்தரும் தியானத்தின் முடிவில், முதலில் நம்மை வாழ்த்திக் கொள்கிறோம். அடுத்தது மனைவியைத் தானே வாழ்த்துகிறோம்.



கிருஷ்ணகிரியில் மனைவி நலம்பேணும் விழா

வாழ்த்து என்பது எல்ல மந்தரங்களுக்கும் மேலான திருமந்திரமாகும். இம்மந்திரத்தைப் பிரயோகப்படுத்துகின்ற பக்குவம்பெறவே தவ நிலையில் இருந்து வாழ்த்த வேண்டும் என்கிறார் மகரிசி.

இலக்கியங்களைப் பிரித்தவுடன் இறை அல்லது இயற்கை வாழ்த்து. திருமணச் சடங்குகள் என்றால் ”பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!! என மணமக்களுக்கு வாழ்த்து.

பாடப்புத்தகங்களை விரித்தால் முதலில் வருவது கடவுள் வாழத்து. பண்டிகை காலங்களில் பெரியோர்களின் வாழ்த்து! அரசியல் முதல் ஆன்மீகம் வரை வாழ்த்துக்குப் பஞ்சமில்லை.

மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு, வாழத்துகின்ற பழக்கம் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் பாமர மனிதனும் வாழ்த்துகின்ற பக்குவம் பெற்று வாழ்த்தின் மூலம், தன்னையும் சமுதாயத்தையும் உணர்த்துகின்ற அளவுக்கு மெருகு பெற்றது எப்போது தெரியுமா?

அருள்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்களின் திரு நாவால் ஒலிக்கப்பட்ட பின்னர்தான்!.

உலக சமாதானப் பாசறைகளாக உலகெங்கும் இயங்கி வருகின்ற மனவளக்கலை மன்றங்களே இதற்குச் சான்று.

நம் பாரதத்தைப் பொறுத்தவரை காலங்காலமாக மக்கள் மனதில் இடம் பெற்ற நூல்கள் இதிகாசங்கள் எனப்படும்.

அப்படிப்பட்டவை தான் இராமாயணமும், மகாபாரதமும் ஆகும். ஒன்று பெண்ணாசையையும் மற்றொன்று மண்ணாசையையும்அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன.

இதிகாச காலத்திலேயே வாழத்துகின்ற பழக்கம் இருந்தது என்பதை இராமாயணத்திலிருந்தும் ஒரு நிகழ்ச்சி மூலம் காண்கிறோம்.

இராவண சம்காரம் முடிந்த பின் அவதாரப் புருஷனாகப் போற்றப்பட்ட ராமபிரான் ஆனவர் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்திலில் தங்கியிருந்தபோது, நடைபெற்ற சம்பவம் இது.

இராமரின் வலிமையை, வில்லாற்றலை, பரத்வாஜர் வெகுவாகப் புகழந்து பாராட்டி மகிழ்ந்தார். உடனே ராமர் முனிவரின் பாதங்களை வணங்கிப் பேசலானார்.

”சுவாமி! எனது பராக்கிரமத்தைப் பற்றி விரிவாகப் போற்றிப் புகழ்ந்தீர்கள். எனது வெற்றிகளுக்கெல்லாம் பெரியோர்கள் தான்

காரணம். சிறுவயதிலிருந்து அதிகாலையில் பெற்றோரை வணங்குவேன். அவர்கள் என்னை ”நீண்ட ஆயுளுடன் நலமாக வாழ்க” என வாழ்த்தி ஆசீவதிப்பார்கள்.

குலகுரு வசிஷ்ட முனிவரை வணங்கிய போதெல்லாம் ”பலசாலியாக விளங்கிப் பல சாதனைகளைப் புரிவாயாக! ” என்று வாழ்த்தினார்.

ராவணனுடன் போரிடுவதற்காக இலங்கை செல்வதற்கு முன் தங்களை நான் பணிந்து வணங்கிய போது, ”நீ செல்லுகின்ற காரியம் வெற்றி பெறட்டும்” என்று வாழத்தினீர்கள்.

இத்தகைய வாழ்த்துக்கள் தான் எனது வெற்றிகளுக்குக் காரணம் என்று இராமர் கூறினார்.

இராமபிரானின் அடக்கக் குணத்தைக் கண்டு, மனம் நெகிழ்ந்தார் பரத்வாஜர். இதன் மூலம் தவ வலிமை மிக்க சான்றோருடைய வாழத்து பயனித்துள்ளது என்பதை உணரலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மந்திரத்தை நாம் மனவியிடம் பிரயோகிக்கலாமே? நாள் தோறும் நிமிடம் தோறும் வாழ்த்தலாமே. மனைவிக்கு மரியாதை தரலாமே!

மனைவிக்கு கணவர் கார் ஓட்டுவது சாதாரண விஷயம்... அதுவே அதிகாரமிக்க ஒரு பதவியில் மனைவியும், அவருக்கு சம்பளத்திற்கு கார் ஓட்டும் சாதாரண டிரைவராக கணவனும் இருப்பதும் சற்று வித்தியாசமான விஷயம்.

கணவன்-மனைவி இருவரும் ஒரு இடத்தில் சம அந்தஸ்தில் வேலை பார்த்தாலே பிரச்னைகள் ஆயிரம் வரும்.




""ஆனால் அப்படியெல்லாம் எதுவும் பிரச்னை இல்லை; ஒரு விதத்தில் வசதிதான்'' என்கிறார் கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தை அடுத்த பூவச்சல் கிராமப் பஞ்சாயத்துத் தலைவியாக இருக்கும் சுனி! ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கிராமப்

பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்ட சுனி, முதன்முதலில் வார்டு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த மாதம் கேரளாவில் உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. பூவச்சல் பஞ்சாயத்தின் 4-வது வார்டில் மீண்டும் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட சுனி இம்முறை உறுப்பினர்களின் ஆதரவுடன் பஞ்சாயத்துத் தலைவராகி உள்ளார்.

முன்பு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் ஒருவருக்கு டிரைவராகப் பணியாற்றிய சுனியின் கணவர் சேர்மன் இப்பொழுது தன் மனைவிக்கே டிரைவராகியுள்ளார்.

இப்போது கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து புறப்பட்டு ஆபீஸூக்கு வருவது ஒரே ஜீப்பில்தான். கணவர் வண்டி ஓட்ட... அவர் இருக்கையை அடுத்து சுனி கம்பீரமாக அமர்ந்து பஞ்சாயத்தை வலம் வருகிறார்.

""கணவர் ஜீப் டிரைவராக இருக்கிறாரே. இது உங்களுக்கு சௌகரியமா? அசௌகரியமா?" என்று சுனியிடம் கேட்டோம்.

"அசௌகரியமா? சே சே... அப்படி ஒன்றும் இல்லை. அவர் ஜீப் டிரைவரா இருக்கிறத எவ்வளவு வசதியா இருக்கு தெரியுமா?

பஞ்சாயத்துல என்ன பிரச்னைனாலும் ஜீப்பில் அவருடன் சென்று எந்த நேரத்திலயும் நேரில் போய்ப் பார்த்து அதற்கு தீர்வு காண முடியுது. இதனால் பொதுமக்களுக்கும் என்கிட்டே நல்ல அபிப்ராயம். இன்னும், பஞ்சாயத்து மக்களுக்கு நல்ல காரியங்கள் செய்யுறதுக்கு அவர் ரொம்ப உதவியா இருக்கார்" என பாராட்டுப் பத்திரம் வாசித்தார் சுனி.

இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். பஞ்சாயத்தின் பிரச்னைகள் பொதுமக்கள் இருவரிடமும் தெரிவிக்கின்றனர். சோமனிடம் பிரச்னைகளைச் சொல்லும்போது அவர் மனைவியிடம் தீர்வு காணச் சொல்கிறாராம்.

"சுனியின் வாழ்க்கைக்கு மட்டுமல்ல அவரது பதவிக்கும் நான்தான் சாரதி. என் மனைவிக்குக் கீழே டிரைவராக இருப்பதை ஒன்றும் மரியாதைக் குறைவாக நான் நினைப்பதில்லை!" என பெருமையாகச் சொல்கிறார் சோமன்.

”ஒரு கணவர் தன் மனைவிக்கு
மொபைலில் இருந்து ஒரு மெசேஜ்
அனுப்புகிறார்....)
கணவர்:- என் வாழ்க்கையை
வசந்தமாக்கியத்தில் உன் பங்கு
நிறைய....
இன்றைக்கு நான் இருக்கும் இந்த
நல்ல நிலைக்கு நீ மட்டுமே காரணம்
என் அன்பே....
என் வாழ்வில் நீ வந்தது என் அதிர்ஷ்டம்
...
என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்
கியவள் நீ ... நீ என் தேவதை ...
-
-
-
-
மனைவியின் பதில் மெசேஜ் :
குடிச்சிருக்கியா ..??..?
அமைதியா வீட்டுக்கு வந்துடு,
பயப்படாதே....!! எதுவும்
செய்ய மாட்டேன்...!!!
கணவர் : Thank You.

# 18. *மனைவி* நலம் பேணும் விழா.

ஆண் பெண் உறவு மிகவும் மதிப்புடையதாக இருக்கிறது. எனினும், ஆண்களை விடப் பெண்கள் இன்று குறைந்த மதிப்புடையவர்களாக வாழ்வதைக் காண்கிறோம்.

"பற்றற்ற துறவியே மனைவி"

ஆண்களைவிட பெண்கள் துறவு நிலையிலும் சிறந்தவர்கள். ஆம். ஒரு கணவனும், மனைவியும் இல்லற வாழ்க்கையைத் துறந்து சந்நியாசத்தை மேற்கொண்டு தீர்த்தயாத்திரை செல்லும்போது வழியிலே ஒரு வைரக் கல் கிடப்பது கணவனுக்குத் தெரிந்தது.

எங்கே தன் மனைவி இதைப் பார்த்தால், உலகப்பற்றை துறந்தவளுக்கு ஆசை திரும்பிவிடும் என்று எண்ணி, அவசரமாக அதை புதைக்க, அப்போது அவன் மனைவி என்ன செய்கின்றீர்களா? எதை வைத்து மூடுகின்ற்றீர்கள், என்று கேட்டு மனைவி மண்ணணை விலக்கினாள்.

வைரக்கல் தென்பட்டது. கணவனின் சந்தேகமும் பரிந்தது. பிறகு கணவரிடம் "சுவாமி வைரத்துக்கும், மண்ணாங்கட்டிக்கும் இன்னமும் உங்களுக்கு வித்தியாசம் தெரிவதாக இருந்தால் ஏன் உலகத்தைத் துறந்து வந்தீர்கள்! என்றாள்.

தன்னைவிட தன் மனைவியே முழுமையான துறவி என்பதை கணவன் புரிந்து கொள்ணடான். இதைத்தான் வேதாத்திரி மகரிசி பெண்களை "பற்றற்ற துறவி" எனக் கூறுகின்றார்.

பெண்கள் பொருளாதாரக் கண்ணோட்டத்தில மட்டும் இன்றி, அரசியல் கண்ணோட்டத்திலும் பிறபடுத்தப்பட்டுளாளார்கள். இயற்கையாக அவர்களுக்கு இருலுக்க வேண்டிய மதிப்பை ஆண்களும் அவர்களுக்கு அளிக்கவில்லை. மாறாகப் பறிக்கின்றனர்.

மனிதகுல வாழ்வில சரிபாதியாக அங்கமும், பொறுப்பும் வகிக்கின்ற பெண்கள் இவ்வாறு உதாசினப்படுத்தபட்டார்களானால், மனிதகுலம் எவ்வாறு நிறைவான மகிழ்ச்சியை அடைந்து வாழ முடியும்?

இந்நிலை உலக நாடுகள் முழுவதுமே காணப்படுகிறது. முன்னேறிய நாடுகள் என்று சொல்லப்படுகின்ற நாடுகளில் கூடப் பெண்ணினத்தை இழிவாகவே நடத்துகின்ற அநாகரிகம் காணப்படுகிறது.


உலகின் பல நாடுகளிலும் அருட்பயணம் மேற்கொண்ட வேதாத்திரி மகரிசியின் மனதில் சொல்லலொணாத வருதத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மனிதகுலம் முழுவதையும் நாம் மேம்படுத்த முடியும்? அதில் இன்னொரு பாதியை (பெண்ணினத்தை)த் துன்புறுத்திக் கொண்டிருக்கிறதே!

வாழ்வின் ஒவ்வொரு சாராரையும் பெருமைப்படுத்தி நன்றி பாராட்டுகின்ற நல்ல பழக்கத்தை மனித குலம் மேற்கொண்ருடிருப்பது மகிழ்சிச்க்குரிய ஒரு நல்ல நிலைதான். அவ்வகையில்,

1. தன் கணவனுடைய ஆதரவைத் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு பெண்ணானவள் பெற்று மகிழ வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் சமங்கிலி நோன்பு கொண்டாடுகிறார்கள்.
2. குழந்தைகள் எதிர்கால சமுதாயத்தினர் என்று அவர்களைச் சிறப்பிக்க குழுந்தைகள் தினம் (Children"s day) கொண்டாடுகிறோம்.
3. தாய்மையின் உயர்வைப் போற்ற அன்னையர் தினம் (Mother's day) கொண்டாடப்படுகிறது.
4. அதே போல், தந்தையார் தினம் (Father's day) கொண்டாடப்படுகிறது.
5. காதலர் தினம் என்று ஒன்றும் கொண்டாடப்படுகிறது.

ஆனால், ஆண் மகனின் வாழ்வை வளப்படுத்துவதற்காகத் தன் ஊரை, வீட்டை பெற்றோரை விட்டுவிட்டு வந்து கணவன் வீடு சேருகின்ற மனைவிக்கு-மீதி வாழ்நாளெல்லாம் அந்த ஆணுடைய உயர்வுக்கு தன்னை ஒப்படைத்து கொள்ளும் பெண் நல்லாளுக்கு - ஒரு தினம் ஒதுக்கப்படவில்லையே!




குடும்ப வாழ்வுக்கு மதிப்பு தருகின்றே நம் நாட்டிலும் கூட இல்லையே. கற்பின் மேன்மையைப் போற்றுகின்ற நம் நாட்டில்

கூட இல்லை என்பது ஒரு மேன்மையானயான நிலையா?

இன்று உலகத்தில் எத்தனை கோடி பேர் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பெற்றெடுத்த அன்னையர் ஓர் ஆண்மகனுக்கு மனைவி என்ற முறையில் கடமை ஆற்றுகின்ற சந்தர்ப்பதால் தானே தயானாள்?

அப்படிப்பட்ட மனைவியைப் போற்றுவதற்காக ஒரு தனி நாளாகக் கொண்டாட வேண்டாமா? என்று ஆதங்கப்படுகிறார் மகரிசி.

பெண்மையின் பெருமையை உணர வேண்டும் என்ற மனதோடு ஆராய்ச்சி செய்த போது இந்த ஆண்டு என் மனைவியினுடைய (அருள் அன்னை லோகாம்பாள்) பிறந்த நாள் 30.8.ல் வந்தது.

அன்பர்களிடம் சொன்னேன். என் மனைவியின் பிறந்த நாளையே வைத்துத் தொடங்கி மனைவி நல வேட்பு நாள் கொண்டாடலாம்.

இதையே வைத்துக் கொண்டு, இது முதல் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆவது நாளை மனைவி நல வேட்பு நாளாகக் கொண்டாடுவது நம் சங்கத்தின் வழக்கமாக வரட்டும். பிறகு உலக நாடுகளிலும் பரவட்டும் என்றேன்.

ஆண்களும், பெண்களும் உற்சாகமாக அதை ஏற்றுக் கொண்டு பல இடங்களில் கொண்டாடுகிறார்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையை நன்றியோடு வாழ்த்தி இக்கவியைச் சொல்லி மகிழுங்கள்.

"பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமையறம் ஆற்றப்,
பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க் கொண்டுஎன்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்".

என்கின்றார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

## முதல் மனைவி வேட்பு நாள்.

முதல் மனைவி வேட்பு நாள் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் நாள் கூடுவாஞ்சேரியில் நடைபெற்றது.

அன்னை லோகாம்பாளை அருகில் அமர்த்தி வைத்துக் கொண்டு அருட்தந்தை பேசினார்.

நீங்கள் எல்லோரும் தம்பதிகளாக உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

உலகத்திலே நட்பு மிகமிகச் சிறந்தது. பயனுடையது. அதிலே கணவன் மனைவி நட்பைப் பற்றி சாதாரணமாகச் சொல்ல முடியாது. நீங்கள் என் அருட்தந்தை என்று அழைக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய திருமணத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. ஆனால் இன்று பார்க்கிறேன்



அத்தகைய நட்பு எந்தவிதத்திலும மேலானதாகவும், மேன்மையுறவும், வளர்ச்சி பெறவும், வலுப்பெறவும் இரண்டு பேருடைய வாழ்க்கையும், தூய்மையானதாகவும் மேன்மையுடையதாகவும் இருக்க வேண்டும்.

அப்போது அவர்களின் குழந்தைகள் எவ்வாறு இருக்கும் என நினைத்துப் பாருங்கள்.

இந்த உயர்வான நன்மையைக் கருதி முன் ஏதேனும் பிணக்கு இருந்தாலும் மன்னித்து விடுங்கள். மன்னிக்க முடியாத குற்றமேயில்லை.

எல்லோரும் ஒருவருக்கொருவர் தியாக உணர்வுடன் வாழ்கிறீர்கள். அந்த உணர்வையே நினைவில் வைத்துக் கொண்டு சிறுசிறு குற்றம் குறைகள் இருந்தால் அவைகளை எல்லாம் போக்கிக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ உங்கள் அனைவரையும் இறைநிலையில மனதை நிறுத்தி வாழத்துகிறேன்."

பின்னர், தம்பதியினர் அனைவரும் ஒருவருக் கொருவர் எதிரில் அமர்ந்து கொண்டு தத்தம் வாழ்க்கையில் குடும்ப அமைதியைப் பேண உறுதி பூண்டனர்.

ஒவ்வொரு கணவரும் தம் மனைவிக்கு மலரைக் கொடுத்து 'என்றென்றும் வாழ்நாளில், இந்த மலரைப் போல் வாழ்வில் மென்மையாக நடந்து கொள்வேன்' என்று உறுதி அளித்தனர்.

மனைவியர் தம் கணவருக்கு ஒரு கனியைக் கொடுத்து 'என்றென்றும் வாழ்நாளில், இந்தக் கனியைப் போல் இனிமையாக நடந்து கொள்வேன்' என்று உறுதி அளித்தனர்.

இப்போது உலகெங்கும் ஆகஸ்டு முப்பதாம் தேதி"மனைவிநல வேட்பு விழா" சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.



சிங்கப்புரில் மனைவியருக்கு மரியாதை செலுத்திய கணவர்கள்

இந்த மனைவி வேட்பு நாளில் இக் கவிதையைக் கணவன் கூறி,மலர் போன்ற மென்மையான மனத்தையுடைய மனைவிக்கு மலரினை அளிக்கிறான்.



கொழும்பில் மனைவிநல வேட்பு விழா.

தியாக உள்ளம் படைத்த மனைவி உள்ளப் பூரிப்போடு உவகையோடும் உள்ளக் கனியாகத திகழ்கின்ற கணவனுக்கு ‘கனியைக்’ கொடுக்கிறாள்.

இப்படி இந்த ஒரு நாள் மட்டும் அல்லாமல் என்றென்றும் மனைவியை மதித்து போறற வேண்டும் என்பது தான் அருட் தந்தை அவர்களின் மனைவி நல வேட்பு விழாவின் நோக்கமாகும்.



திருச்சியில் மனைவியருக்கு மரியாதை செலுத்திய கணவர்கள்

இன்ப துன்பத்தில் சரிபாதியை ஏற்றுக்கொள்ளும் மனைவியைப் போற்றிப் பாதுகாத்து வந்தால் வீடு நலம் பெறும்.

பெண்களுடைய முன்னேற்றம் தான் குழந்தைகள் முன்னேற்றம்.பெண்களுடைய முன்னேற்றம் தான் குடும்ப முன்னேற்றம்.பெண்களுடைய முன்னேற்றம் தான் நாட்டு முன்னேற்றம்.

எந்த வீட்டில்,நாட்டில் பெண் மதிக்கப் படுகிறாளோ அந்த நாடும்,வீடும் முன்னேறும் எங்கெல்லாம் பெண் இழிவு படுத்தப் படுகிறாளோ அங்கு முன்னேற்றம் தடை படும்.

உயிரில் கலந்து,உணர்வில் உறைந்து,நினைவில் நிறைந்து,இதயம்புகுந்த உறவே மனைவி.



கணவனும் மனைவியும் உற்று நோக்கும் உன்னத சடங்கு.

அமைதியான சுற்றுச் சூழலில் அமைந்த இல்லம்,இறையருளால் அமைந்த பெற்றோர்கள்,வாழ்நாள் முழுவதும் ஈருடல் ஓர் உயிராக இணைந்த நல்வாழ்க்கைத் துணை, அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மக்கள் செல்வம்,இனிய நட்புடன் கூடிய உறுதியான,உண்மையான் குடும்ப உறுப்பினர்கள், நிறைவான வாழ்க்கை வசதிகள்,சுற்றத்தோடு கூடிய இனிய உறவினர்கள்,சமுதாயத்தில் நன்மதிப்பு இவற்றுடன் இல்லறத்தில் கூடி மகிழ்ந்து,இறைநிலையோடு இணைந்து வாழும் குடும்பமே இனிய குடும்பமாகும்.

இறைவனின் திருஉள்ளம் என்ன - என்ன நினைத்தான் இறைவன்?

படைக்கும் தொழிலையே பெண்களிடம் அல்லவா இறைவன் தந்துள்ளான்.

ஆம் உலகத்தில் மனதிர்குலம் நன்றி செலுத்தக் கடமைபட்டவர்கள் "மூன்று" தரப்பினர். ஒருயிர்த் தாவரங்கள் பெண்கள், உழைப்பாளர்கள்.

இதில் உழைப்பாளிகள், நாம் உண்ணுகின்ற உணவு, உடை. வசிக்கும் வீடு யார் உழைப்பால் உருவானது. நெற்றி வியர்வை நிலத்தில் கொட்டும் உழைப்பாளர்கள் அன்றோ.

"ஒரு உலக ஒற்றுமையைக் பிடி உணவில் கண்டிடு

உழைப்பினால் உலகுக்கு தந்திடு"

என்ற அருட்தந்தை வேதாத்திரி மகரிசியின் கருத்திற்கிணங்க உழைப்பாளர்களுக்கு மனித குலம் மதிப்பைத் தர வேண்டும்.

ஒருயிர்த் தாவரங்கள்.

இந்த உலகில் ஈரறிவு முதல் ஆறறிவு மினதன் வரை உயிர்வாழ

இன்றியாமையாத உணவு பஞ்சபூதத்திடமிருந்து தயாரித்து அளிக்கும் ஓர் அற்புதமான ஜீவன் ஒருயிர்த்த தாவரங்கள்.

உயிர்கள் நிற்க நிழலாகவும், வசிக்க. வீடுகட்ட மரமாகவும் தன் உடலையே தாவரங்கள் அளிக்கின்றன. மனிதன் நன்றி உணர்வோடு அதனை நினைக்க வேண்டும்.

ஓருயிர்த் தாவரத்தில் ஆண் கிடையாது. தாவரங்கள் அனைத்துமே ஊன்றுதன் இனத்தைப் பெருக்கி உயிர்களை வாழ வைக்கும் ”பெண்மயின் தன்மை” என்ற சிறப்பைப் பெற்றது.

ஈரறிவு உயிர்களிலும் தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் தாவரங்களின் ஓத்த பெண்மைத் தன்மைதான் உள்ளது.

மூவறிவிற்கு மேலே பெண்மையின் சுமையைக் குறைக்க இறைவன் எண்ணினான்.

அன்பு காட்டி, கருணை ஊட்ட, பெண்மையையும் அச்சசெயலில் தாய்மைக்கு ஏற்படும் வருத்தத்தைக் குறைக்க உதவ, காக்க ஆணையும் தோற்றுவித்தான்.

உழைப்பதற்கு ஒன்று, உற்பத்திக்கு ஒன்று (DEPARTMENT) உருவாக்கினான்.

ஆழ்ந்து நோக்கிப் பார்த்தால் இறைநிலை பெண்மையை தனக்காகப் படைப்புப் பணியை செய்யும் தனிநிலையிலும் ஆண்களை பெண்களுக்கு உதவும் துணை நிலையிலும் (ASSISTANT) அல்லவா இறைவன் படைத்துள்ளான்.

நான்கு ஐந்து அறிவுகளில் ஆண் இனத்திற்கு புறத்தே மாற்றங்களால் சில சிறப்பான பரிணாம மாற்றங்களை அளித்துள்ளான் இறைவன்.

ஆம்! அம்மாற்றம் எதற்கு? எதிரியிடமிருந்து பெண்மையைக் காக்கத்தான்.

நல்ல பாம்பு -சீறி படமெடுக்க

ஆண்மானுக்கு - கரடு முரடான கொம்பும்

ஆண் யானைக்கு - முரட்டுத் தந்தமும்

ஆண் சிங்கத்திற்கு - சிலிர்க்கும் பிடரியும்

ஆண் மயிலுக்கு நீண்ட தோகையும் வைத்துத்தான் வீரத்தைக் காட்டி பெண்மையைக் காக்க வைத்தான்.




கணவன் மனைவி சிறப்பை உணர்ந்து ஒருவருக்கு ஒருவர் மதித்து வாழ வேண்டும்.

வீட்டின் விரிவே வியனுலகம் ஆதலின் வீட்டறத்தில் வெற்றி காண்- என்பர்.

கணவன் மனைவி உறவை உயிராக மதித்து அன்பை வளர்த்து அறவழியே வாழ்வோம்.

துணைநின்ற நூல்கள்.

1. பாரதியார் பாடல்கள்
2. திருக்குறள்.
3. சித்தர் பாடல்கள்
4. குரான் பொன்மொழிகள்
5. பைபிள் வாசகங்கள்.

6. இண்டர்நெட் தகவல்கள்.

7.அன்பொளி மாத இதழ்கள்

6. ஞானக்களஞ்சியம்
7. அன்பொளி மாத இதழ்கள்

8. தமிழ் நாளிதழ்கள்
9. மனைவி நல வேட்பு நாளில் சேகரித்த விவரங்கள்